
மாலா
ஜூலை-1960
நடனம்
25 காசு



நாளொரு
மேனியாக...
ரெக்ஸோனாவில் அடங்கியுள்ளது
கேடில்; சரும எழிலுக்கான
பற்பல எண்ணெய்கள் இணைந்த
விசேஷத் தைலமாகிய கேடில்,
சருமத்திற்கு ஊட்டமளித்து,
மழமழப்பாகவும், மென்மை
யுடனும் மிளிரச் செய்கிறது!
இணைபிரியாமல் உங்கள் மீது
கமழ்ந்து இளங்காலைப்
புதுமலர்ச்சியுடன் நாள்
முழுதும் விளங்கச் செய்யும்
ரெக்ஸோனாவையே அன்-
றாட அழகுசாதனமாக
உபயோகியுங்கள்!
Rexona
BLENDED WITH CADYL
...ரெக்ஸோனா உங்கள் மேனியெழிலை ஓங்கச்செய்கிறது
ஆஸ்திரேலியாவிலுள்ள ரெக்ஸோனா ப்ரொ. லிமிடெட் சார்பாக
இந்துஸ்தான் லீவர் லிமிடெடினால் இந்தியாவில் தயாரிக்கப்பட்டது.
RP.164-50 TM

# கேச பராமரிப்பு - ஒரு கலை





வயது எப்படியிருப்பினும் வதனத்திற்கு அழகையூட்டும் அம்சங்களில் கவர்ச்சி மிக்க கூந்தலும் ஒன்று.

கூந்தலை சரிவரப் பராமரிப்பதென்பது ஒரு தனிக் கலை. நிறைந்த பயன் பெறவேண்டுமெனின் சிறந்த சாதனமான **கேசவர்த்தினி**யை இன்றே தேர்ந்தெடுங்கள்





KSV-5

நிறைந்த கூந்தல் வளர்ச்சிக்கு நிகரற்றது கேசவர்த்தினி

# கேசவர்த்தினி

ஹேர் ஆயில், ஷாம்பூ, கண் மை

கேசவர்த்தினி பிராடக்ட்ஸ், கிராஸ்கட் ரோடு. கோயமுத்தூர்



நடம்புரியும் பாரதச் சிலம்பொலியோ

# வடிவழகி நீயென்ற வாழ்த்தொலியோ!

ஒலிதனிலே இசைவளர்த்த அழகைப் போலே உடல்தனிலே எழில் வளர்த்த பாரதப் பெண்ணே! பொலிவழகால் புகழ்வளர்த்த பெருமை கொண்டாய்; பொன்னுடலைப் போற்றினையோ, பாரதப் பெண்ணே! நேர்த்தியான மேனியழகு இல்லையேல், பூர்த்திபெற்ற அழகில்லை என்பதை உணர்ந்துள்ள சினிமா நட்சத்திரமாகிய ராகினி கூறுகிறார்: 'அதனால்தான், மென்மைகுலவும் லக்ஸ் சோப்பின்மீது எனக்கு நம்பிக்கை. மணங்கமழும் அதன் நுரை எனது மேனியை மிளிரச் செய்கிறது.'

சினிமா நட்சத்திரங்களின்

**LUX**
TOILET SOAP

தூய, மென்மைகுலவும் அழகுசாதன சோப்

LTS. 54-X29 TM

இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு

தந்தி : நாட்டியமாலா போன் : 71669

# மாலா

தமிழ இலக்கிய மாதப் பத்திரிகை

போஷகர்:

**வைஜயந்திமாலா**

நிர்வாக ஆசிரியர் :

எம். டி. ராமன்

ஆசிரியர் :

எஸ். எஸ். சர்மா

துணை ஆசிரியர் : த ரா. ரா.

★

**தனிப் பிரதி 25 காசுகள்**

**(அணா 4)**

**வருட சந்தா ரூ. 3/-**

பிரதி மாதம் 10ம் தேதி மாலா எங்கும் விற்பனைக்குக்கிடைக்கும்

பர்மா, மலேயா நாடுகளுக்கு மட்டும்

**தனிப் பிரதி அணா 6**

அந்தந்த ஊர் ஏஜண்டுகளிடம் மாலாவை மாதந்தோறும் வாசகர்கள் பெற்றுக்கொள்ளலாம்.

எல்லா "ஹிக்கின்பாதம்ஸ்" "சுதேசமித்திரன்" ரயில்வே புஸ்தக ஸ்டால்களில் எமது மாலா விற்பனைக்கு எப்பொழுதும் கிடைக்கும்.

★

தபால் மூலம் மாலாவை வரவழைத்துக் கொள்ள கீழ்க் கண்ட விலாசத்திற்கு எழுதவும்

விபரம் : **மாலா**

சதர்ன் அவின்யூ,

ஆழ்வார்பேட்டை,

தபால் பெட்டி நெ. 1452

மதருஸ்–18.

# மாலா

மாலா 10 | ஜுலை 1960 | மலர் 4

## பொருளடக்கம்

★

உகந்தவை செய்க —தலையங்கம்

கட்டுரை

திருக்கோடிகாவல் கிருஷ்ணையர் —எல்லார்வி

கதைகள் ;

சந்திரா அசடல்ல—கார்த்திகேயன்

மர்மம் விளங்கியது—டி. எஸ். கே.

என் மகள் —பரமன்

பண்பு தந்த பரிசு — நாதப்ரியை

காதலும் கிளி வேட்டையும் —குபேரன்

தொடர் கதை

திருவிளக்கு --விக்கிரமன்


ஜோதிடப் பகுதி :

ராசிபலன், கேள்வி பதில் —கணபதி ஜோஸ்யர்

கலை அரங்கம்

மற்றும் இதர அம்சங்கள்,

குறிப்பு—மாலாவில் வரும் பெயர்கள், நிகழ்ச்சிகள் அனைத்தும் கற்பனையே.




போஷகர் : வைஜயந்திமாலா

மாலா 10 | ஜூலை 1960 | மலர் 4

202035

# உகந்தவை செய்க

சமீப காலங்களில் வேலை நிறுத்தங்களும், கதவடைப்புகளும் சர்வ சகஜமாகி வருவதைக் காண்கிறோம். தொழிற்சாலைகள், வியாபார ஸ்தலங்கள் விஷயத்தில் மட்டும் வேலை நிறுத்தங்கள், ஆர்ப்பாட்டங்கள் என்பதில்லை. அரசாங்க ஊழியர்களும் அதிலும் போக்கு வரத்து, போன்ற மிக அவசியமான துறைகளில் உள்ளவர்களும் வேலை நிறுத்தங்களில் ஈடுபட முனைகிறார்கள். தொழிலாளிகள், ஊழியர்கள் முறைகளைப்பற்றிக் குறை கூற நாம் விரும்பவில்லை. ஆனால் சமீப வருடங்களில் தினசரி செய்தியாகிவிட்ட வேலை நிறுத்தங்கள் போராட்டங்களை நோக்கும் போது எவ்விதம் இப்படி தொடர்ந்து தொத்து நோய் போல் யாவருக்கும் குறைகள் தோன்றி இவ்விதம் நடக்கிறது என்று புரிந்து கொள்ள இயலவில்லை. தொழிலாளர்களும், அரசாங்க ஊழியர்களும், அவர்களது தொழிற் சங்கங்களும் அவர்கள் இஷ்டப்படி, அவர்கள் சிந்தனைகளுக்கு இடம் ஏற்படும்படி விடப்பட்டால் இவ்வித வேலை நிறுத்தங்கள், போராட்டங்கள் ஒரு போதும் இந்த அளவில் இராது என்றே படுகிறது. தேச முன்னேற்ற முயற்சி காலத்தில் ஒரு குறிப்பிட்ட காலவரையறை ஏற்படுத்தி அதற்குள் இவ்விதம் போராட்டங்கள் இல்லாமலிருக்க தொழிலாளிகளும் முதலாளிகளும் ஒரு தற்காலிக சமாதானம் 'truce' செய்துகொள்வது ஒரு சிறந்த யோசனை என்றே கருதுகிறோம். கடைசியாக, ஆனால் முக்கியமாக போராட்டங்களில் ஈடுபடுவர்கள் பொதுமக்கள் என்று ஒரு அம்சம் சமுதாய அமைப்பில் உள்ளது, அதற்கு மதிப்புக்கொடுக்க வேண்டும். அதன் நலனும் காப்பாற்றப்பட வேண்டும் என்று எண்ண வேண்டும். போராட்டத்தில் இறங்கும்போது மட்டும் பொதுஜன ஞாபகம் கொள்வது என்று நடப்பது சரியல்ல.

# காவேரி!

தமிழழகன்

★

(வண்ணம்)

தளம் யாவையும் வளமாக்கிடத்
　　தவழ்ந்தே வரும் காவேரி!
குளம் யாவிலும் புனலூற்றிடக்
　　குதித்தோடிடும் காவேரி!

களமேடைகள் அள ஓடைகள்
　　கால்வாய்புகும் காவேரி!
வளம்யாவுமுன் செயலால்வரும்
　　வனப்பல்லவோ, காவேரி!

பூங்காவனம் நீங்காமலும்
　　புகுந்தேபயில் காவேரி!
ரீங்கார தென் பாங்காம் இசை
　　ஓங்காரம்செய் காவேரி!

கயல்மீன்களும் வயல்மேவிடக்
　　கரைமீறிடும் காவேரி!
பயிர்தானினி உயிர்பெற்றது
　　பசிபோனது காவேரி!

மலையோடுபன் னெடுங்கானையும்
　　வலமேவரும் காவேரி!
தொலையாதளம் கலைவாழ்வில்மெய்த்
　　துணை நீயன்றோ. காவேர்!

திரைகூடவெண் ணுரையாடிடத்
　　தெளிந்தோடிடும் காவேரி!
கரைமீதுனைக் கரம் கூப்பிஎம்
　　கடனாற்றினோம், காவேரி!

★

m211,N51M
N60.10.4-5

# செய்திச் சுருள்

### பத்து வருஷ முன்னேற்றம் தொழில் துறையில் அபிவிருத்தி

### உற்பத்தி பெருகியது; தேசீய வருமானம் அதிகரித்தது.

இந்தியாவின் திட்டமிட்ட அபிவிருத்தியின் பொருளாதார, சமூக லட்சியங்களைப் பூர்த்தி செய்து வைப்பதில் முதலாவது கட்டத்தை, முதலாவது, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டங்கள் குறிப்பிடுகின்றன.

இந்தப் பத்து வருஷ காலத்தில் தேசிய வருமானத்திலும், விவசாய உற்பத்தியிலும். தொழில்துறை உற்பத்தியிலும், இந்தியாவின் மனித வள ஆதார அபிவிருத்தியிலும் ஒரு சீரான ஏறுமுகப் போக்கே இருந்துவந்திருக்கிறது. பரிசீலனைக் காலத்தில் தேசியப் பொருளாதார வளர்ச்சி வேகம் துரிதமடைந்திருக்கிறது. வேலை வாய்ப்புக்களைப் பெருக்குவதிலும், வருமானத்திலும் செல்வத்திலும் உள்ள ஏற்றத் தாழ்வுகளைக் குறைப்பதிலும், பொருளாதார சக்தி ஒரே இடத்தில் குவிந்துவிடாமல் தடுப்பதிலும் முக்கிய கவனம் செலுத்தப்பட்டு வந்திருக்கிறது.

### மொத்தச் சிலவும் முதலீடும்

முதல் இரண்டு திட்டங்களிலும் மொத்தம் 10,000 கோடி ரூபாய்க்கு மேல் முதலீடு செய்யப்பட்டிருக்கும். அத்தொகையில், பொதுத் துறையில் முதலீடு செய்யப்பட்டது சுமார் 6,560 கோடி ரூபாய் ஆகும்.

### தேசீய வருமானத்தில் அதிகரிப்பு

முதலாவது திட்ட காலத்தில், பெரும்பாலும் விவசாயத்துறை உற்பத்தியில் ஏற்பட்ட முன்னேற்றம் காரணமாக, தேசிய வருமானம் 18 சதவிகிதம் அதிகரித்தது. இரண்டாவது திட்ட காலத்தில் இன்னும் அதிக விரிவான முறையில் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வந்திருக்கிறது. எனவே, இரண்டாவது திட்ட காலத்தில் தேசிய வருமானத்தில் சுமார் 20 சதவிகிதம் அதிகரிப்பு ஏற்படும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. எனவே, 1951—61 பத்து வருஷ காலத்தில் தேசிய வருமானம் சுமார் 42 சதவிகிதமும், நபர் விகித வருமானம் சுமார் 20 சதவிகிதமும், நபர் விகிதச் செலவு சுமார் 16 சதவிகிதமும் அதிகரித்திருக்கும். விவசாயத் துறை உற்பத்தி 40 சதவிகிதமும். தொழில் துறை உற்பத்தி 120 சதவிகிதமும் உயர்ந்திருக்கும்.

1949—50-ம் வருஷத்தில் விவசாயத்துறை உற்பத்தியில் ஏற்பட்டு வந்துள்ள முன்னேற்றம் பற்றிய விளக்கம் சுருக்கமாகக் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

### 1956—1957 வரை புள்ளி விவரங்களில் ஏற்பட்ட மாறுதல்களை யொட்டித் திருத்தப்பட்ட உற்பத்தி மதிப்பீடு.

சமுதாய நல அபிவிருத்தி இயக்கத்தில் இணைப்பானதொரு பகுதியாக நாடெங்கிலும் விஸ்தரிப்பு சேர்விசுகளை அமுலுக்குக்கொண்டு வந்தது முதலாவது ஐந்தாண்டு திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட மிகவும் முக்கியமான முடிவாகும். 1963 அக்டோபருக்குள் இந் நாட்டிலுள்ள கிராமப் பிரதேசங்கள் எல்லாவற்றிற்கும் இத் திட்டம் வியாபித்து விடும். இரண்டாவது திட்டக் கடைசியில் தொகுதி, கிராம மட்டங்களில் உள்ள விஸ்தரிப்பு ஸ்தாபனத்தில் சுமார் 31,000

கிராம ஊழியர்கள்; இருப்பார்கள் தொகுதி மட்டத்தில விவ்சாய கால் நடைப் பாரமரிப்பு, இதர அபி விருத்தித் துறைகள் ஆகியவற்றிற் காக சுமார் 28,000 விஸ்தரிப்பு அதிகாரிகள் இருப்பார்கள்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் கடைசிக்குள். ரயில்வேக்களுக்குத் தேவையான சாதனங்களில் பெரும் பகுதி உள் நாட்டு உற்பத்தியிலிருந்தே கிடைக்கும்.

கன ரக மின்சார சாதனங்களின் உற்பத்தி இப்போது ஆரம்பமாகி இருக்கிறது கன ரக ரசாயனப் பொருள்கள். மருந்துகள், மருந்துச் சரக்குகள், ரசாயன உரங்கள் முதலியவை உட்பட ரசாயனத் தொழில்களும் நன்கு முன்னேற்ற மடைந்துள்ளன. இரண்டாவது திட்ட காலத்தில், சணல், பருத்தி ஜவுளி ஆலேகளை நவீன மயமாக்குவதற்கான திட்டங்கள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. பல தொழில்களின் இறக்குமதிப் பொருள்களின் அளவு பெரிதும் குறைந்திருக்கிறது.

அனேக புதிய பொருள்களின் உற்பத்தி முதல தடவையாக இந் நாட்டில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. தொழில் துறை உபயோக பாய்லர்கள், அறைவை யந்திரங்கள், பிற வகை யந்திரக் கருவிகள் தொழில் துறை. உபயோக வெடி மருந்துகள். சலபா மருந்துகள், டி. டி. ட்டி.. பத்திரிகைத்தாள் ஆகியவை இவற்றில் குறிபபிடத்தக்கவையாகும்.

பரிசீலனைக் காலத்தில் கிராமத் தொழில்களும் சிறு தொழில்களும் கூட கணிசமாக அபிவிருத்தியடைந்துள்ளன. 1650-51-ம் வருஷத்துக்கும் இடையே கைத்தறித் துணி உற்பத்தி 70 லட்சம் கஜத்திலிருந்து 212.5 கோடி கஜத்துக்கும். கச்சாப் பட்டு உற்பத்தி சுமார் 20 லட்சம் பவுண்டிலிருந்து சுமார் 37 லட்சம் பவுண்டுக்கும் அதிகரித்திருக்கும் கட்டட வேலை இரும்பு சாமான்கள் கை வேலைக் கருவிகள். தையல் யந்திரங்கள். மின்சார விசிறிகள் சைகிள்கள் ஆகியவை போன்ற அனேக சிறு தொழில்களும் உற்பத்தி கணிசமாக அதிகரித்திருக்கிறது. சிறு தொழில் சேவை நிலையங்கள் எல்லா ராஜ்யங்களிலும் ஏற்படுத்தப் பட்டுள்ளன. இவைகளோடு கூட, 42 விஸ்தரிப்பு நிலையங்களும் ஏற்படுத்தப் பட்டுள்ளன இரண்டாவது திட்டக் கடைசியில். மொத்தம் 700 சிறிய தொழிற்சாலைகள் அடங்கியுள்ளசுமார் 60 தொழில் பேட்டைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கும்.

## மின்சாரம்

மொத்த மின்சார உற்பத்தியும் 1950 51-ல் 23 லட்சம் கிலோ வாட்டாக இருந்தது 1960-60 கடைசியில் 58 லட்சம் கிலோ வாட்டாக அதிகரிக்கும். மின்சார வசதி பெற்ற நகரங்கள், கிராமங்கள் ஆகிய வற்றின் மொத்த எண்ணிக்கை 1950-51-ல் 3,687 ஆக இருந்தது 1960-61-ல் 19,000 ஆக அதிகரிக்கும்.

## போக்கு வரத்து

யுத்தத்தினுலும் நாட்டுப்பிரிவினையினுலும் பெரிதும் பாதிக்கப்பட்ட ரயில்வேக்களைச் சீரமைப்பதே முதலாவது திட்டத்தில் பிரதான நோக்கமாக இருந்தது. இரண்டாவது திட்ட காலத்தில் உருக்கு, நிலக்கரி. சிமிட்டி ஆகியவை போன்ற அடிப்படைத் தொழில்களை உருவாக்குவதற்கான விரிவான அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன. 1960-61 வாக்கில் சுமார் 1200 மைல் நீளத்துக்குப் புதிய பாதைகள் அமைக்கப்படக் கூடும். 1300 மைல் நீளமுள்ள ரயில் பாதைகள் இரட்டைத் தட மார்க்கங்களாக மாற்றியமைக்கப்படும்; 880 மைல் நீளத்திற்கு ரயில் பாதை மின்சார மயமாக்கப்படும். ரயில் வேக்கள் மூலம் நடைபெறும் சரக்குப் போக்கு வரத்தில் மொத்த அளவு சுமார் 80 சதவிகிதம் அதிகரிக்கும்: அதாவது 1950-51-ல்

910 லட்சம் டன்னுக இருந்தது இரண்டாவது திட்டக் கடைசியில் 1620 லட்சம் டன்னுக்கு அதிகரிக்கும். ரயில் எஞ்சின்களின் எண்ணிக்கை இரண்டாவது திட்ட ஆரம்பத்தில் 8,200 ஆக இருந்தது. இரண்டாவது திட்டக் கடைசியில் 10 600 ஆக அதிகரிக்கும்; ரயில் பெட்டிகளில் எண்ணிக்கை 19,200-லிருந்து 28,900 ஆகவும் வாகன்களின் எண்ணிக்கை 19,99,100, விருந்து 8,54,100 ஆகவும் அதிகரிக்கும்.

உறுதிப் படுத்தப்பட்ட ரஸ்தாக்களின் நீளம் 1950-51 ல் 97.500 மைலாக இருந்தது. 1960-61-ல் 1,44,000 மைலாக அதிகரிக்கும். கப்பல் எடை 3,90,000 ஜி. ஆர். டி: யிலிருந்து 9.00,000 ஜி. ஆர்.டி. ஆக அதிகரிக்கும்.

## சமூக சேவைகள்

பரிசீலனை காலத்தில் கல்வி, சுகாதாரம், சமூக க்ஷேமநலம் ஆகிவற்றிற்கான வசதிகள் கணிசமாக அதிகரித்துள்ளன. பள்ளிக்கூடம் செல்லும் 6—11 வயதுத் தொகுதியைச் சேர்ந்த குழந்தைகளின் விகிதாசாரம், 1950-51-ல் 43 சதவிகிதமாக இருந்தது 1960 61-ல் 60 சதவிகிதமாக அதிகரிக்கும். பள்ளிக்கூடங்களில் வாசிக்கும் மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 75 சதவிகிதமும், சர்வ கலாசாலைகளில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை 140 சதவிகிதமும் அதிகரிக்கும்.

சுகாதாரத் துறையில், ஆஸ்பத்திரிகள், டிஸ்பென்ஸரிகள் ஆகியவைகளின் எண்ணிக்கை 1950-51-ல் 8,600 ஆக இருந்தது 1960-61ல் 12.600 ஆக அதிகரிக்கும். வைத்தியக்கல்லூரிகளில் எண்ணிக்கை 30விருந்து 55 ஆகவும், பதிவு செய்யப்பட்ட டாக்டர்களின் எணணிக்கை 59,000-விருந்து 55 ஆகவும், பதிவு செய்யப்பட்ட டாக்டர்களின் எண்ணிக்கை 59.000-விருந்து 84.000 ஆகவும் அதிகரிக்கும். முதலாவது திட்ட காலத்தில் ஆரமபித்து வைக்கப் பட்ட குடும்பக் கட்டுப்பாடுத் திட்டம் படிப்படியாக நன்கு முன்னேற்றமடைந்திருக்கிறது: குடும்பக் கட்டுப்பாடுத் திட்ட நிலையங்களின் எண்ணிக்கை 1955-56-ல் 147 ஆக இருந்தது 1960-60ல் சுமார் 1800 ஆக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

## தொழில் நுட்பக் கல்வியும் விஞ்ஞான ஆராய்ச்சியும்

தொழில் நுட்பக் கல்விக்கான வசதிக்கும் கணிசமான விஸ்தரிக்கப்பட்டுள்ளன. எஞ்சினியரிங், தொழில் நுட்பப் பட்டப் படிப்புகளுக்கும் ஆண்டு தோறும் சேர்த்துக் கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கை சுமார் நான்கு மடங்காக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது; அதாவது 1950—51-ல் 10,000 மாணவர்களே சேர்க்கப்பட்டிருந்தவர்; கடைசியில் இந்த எண்ணிக்கை 37,500 ஆக அதிகரித்து விடும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. விவசாய, கால் நடை வைத்தியக் கல்லூரிகளில் ஆண்டு தோறும் சேர்த்துக் கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கை 1950-51ல் 1,500 ஆக இருந்தது, 1960-61-ல் 5.800 ஆக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

## விலை வாசியும் வேலையளிப்பும்

முதலாவது திட்டத்தின் முதல் நான்கு வருஷங்களிலும் உணவுத் தானியங்கள். விவசாய மூலப் பொருள்கள், அனேக தொழில் துறைச் சரக்குகள் ஆகியவற்றில் விலைகள் பல்வேறு அளவுகளில் உயர்ந்து வந்தன. மொத்த விலைகள் குறியீட்டெண் 1952—53—100) முதல் திட்டத்தில் கடைசி வருஷத்தில் 99.2 ஆக இருந்தது; அதற்கடுத்த இரண்டு வருஷங்களில் 105.1 ஆகவும், 108.1 ஆகவும் அதிகரித்தது. அதற்குப் பிறகு 1958—59-ல் அது 111.7 ஆக உயர்ந்தது அந்த வருஷத்தில் எட்டிய உச்ச அளவு 116.3 ஆகும் 1959-60 கடைசியில் 118.6 ஆக இருந்தது.

## மகாவித்துவான்

# திருக்கோடிகாவல் கிருஷ்ணையர்

எல்லார்வி

"இருட்டி விட்டதே!" என்றேன் மெதுவாக.

"அதனால் என்ன ஸார்? இருட்டினால் என்ன? இது என்ன, காடா, செடியா? கவலைப்படாதீர்கள். பேசாமல் இருங்கள். துணைக்கு ஆள் அனுப்பி உங்களை ரெயிலேற்றி விடச் செய்கிறேன். அவ்வளவு தானே உங்களுக்கு வேண்டியது?" என்று கேட்டு என் வாயை அடக்கி விட்டார் ஸ்ரீநிவாசையர்.

நான் பொறியில் சிக்கிய எலியைப்போல் இருந்தேன். இவ்வளவில் அவர் தம் தகப்பனாரைப்பற்றி ஏதாவது சொல்லியிருந்தால், அல்லது சொல்லுவார் என்கிற நம்பிக்கையாவது இருந்தால் மற்றநினைவுகள், கவலைகள் மனத்தைப் பாதிக்கா. அவர் தாம் அந்த வழிக்கே வரவில்லையே !

இடையே ஒரு முறை அதைப் பற்றிக் குறிப்பாக நான் பேசினேன். அதற்கு அவர், "நீங்கள் புத்தகம் எழுதுவது இருக்கட்டும்; முதலில் இதற்குப் பதில் சொல்லுங்கள்" என்று, தொடர்பு சிறிதும் இல்லாத ஏதோ ஒரு கேள்வியைக் கேட்டார். 'இப்படிப்பட்டவரிடமிருந்து நாம் நாடிவந்த காரியத்திற்கு என்ன ஆதரவு கிடைக்கப் போகிறது!' என்ற ஆயாச உணர்ச்சி என் உள்ளத்திலே மேலோங்கி நின்றது.

அந்த இளைஞர் அப்போதும் அங்கேதான் நின்று கொண்டிருந்தார். ஸ்ரீநிவாசையர் அவரை நோக்கி, "கைகால் கழுவத் தண்ணீர் கொண்டு வா. அநுஷ்டானத்திற்கு ஜலம், விபூதி எல்லாம் கொண்டு வா" என்றார். இளைஞர் உள்ளே சென்றார்.

பெரியவர் மீண்டும் பேசினார் என்ன என்னவோ சொன்னார். எனக்கு ஒன்றுமே புரியவில்லை.

இளைஞர் செம்பிலே தண்ணீரும், கூஜாவிலே நல்ல ஜலமும், விபூதியும் கொணர்ந்தார். பெரியவரும் நானும் அநுஷ்டானத்திலே ஈடுபட்டோம்.

'இவர் பெரிய மேதையின் புதல்வர். இருந்தும் ஏன் இப்படி நடந்து கொள்கிறார்?' என்று என் மனம் எண்ணமிட்டது. 'இவருடைய அடிமனத்திலே ஏதோ புதைந்து கிடக்கிறது. அதுதான் இந்நிலைக்குக் காரணம்' என்று எண்ணிக் கொண்டேன்.

இந்தச் சிந்தனை ஓட்டத்தையும் அவர் நீடிக்கவிடவில்லை. ஜபம் செய்துகொண்டேஇருந்தவர் இடையிலே அதை நிறுத்திக்கொண்டு ஏதோ சில மந்திரங்களைப் பற்றிப் பேசலானார்; மிகவும் விரிவாகப் பேசினார். அநுஷ்டானம் முடிந்ததும் இளைஞரோடு என்னை வீட்டினுள் அனுப்பினார். அவர் ஜபம் செய்துகொண்டு திண்ணையிலேயே இருந்தார்.

இளைஞரும் நானும் உண்ண உட்கார்ந்தோம். பெரிய இலைகள் உணவு வகைகளும் மிக உயர்தரம்; உபசரணையும் மிக மிகச் சிறப்புடையது. பாலைவனத்திலே பெரு மழை பெய்தாற்போல் இருந்தது எனக்கு. பிரமையினால் தலை சுற்றுகிற சுழலைப் பிரிந்து அன்பு உபசரணையினால் மகிழும் நிலை ஏற்பட்டது

இளைஞர் ஸ்ரீநிவாசையரின் புதல்வர்; மகான் திருக்கோடிகாவல் கிருஷ்ணையர் அவர்களின் பெயரர் என்பதையும், கிண்டியில் பொறியியற் கல்லூரியில் பயின்று வருபவர் என்பதையும் மற்றும் சில விவரங்களையும் அறிந்தேன்.

இளைஞர் மிக அடக்கமாகச் சில வார்த்தைகள் சொன்னார். "எங்கள் தகப்பனார் மிகவும் நல்லவர். அறிவில் சிறந்தவர். விதரணையாகக் குடும்பம் நடத்துவதில் தேர்ந்தவர். தாத்தாவைப் பற்றி அவர் விவரமாகச் சொல்ல முன் வந்தால் நீங்கள் எழுதும் புத்தகம் அளவிலே மிகப் பெரியதாக, மிக மிகச் சிறந்த நூலாகவே அமையும். ஆனால் அப்படியெல்லாம் விவரங்களை எடுத்துச்சொல்லும் நிலையில் அவர் இல்லை. காரணம் அவர் மனத்திலே அடைந்து கிடக்கிற பல்வேறு விதமான வியாகூலங்கள்தான். ஆகவே நீங்கள் அவரிடம் எதையும் எதிர்பார்ப்பதில் பயன் இல்லை. ஆயாசப் படுவதும் வீண். சென்னையிலே என் தமையனார் இருக்கிறார். மற்றும் பலர் இருக்கிறார்கள். அவர்களைச் சந்தியுங்கள். உங்கள் எண்ணம் நிறைவேறும்!

இந்தக் கனிகரமான பேச்சு என் அயர்வை எல்லாம்போக்கிவிட்டது. உணவுக்குப்பின் தாம்பூலம் தரித்துக்கொண்டு கிளம்பினேன். பெரியவர் விடை அளித்தார். சொன்னபடி, துணைக்கு ஆள் அளிக்கவில்லை. 'அதனால் பரவாயில்லை. எப்படியாவது போய்ச் சேர்ந்துவிடலாம்' என்று புறப்பட்டேன்.

வீதியில் இறங்குகிறபோது ஸ்ரீநிவாசையர் உயர்ந்த குரலில், "நான் சொன்னதெல்லாம் நினைவிருக்கட்டும் சார். பட்டணம் போனதும் எல்லாவற்றையும் விசாரித்து லெட்டர் போடுங்கள்'' என்றார்.

''ஆகட்டும் ஆகட்டும்'' என்று நடையைக் கட்டினேன். பட்டணத்திலே எங்கே யாரிடம் என்ன விசாரிப்பது? எனக்கு ஏதாவது புரிந்தால் தானே?

எங்கும் ஒரே இருள் மயம். வீடுகளில் அங்கும் இங்குமாக முணுக் முணுக்கென்று எரிந்து கொண்டிருந்த விளக்குகளின் ஒளி தெருவை ஓரளவு புரிய வைத்தது. அப்படியும் கற்களிலும் சிறுகுவியல்களான மண், குப்பை முதலியவைகளிலும் இடித்துக்கொண்டு தடுமாறினேன். பொட்டுப் பொட்டென்று ஒரு சில தூறல்கள் மேலே விழுந்தன. மெதுவாகத் தெருக்கோடியை அடைந்தேன். விளக்கொளி அதற்குமேல் உதவவில்லை. 'எங்கே திரும்புவது, எப்படிப் போவது?' என்று திக்குத்திசை புரியாமல் நின்று திக்குமுக்காடினேன்.

தாரகைகளின் மங்கலான ஒளியில் ஒரு வழி புலப்பட்டது. சிறிய சாலைபோல இருந்த அதில் மெல்ல நடந்தேன். சிறிது தூரம் சென்றபோது அதே வழியில் எதிர்ப்புறத்திலிருந்து நாலைந்து ஆட்கள் பெருங்குரலில் பேசிக்கொண்டும் தெம்மாங்கு பாடிக்கொண்டும் இடையிடையே கோடையிடிபோல் சிரித்துக் கொண்டும் வருவதை உணர்ந்தேன். என் மனம் அடிநாளைய நிகழ்ச்சிகளுக்குத் தாவிற்று.

மதுவிலக்கு அமலுக்கு வருமுன் பாட்டாளிகள் அங்கங்கே சாலைப் புறங்களில் உள்ள கள்ளுக்கடைகளில் குடித்துவிட்டு ஆடிப்பாடிப் பிதற்றிக்கொண்டே சாலைகளில் கைகோத்துக்கொண்டு செல்வார்கள். பெண்களும் சிறுவர் சிறுமியரும் அஞ்சக்கூடியநிலை அது. ஏன், பெரியவர்கள்கூட உள்ளுக்குள் அச்சத்தைப் புதைத்துக்கொண்டு மேலுக்குத் தைரியம் உள்ளவர்கள் போல் நடந்துகொள்ளும் நிலை தான். பைத்தியமும் குடியரும் எப்படி நடந்துகொள்வர் என்பதை எவ்வாறு திட்டமாக எதிர்பார்க்க முடியும்?

என் மனத்திலும் பொருளற்ற அச்சம் முளைத்தது. கடிகாரம், மோதிரங்கள், பேனா, அங்கவஸ்திரம் முதலிய உடைமைகளோடு, கைவசம் உள்ள கையெழுத்துப் பிரதிகள், குறிப்புகள் இவற்றுக்கு ஆபத்து வந்து விட்டால் என்ன செய்வது? குறுக்கு வழியிலே நடந்தேன்; ஆற்றிலே இறங்கினேன். கரையேறி அங்கே எதிர்ப்பட்ட ஒருவரிடம் பேசியபோதுதான் நான்

கடந்து வந்த இடம் இடுகாடு என்பதை அறிந்தேன். எப்படியோ ஒரு வழியாக நெடுஞ்சாலையை அடைந்தேன். நெடுநேரம் காத்திருந்த பின் பஸ் வந்தது. அதில் ஏறி மாயூரத்தை அடைந்தேன். 'இந்தப் பிறவியில் இம்மாதிரி அநுபவம் இன்னொருமுறை வேண்டாம்' என்று ஆண்டவனை வேண்டிக் கொண்டேன்.

சென்னையை அடைந்த பிறகும் இந்த முயற்சியை--மகாவித்துவான் திருக்கோடிகாவல் கிருஷ்ணையர் அவர்களின் வரலாற்றினை அறியும் முயற்சியை தொடர்ந்தேன்.

ராஜ்ய சேவா விரத், சங்கீத கலாநிதி செம்மங்குடி ஸ்ரீநிவாசையர் அவர்கள் கிருஷ்ணையர் அவர்களின் சகோதரி புதல்வர், அவரை அணுகினேன்.

அவர் சில செய்திகளைச் சொன்னார். பிறகு, 'பெரியவர் காலமாகும் போது எனக்கு ஐந்து பிராயம். அவரைப்பற்றி அறிந்துகொள்ள எனக்கு வாய்ப்பு ஏது? கேள்வி மூலம் நான் அறிந்ததை மட்டுமே சொல்லக்கூடும். அவரோடு நெருங்கிப் பழகின கலைஞர்களும் ரசிகர்களும் சிலர் இருக்கிறார்கள். அவர்களைப் பாருங்கள்' என்று கூறி அவர்கள் பெயர்களையும் குறிப்பிட்டார்.

கிருஷ்ணையர் அவர்களின் மூத்த புதல்வர் ராமையர். அவருடைய குமாரர் சுப்பிரமணிய ஐயர். அவர் சென்னையில் வசிக்கிறார். அவரிடம் பரிசயங்கொண்டேன். தமக்குத் தெரிந்தவற்றைக் கூறினார். 'என் அத்தைமார் இருவர்—(கிருஷ்ணையரின் புதல்வியர்) இருக்கிறார்கள். அவர்களிடம் உங்களைக் கூட்டிச் செல்கிறேன். குடும்ப விஷயங்களை அவர்கள் சொல்வார்கள்' என்றார். அதன்படி, பொறுப்பை மேற்கொண்டு என்னோடு ஒத்துழைத்தார்.

குடும்பத்தினர், உறவினர், கலைஞர்கள், ரசிகர்கள், நண்பர்கள், பிரமுகர்கள் இப்படிப் பலரைக் கண்டு அவர்கள் கூறிய செய்திகளையும் கேட்டுத் தொகுத்து இந்த வரலாற்றை எழுதுகிறேன்.

★

கலைப்பணி பலவிதம். அந்த முறையில் மாலா செய்து வரும் தொண்டு சரித்திரத்தில் இடம் பெறத்தக்கது. சுவையான நாவல்களை மட்டுமே தொடராக வெளியிடுவதுதான் பொதுவாக எல்லாப் பத்திரிகைகளும் கையாளுகிற முறை. அதற்குமாறாக இசைக் கலைஞர்களின் வாழ்க்கை வரலாறுகளை அடுத்தடுத்து வெளியிடும் நற்பணியை மாலா மேற்கொண்டிருப்பதற்கு அதன் போஷகர் வைஜயந்திமாலா, நிர்வாக ஆசிரியர் ஸ்ரீ எம். டி. ராமன் இவர்களின் கலை ஆர்வமே காரணம் ஆகும். அவர்களுக்கு என் உளம் நிறைந்த நன்றி.

★

# இசைத்துறை—அன்றும் இன்றும்

## இசைக் கருவிகள்

கர்நாடக இசைக் கலையில் வீணை, வேணு, மிருதங்கம் முதலிய கருவிகள் வேத காலத்திலிருந்தே இருந்து வருவன ஆகும். பிற்காலத்தில் தோன்றி, சுஸ்வரமாக ஒலித்து நம்மிடையே பலவித உணர்ச்சிகளை உண்டு பண்ணி வருபவை சில. நாகஸ்வரம் போன்ற வாத்தியங்கள் ஆலயங்களிலே முக்கிய இடம் பெற்றுவிட்டவங்களிலும் மங்கள கீதமாக முழங்கி வருபவை. இத்தகைய வாத்தியங்களில் சிலவற்றைத் தேர்ந்தெடுத்து 'அஷ்டாதச வாத்தியங்கள்' என்று சிறப்பித்துக் கூறுவது உண்டு.

புராதனமான இந்த வாத்தியங்களின் வரிசையிலே சேராத ஒன்று வயலின். அதை மேநாடுகளிலே பலகாலமாகக்கையாண்டு வந்திருக்கிறார்கள். ஏறக்குறைய இரு நூற்றுண்டுகளுக்கு முன்னர் அந்த வாத்

பரவிய பின்னரும் அது கர்நாடக இசைக்கு உகந்ததாகப் புழக்கத்தில் வரவில்லை. அத்தகைய கருவி இன்று நம் நாட்டிலே எத்தகைய முக்கியத்துவத்தைப் பெற்றுவிட்டது என்று எண்ணுகிறபோது நம்மால் வியப்புறுமல் இருக்க முடியவில்லை.

## கச்சேரி முறை

வாய்ப்பாட்டுத் துறையிலே கச்சேரி முறை என்ற ஒன்று சுமார் ஒன்றரை நூற்ருண்டுக்கு முன்புதான் அமைந்ததுஎன்று பெரியோர்கள் சொல்வார்கள். அதற்கு முன்பு இசையைக் கேவலம் பக்தி மார்க்கத்துக்கு மட்டுமே பயன்படுத்தி வந்தார்கள். சாகித்தியத்திற்குமுக்கியத்துவம் இருந்ததில்லை. ராக சஞ்சாரங்கள், கனமார்க்கம், நயமார்க்கம், சிறப்பாகத் தானம் பாடுவது, பின்னர் ஸ்வரப்பிரஸ்தாரங்கள்—இப்படி மனோதர்மத்திற்கு மட்டுமே பிராதான்யம் இருந்து வந்தது. பஜனை மடம், ஆலயம், பிறகு அரசவை ஆகிய இடங்களிலே மட்டுமே இசைமுழக்கம் உண்டு; பின்னர் வைபவங்களிலும் இசை இடம் பெற்றது.

## சாகித்தியங்கள்

முன்பெல்லாம் சிறப்பான சாகித்தியங்களும் ஏற்படவில்லை. மகாகவி ஊத்துக்காடு வேங்கட சுப்பையர் போன்ற மகான்கள் அபூர்வமாக அங்கங்கே தோன்றினார்கள். ஆண்டவனின் பக்தியிலே ஈடுபாடுகொண்டு தம்மை மறந்தார்கள். கடவுளின் அருள் பெற்றுப் பக்தி கீதங்களை அருளினார்கள். இசை அறிவு பெற்ற மேதைகள் தெய்வப் புலமை பெற்ற மகான்களின் பக்திமயமான சாகித்தியங்களைப் பயன்படுத்திக் கொள்ளலானார்கள். புரந்தரதாஸர், கபீர்தாஸர், ராமதாஸர், தியாகராஜர், முத்துஸ்வாமி தீக்ஷிதர், சியாமா சாஸ்திரிகள் முதலிய மகான்கள் வரிசையாகத் தோன்றினார்கள். தெய்வபக்தியில் திளைத்தார்கள். பக்திப் பாடல்களை அமைத்தார்கள். தாங்களே மெய்யுருகப் பாடலானார்கள்.

இத்தகைய சூழ்நிலையிலே மேடைக் கச்சேரி முறை என்ற ஓர் அமைப்புச் சிறுகச் சிறுக உருவாயிற்று. இதற்கு முன் பாடுகிறவர்களும் குறைவு; சாகித்தியங்கள் அமைக்கிறவர்களும் குறைவு; சாகித்தியங்கள் அமைக்கிறவர்களும் குறைவு; கேட்டு ரசிப்பவர்களும் குறைவு என்ற நிலை இருந்தது. பின்னர் அது மாறிற்று என்றாலும் அந்தக் கச்சேரி முறையிலும் விதரணை என்பது வெகுநாள் கழித்தே அமைந்தது. குறிப்பாக மகா வைத்தியநாதய்யர், பட்டணம் சுப்பிரமணிய ஐயர் இவர்கள் காலத்திலேதான் கச்சேரி முறையில் விதரணை சேர்ந்தது என்று கூறலாம்.

## வயலின்

இத்தகைய சந்தர்ப்பத்திலேதான் மேநாட்டு இசைக்கருவியான வயலினும் மேடைக் கச்சேரிக்கு ஓர் அங்கம் என்ற நிலை வந்தது. அதற்கு முன்பே அந்தக் கருவி கர்நாடக இசை உலகத்தில் இடம் பெற்றுவிட்டது என்றாலும் அவ்வளவு முக்கியத்துவம் பெற்றிருந்தது என்று சொல்ல முடியாது. மகா வித்துவான் வாளாடி ராதா கிருஷ்ண ஐயர், திருவனந்தபுரம் ஆஸ்தான வித்துவான் மகாதேவ பாகவதர், நீடா மங்கலம் மகாதேவ பிள்ளை, புதுக்கோட்டை நாராயண ஸ்வாமி ஐயர், கரூர் தேவுடு ஐயர், தஞ்சாவூர் சுப்பராயர் முதலியோர் இந்த வாத்தியத்தைக் கையாண்டவர்களில் முதல் வரிசையைச் சேர்ந்தவர்கள். சோலோவாக வாசிப்பார்கள். அபூர்வமாக வாய்ப்பாட்டுக்களுக்குப் பக்க வாத்தியம் இசைப்பார்கள். அவர்கள் செயலால் அவர்களுக்குப் புகழ் உண்டு.

## மணம் சேர்ந்த பொன்மலர்

கச்சேரி நிறப்பதற்குப் பிடிலும் இன்றியமையாதது என்ற நிலை


கேசப்
பராமரிப்பின்
ரகசியம்
ஸ்வஸ்திக்
பெர்ப்யூம்டு காஸ்டர் ஆயில்
தயாரிப்பாளர். ஸ்வஸ்திக் ஆயில் மில்ஸ்
லிமிடெட். பம்பாய்
SHILPI SDM TD

அப்போது இல்லை. அத்தகைய ஒரு நிலை மகாவித்துவான் திருக்கோடிகாவல் கிருஷ்ண ஐயர் அவர்கள் காலத்திலே தான் ஏற்பட்டு நிலைத்தது. அந்த அளவுக்கு அந்தத் துறையிலே அவர் அரும்பாடுபட்டு மேலுக்கு வந்து பிரகாசித்தார். இன்று வயலின் இல்லை என்றால் கச்சேரி இல்லை என்ற நிலை ஏற்பட்டுவிட்டதற்கு அவர்தான் காரணம். இத்தகைய ஒரு மகா புருஷரின் வரலாறு அனைவரும் அறிந்திருக்கவேண்டிய சரித்திரமாகும்.

★

## பிறப்பிடம்

சங்கீத மும்மூர்த்திகள் அவதரித்த தஞ்சை ஜில்லாவிலே திருவாவடுதுறைக்கு மிக அண்மையிலே உள்ளது திருக்கோடிகாவல் என்ற ஊர். குறுக்கே ஓடுகிற காவிரி ஆற்றின் இரு கரைகளும் தான் அவ்விரு ஊர்களுக்கும் எல்லைகள். அந்த ஆறு ஒன்று மட்டும் அங்கே குறுக்கிடாமல் இருந்தால் திருக்கோடிகாவலையும் திருவாவடுதுறையையும் ஒரே ஊர் என்றே கூறிவிடலாம். எக்காலமும் இசை முழக்கமும் தமிழ் முழக்கமும் மற்றும் பலவித கலை நிகழ்ச்சிகளும் தெய்வ வழிபாடுகளும் நிகழ்ந்து கொண்டிருக்கும் இடம் திருவாவடுதுறை மடம்; இணையற்ற இசைக் கருவி மேதையாகத் திகழ்ந்த கிருஷ்ணய்யரின் இருப்பிடம் திருக்கோடிகாவல். ஆற்று வெள்ளம் வேறு பிரித்து வைத்த அவ்விரு ஊர்களையும் இசை வெள்ளம் ஒன்று கூட்டுவித்தது.

## சிறந்த பரம்பரை

சங்கீதக் கலையிலும் பாகவத சம்பிரதாயத்திலும் மிகுந்த ஈடுபாடு உடைய பரம்பரையிலே தோன்றியவர் குப்புசாமி பாகவதர். அவர் ஹரிகதா காலக்ஷேபம் செய்வதில் மிகுந்த திறமை உடையவர். தமிழ், தெலுங்கு, சமஸ்கிருதம், கன்னடம், மகாராட்டிரம் முதலிய பல மொழிகளிலும் சிறப்பான பயிற்சி உடையவர். சமகால விற்பன்னர்களால் நன்கு மதிக்கப்பெற்றவர்.

## பிறப்பு

புலிக்குப் பிறந்தது பூனை ஆகுமா என்பார்கள். அந்தப் பழமொழியை மெய்ப்பிக்கும் முறையிலே குப்புசாமி பாகவதரின் அருமைப் புதல்வராகத் தோன்றினார் கிருஷ்ணையர். பிறப்பு 1857. பிறப்பிடம் தஞ்சை ஜில்லாவில் உள்ள மரத்துறை என்கிற கிராமம். கிருஷ்ணையருடைய தாய் மாமனின் ஊர் அது. அதனால் அவருடைய பிறப்பு அங்கே நிகழ்ந்தது. வாய்ப்பாட்டு மேதை கோனேரி ராஜபுரம் வைத்தியநாதஐயர் பிறந்ததும் அந்த ஊரிலேதான். பின்னாட்களிலே அவர் கோனேரி ராஜபுரத்தை இருப்பிடமாகக் கொண்டதால் அவரை, 'கோனேரிராஜபுரம் வைத்தியநாத ஐயர்' என்று குறிப்பிடலானார்கள். எனினும் அவரிடம் அளவு கடந்த அபிமானம் உடைய பெரியோர்களில் பலர் செல்லமான முறையில் அவரை 'மரத்துறை வைத்தா' என்று குறிப்பிடுவதும் உண்டு. கிருஷ்ணையரும் வைத்தியநாத ஐயரும் பின்னாட்களில் இசை உலகில் நிரந்தரமான சிறந்தபுகழை அடைந்ததற்கு அவர்கள் பிறந்த ஊரின் மகிமைதான் காரணமோ என்றுகூடச் சிலர் சொல்வதுண்டு. கிருஷ்ணையர் பிள்ளைப் பிராயத்திலேயே இசையில் ருசி உடையவராக விளங்கினார்.

## இசைப் பயிற்சி

கிருஷ்ணையருக்கு அடிப்படைப் பயிற்சி முழுவதும் தகப்பனாரிடமே நடைபெற்றது. பின்னர், கொத்தவாசல் வேங்கடராம பாகவதர் அவர்களிடம் சில வருஷகாலம் கிருஷ்ணையர் குருகுலவாசம் செய்தார். கிருஷ்ணையருக்கு இயற்கையாகச் சிறந்த ஞானம் அமைந்திருந்தது. கலையிலே நல்ல ஆர்வம் இருந்தது. ஆனால் போதுமான சாரீர வசதி இல்லை. வாய்ப்பாட்டுத் துறையிலே அவர் சோபிப்

பாரா என்று குருவும் சந்தேகித்தார். தகப்பனாரும் ஐயம் கொண்டார். இருவரும் கலந்து ஆலோசித்தார்கள் கிருஷ்ணையரை வாத்தியத் துறையில் ஈடுபடுத்துவது என்று முடிவு செய்தார்கள்.

## வாத்தியத்துறை

**சா**த்தனூர்ப் பஞ்சுவய்யர் அப்போது வயலின் வாத்தியத்தில் சிறந்து விளங்கிக் கொண்டிருந்தார். அவரும் வாய்ப்பாட்டிலேதான் வயலினைக் காட்டிலும் அதிகமாகப் பிரகாசித்தார். பெரியோர்கள் கிருஷ்ணையரை அவரிடம் குருகுலவாசத்தில் ஈடுபடுத்தினார்கள். பஞ்சுவய்யருக்கு ஏராளமான கீர்த்தனைகளும், தில்லானா, பதம், ஜாவளி முதலியவைகளும் பாடம் உண்டு. அவர் கிருஷ்ணையரைத் தம் புதல்வர் போல் பாவித்தார்; வாத்ஸல்யத்தோடு நடத்தினார். தமக்குத் தெரிந்ததை எல்லாம் போதித்தார்.

## முயற்சி

**ம**ந்திரம் கால் மதி முக்கால் என்பார்கள். கிருஷ்ணையர் இசை பயிலும் விஷயத்தில் அப்படித்தான் நடந்துகொண்டார். குரு போதிப்பது ஒரு பங்கு என்றால் அவர் ஒன்பது மடங்காகப் பெருக்கி ஓயாது சாதகம் செய்தார். இரவு சிறிது நேரம் தூங்குவது தவிர ஏனைய பொழுதெல்லாம் வாத்திய சாதகமும் மனத்தில் இசை நினைவும் தான். பரபரப்புடன் பறந்து பறந்து சுழன்று சுழன்று மலர்களை நாடிச் சென்று தேனைச் சேகரிக்கும் வண்டைப் போல ஓயாது ஒழியாது சாதகம் செய்து வெகு சீக்கிரத்திலேயே வயலின் இசைப்பதில் தேர்ச்சி பெற்றார்.

அந்த நாட்களில் தஞ்சாவூர் பிடில் சுப்பராயர், திருவாலங்காடு வீணை தியாகராஜ சாஸ்திரிகள் இருவரும் இசைக் கலையில் ஜகப் பிரசித்தர்களாக விளங்கினார்கள். கிருஷ்ணையர் அந்தப் பெரியோர்களிடம் சென்று பணிவுடன் பழகினார். அவர்கள் இசைக்கும் முறைகளைக் கேட்டு மனத்தில் நன்கு பதித்துக்கொண்டார். அந்த முறைகளை இடையறாது சாதகம் செய்து மேன்மை அடையத் தொடங்கினார்.

## ஸாதகம்

**கு**ருமுகமாகக் கலைகளைப் பயில்வதாலேயே, பயின்றவற்றை இடையறாது சாதகம் செய்வதாலேயே ஒருவர் கலைத்துறையில் மேன்மை பெற்றுத் தனிச் சிறப்புடன் பிரகாசித்து விடுவர் என்று சொல்வதற்கில்லை. ஆர்வத்தினாலும் முயற்சியினாலும் பிரகாசம் பெறலாம், சிறப்புடனும் பிரகாசிக்கலாம். ஆனால் தனிச் சிறப்பு என்கிற அம்சம் எளிதாகக் கூடி வருவதல்ல. அதற்கு இயற்கை ஞானம் வேண்டும். மனோதர்மம் என்ற அம்சம் வேண்டும். அந்த அம்சத்தில் நாளுக்கு நாள் மின்னல் வேகத்துடன் கூடிய வளர்ச்சி வேண்டும். செவியாரல் என்ற சம்பத்து நிரம்ப வேண்டும். அதாவது பெரிய மேதைகளின் கலை ஆற்றல்களைப் பக்தியுடனும் சிரத்தையுடனும் கண்டு அனுபவிக்க வேண்டும். இவ்வளவும் ஒருங்கு கூடினால்தான் ஒருவர் கலை ஆற்றலில் தனிச் சிறப்பைப் பெற முடியும்.

## மனோதர்மம்

**கி**ருஷ்ணையரிடம் இயற்கையான ஞானம் நிறைந்திருந்தது. கலையில் முன்னேற வேண்டும் என்ற ஆர்வமும் துடிதுடிப்பும் நிரம்ப இருந்தன. அதற்குரிய உழைப்பும் நிறைந்திருந்தது. அதிலே அலுப்போ சலிப்போ ஒரு போதும் அவரிடம் தலை நீட்டியதே இல்லை. செவியாரல் என்ற சம்பத்துக்கும் குறைவில்லை. இவ்வளவோடு மனோதர்மம் என்ற அம்சமும் தன்னாலே சேர்ந்தது. பிறரிடமிருந்து அறிந்தது ஒரு பங்கு என்றால் அவர் தம் புத்தியைக்கொண்டு, கற்றதை விமரிசைப் படுத்திக்கொண்டது ஒன்பது பங்கு எனலாம். அவர் பெரும்பாலும் சரளிவரிசை, வர்ணங்கள்,

ஆகியவற்றைத்தான் ஓயாது சாதகம் செய்வார். நான்கு ஸ்தாயிகளிலும் சௌககாலம் துரித காலம் முதலியவற்றை வெகு அநாயாசமாக வாசிக்கப் பயின்றார். ஒற்றைத் தந்தி சாதகத்திலே மிகவும் தேர்ந்தார். ஸ்வர கம்கங்களில் பரிசுத்தத்தையும் நிலைநிறுத்திக் கொண்டார். இக்காரணங்களால் கேட்பவர்கள் பிரமிக்கத் தக்கவாறு வாசிப்பதில் வல்லவர் ஆனார்.

## சிறப்பு

குருவின் நல்லாசியுடன் நல்ல நாளில் அரங்கேறிய அவர் தோன்றுகிறபோதே புகழுடன் தோன்றுகிற அபூர்வமான கலைஞர்களில் குறிப்பிடத் தக்கவராக விளங்கலானார். அதனால் ஆரம்ப காலத்திலேயே மகா மேதைகளாகிய மகா வைத்தியநாத ஐயர், வேணுகான விற்பன்னர் கும்பகோணம் சரப சாஸ்திரிகள், முதலியோருக்கு வாசிக்கும் தகுதியைப் பெற்றவர் ஆனார்.

'சரப சாஸ்திரிகளின் புல்லாங்குழலும் கிருஷ்ணையரின் வயலினும் இணைந்து ஒலிக்கும்போது கேட்பதற்கு இரண்டு செவிகள் போதா. ராகம் பல்லவி ஸ்வரம் முதலிய ஆவர்த்தனங்கள் கணக்கில் அடங்காமல் கடல் பொங்குவதுபோல் பொங்கும். கேட்பவர் உள்ளம் இன்ப வெள்ளத்தில் ஆழ்ந்துவிடும். பசி தாகம் தூக்கம் முதலியவற்றை ரஸிகர்கள் அறவே மறந்து விடுவார்கள்' - என்பர் பெரியோர்.

இப்படி அதி பால்யத்திலிருந்தே கலை ஆற்றலில் பூரணத்துவம் பெற்றுவிட்டார் கிருஷ்ணையர். கர்நாடக இசை உலகில், வயலின் வாத்தியத் துறையில், முன்பு யாருமே அடைந்திராத தனிச்சிறப்பைப் பெற்றுப் பேரொளி நிறைந்த பெருஞ்சுடராய்த் திகழலானார்.

(தொடரும்)

★★★★★★★★★★★★★★:★★★★★★★★★★★★★★★★

# நாட்டியாலயா

[பரத நாட்டிய ஸ்கூல்]

பெண்களுக்கு மட்டும்

போஷகர்: குமாரி வைஜயந்திமாலா

சிறந்த ஆசிரியரைக் கொண்டு சாஸ்த்ரீய முறையில் நாட்டிய வகுப்புக்கள் நடந்து கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு மாணவிக்கும் பிரத்தியேக கவனம் செலுத்தப்படுகிறது.

★

விவரங்கட்கு:

நாட்டியாலயா,

C/o 'மாலா' ஆழ்வார்பேட்டை, சென்னை-18.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

# சந்திரா அசடல்ல!...

கார்த்திகேயன்

"ஏ பைத்தியம்!........." என்று அடித் தொண்டையில் கத்தினன் ராகவன்.

அவன் முகம் கோபத்தால் சிவந்து விட்டது. பற்களை 'நறநற' வென்று கடித்தான்.

குனிந்த தலை நிமிராது பெருக்கிக் கொண்டிருந்த சந்திரா, அவன் குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தாள்.

'ஏய், உன்னைத்தான் கூப்பிட்டேன். காது கேட்கலையா என்ன?'

ஒன்றுமே நிகழாதவள் போல் அமைதியாக, கையில் துடைப்பத்துடன் அவன் அருகில் வந்து நின்றாள் சந்திரா.

'கர்மம், கர்மம்!' என்று தலையில் அடித்துக்கொண்டான் ராகவன்.

"உன்னை என்ன செய்யச் சொன்னேன்? இரண்டு சொம்பு ஜலம் தெளித்து பெருக்கி விடு. ராத்திரி படுத்துக்க சௌகரியமாயிருக்கும் என்று தானே சொன்னேன்? இப்படி ஊர் முழுக்கவா அலம்பச் சொன்னேன்?"

சந்திரா பதிலே பேசவில்லை. சிறு குழந்தையைப் போல் அவனையே பார்த்துக்கொண்டு நின்ருள்.

ராகவனுக்கு அவமானம் தாங்கவில்லை. அண்டை அயல் குடித்தனக்காரர்கள் எட்டி எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

'தரித்திரமே! உள்ளே போய்த் தொலையேன். அவமானம் நாக்கைப் பிடுங்கிண்டு சாகலாம்னு தோணுது. எனக்குன்னு எங்கேயிருந்துதான் வந்து தொலைச்சியோ?'

கோபத்தோடு அவள் தலை பின்னலைப் பிடித்துக் 'கரகர' வென்று உள்ளே இழுத்துச் சென்ருன். 'களுக்'கென்று பக்கத்து வீட்டில் இரண்டொருவர் சிரிக்கும் சப்தம் கேட்டது.

அப்போதுகூட சந்திரா 'பிரம்மமே'யென்று நின்று கொண்டிருந்தாள். அவளைப் பார்க்கப் பார்க்க ராகவனுக்கு எரிச்சல் அதிகமாய் உண்டாயிற்று.

'நீ செத்துப் போயிடேன். இப்படி இருந்து எனக்குத் தாள முடியாத கஷ்டத்தைக் கொடுக்கிறதை விட ஒரேயடியாகப் போய்விடேன்' என்ருன் எரிச்சலுடன்.

சந்திரா ஒன்றுமே பேசவில்லை. தலைப்பின்னலை எடுத்து முன்பக்கம் போட்டுக்கொண்டு, அதைப் பிரித்துக் கொண்டிருந்தாள்.

ராகவனுக்கு எரிச்சல் தாங்கவில்லை. எழுந்திருந்து வந்தான். 'பளார்' என்று ஒரு அறை கொடுத்தான். சந்திராவின் கன்னம் சிவந்து விட்டது ராகவனுடைய ஐந்து விரல்களும் அப்படியே பதிந்திருந்தன.

'நானும் கழுதையா கத்தரேன். ஒரு வார்த்தை பதில் பேசருளா பாரு. அத்தனையும் நெஞ்சழுத்தம்!......'

சந்திராவின் கன்னங்களில் முத்துக்கள் உருண்டன. நெஞ்சைக் கூட்டிக் கூட்டி விழுங்கியபடி நின்று கொண்டிருந்தாள்.

'நீலிக்கு அழுகை வேரு? நானும் எத்தனை நாளாகச் சொல்லுகிறேன். நான் சொல்றதெல்லாம் சொல்லிண்டிருக்கிறது; நீ உன் இஷ்டத்துக்குச் செய்துண்டே யிருக்கிறது. அப்படி என்ன பயமில்லாத நெஞ்சழுத்தம்!...'

இவ்வளவு பாட்டுக்கும் சந்திரா வாயைத்திறக்கவே இல்லை. அவள் மௌனம் ராகவனின் கோபத்தைத்

தான் தூண்டியது. அவள் மௌனம் வாய்கிழிய கத்துவதைத் தவிர அவனால் என்ன செய்ய முடியும்? என்று சவால் விடுவது போலிருந்தது.

'வாய் அடைச்சுப் போச்சா, என்ன?' மற்றொரு கன்னத்தில் அறைந்தான்.

ஆத்திரமும் அவமானமும் அவனை மிருகமாக்கி விட்டது. 'பளார் பளார்' என்று மாற்றி மாற்றி இரண்டு கன்னங்களிலும் அறைந்தான். அடியைத் தடுக்க கன்னத்தைக் கையால் அவள் பொத்திக்கொண்டபோது முதுகிலும் நாலைந்து அறைகள் வைத்தான். அவனுக்கே கைவலிக்கத் தொடங்கிய பின்னர்தான் அவளை அடிப்பதை நிறுத்தினான். கொடியிலே தொங்கியதுண்டை இழுத்து, தோளிலே போட்டுக்கொண்டு வெளியே போய்விட்டான்.

★

ராகவனுக்கும் சந்திராவுக்கும் கல்யாணமாகி ஒரு வருடம்தான் ஆகிறது. சந்திரா அவனுக்கு இரண்டாம்தாரம். மூத்த தாரம் மங்களம் பிரசவத்துக்கு ஊருக்குச் சென்றிருந்தாள். குழந்தை பிறந்து நல்ல படியாக இருப்பதாகச் செய்தியும் வந்தது. ஆனால், அடுத்த சில நாட்களுக்கெல்லாம் ஊரிலே பரவிய கொள்ளை நோய்க்கு அவளும் பலியாகிவிட்டதாகச் செய்தி வந்தது.

ராகவன் புழுவாய் துடித்தான். என்ன செய்வது? மங்களம் திரும்பி வருவாளா? அவள் விட்டுச்சென்ற பச்சிளங் குழந்தையைக் காப்பாற்ற வேண்டுமே?

ராகவனுக்கே கல்யாணம் தாமதமாகத்தான் நடந்தது. சிறு வயதில் மிலிடெரியில் சேர்ந்து வடக்கே சென்றவன், எங்கெங்கோ சுற்றி விட்டுத் தன் முப்பத்தைந்தாவது வயதில்தான் ஊர் திரும்பினான். அதன் பிறகுதான் அவனுக்குக் கல்யாணம்.

கல்யாணமாகியும் ஐந்து வருடங்கள் வரையில் தம்பதிகளுக்குக் குழந்தை பிறக்கவில்லை. 'ஏதோ தோஷம்; பரிகாரம் செய்யவேண்டும்' என்றெல்லாம் ஜோஸியக்காரர்கள் சொன்னார்கள். அவற்றையெல்லாம் ஒன்று விடாமல் செய்தான். நடுவில் ஒரு முறை ராமேசுவரம் போய்வந்தான். கடைசியில் மங்களம் கருவுற்றாள். ராகவன் அடைந்த மகிழ்ச்சி சொல்ல இயலாதது. பிறக்கப்போகும் குழந்தைக்கு அப்படிச் செய்யவேண்டும், இப்படிச் செய்ய வேண்டும் என்றெல்லாம் திட்டம் தீட்டினான். ஆனால் கடைசியில், அவன் மகிழ்ச்சி செயற்படும்போது, அதைப் பகிர்ந்துகொள்ள மங்களம் இருக்கவில்லை.

அவள் விட்டுச் சென்ற குழந்தையை வளர்த்து ஆளாக்கவேண்டுமே? அவன் தாயாருக்கோ வயதாகிவிட்டது. கண் பார்வை மங்கிக்கொண்டு வந்தது. இந்நிலையில் அவளால் பச்சிளங்குழந்தையை எவ்வாறு வளர்க்க முடியும்? ஆகவே, மங்களத்தின் காரியங்கள் முடிவடையும் முன்னரே, அவனுக்காகப் பெண் தேடும்படலம் ஆரம்பமாகிவிட்டது.

ராகவன் ஆரம்பத்தில் இதற்குச் சம்மதிக்கவில்லை. மங்களத்துக்குப் பிறகு, தன் உள்ளத்தில் இன்னொரு பெண்ணுக்கு இடம் கிடையாதென்று மறுத்தான். ஆனால் அவனால் மட்டும் அந்தக் குழந்தையை வளர்க்க முடியுமா? வேளா வேளைக்குக் குழந்தையின் தேவைகளை உணர்ந்து அதற்கு ஏற்ப நடந்துகொள்ளுவது பெண்ணால் மட்டுமே முடியக்கூடிய காரியமாயிற்றே. அன்றி ஆபீஸைவிட்டு வீட்டில் இருப்பது என்பதும் அவனால் முடியாத காரியம். முடிவில் அவர்கள் வார்த்தைக்குக் கட்டுப்பட்டு மறுமணம் புரிந்துகொள்ள சம்மதித்தான்.

நாற்பது வயதுகாரனுக்கு யார் தான் பெண் கொடுக்கச் சம்மதிப்பார்கள்? அதுவும் இந்தக் காலத்துப் பெண்கள்தான் இரண்டாம் தாரத்துக்கு இசைவார்களா? வீட்

டுக்குள் நுழையும் முன்பே பிக்கல் பிடுங்கலுக்கு ஒரு குழந்தை!

மங்களத்துக்குத் தூரத்து உறவினள் ஒருத்தி எங்கோ குக்கிராமத்தில் இருந்தாள். அவளுக்கு ஒரு பெண் வயது இருபத்தைந்துக்கு மேலாகிவிட்டது. கையிலே காசுக்கு வழியில்லாததால் தன் பெண்ணுக்குக் கல்யாணமே வேண்டாமென்று இருந்துவிட்டாள் அந்த அம்மாள். இந்த விவரம் தெரிந்ததும். அவளை அழைத்து வந்து, திருமணத்துக்கு ஏற்பாடு செய்துவிட்டனர்.

சந்திரா நல்ல அழகி என்று சொல்ல முடியாது. பார்வைக்குச் சுமாராக இருப்பாள். ராகவன் மறுபேச்சு பேசாமலே கல்யாணத்துக்குச் சம்மதம் தெரிவித்துவிட்டான்.

கல்யாணத்துக்குப் பின்னர்தான் சந்திராவைப் பற்றிய விவரங்கள் அவனுக்குத் தெரிய வந்தன. தாலி கட்டி வீட்டுக்கு அழைத்து வந்த பிறகுதான் அவள் 'அசடு' என்பது அவனுக்குத் தெரிந்தது. எந்தக் காரியத்தையும் தானுகச் செய்ய வேண்டும் என்ற உணர்வு அவளுக்குக் கிடையாது. சதா உட்கார்ந்து கொண்டிருப்பாள். அந்த வேலையைச் செய்; இந்த வேலையைச் செய்; என்று பிறர் சொல்லிக் கொண்டிருக்கவேண்டும். குழந்தை அழுதால், அது எதற்காக அழுகிறதென்பதை அறியாமல், மடியில போட்டுத் தட்டிக் கொண்டிருப்பாள். குழந்தை பசி தாங்காது அழுகிறதென்று யாராவது சொன்னல்தான அவள் பால் கொண்டு வந்து போடுவாள். இதேபோன்றுதான் எந்தக் காரியத்திலும்.

ஆரம்ப காலத்தில் ராகவன் அவளுக்கு எத்தனையோ தடவைகள் நல்ல வார்த்தையாகச் சொல்லி வந்தான். அதை அவள் பொருட்படுத்தியதாகவே தெரியவில்லை. அதற்கு மேல் அவளை மிரட்டி அடிக்கத் தொடங்கினுன். அப்படியும் அவளிடம் மாறுதல் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. வாயில் வந்தபடியெல்லாம் வைவான். அத்தனையும் பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருப்பாள் சந்திரா.


## இன்றே விஜயம் செய்யுங்கள்



மதுரையில்
1901-ல் ஸ்தாபிக்கப்பட்டது
மூன்று தலைமுறையாக
நடைபெற்றுவரும்.
**ஒரிஜினல்**
**நாகப்பட்டணம்**
**நெய் மிட்டாய் கடை**

இது ஒன்றுதான்
20, மேலச் சித்திரை வீதி
(மேல கோபுரம் சமீபம்)

Prop: வி. வெங்கட்ருமய்யர் சன்.
வி. அனந்தநாராயணன் மதுரை.

அவளோடு மாரடித்துப் போதும் போதுமென்ருகிவிட்டது. சிற்சில சமயங்களில் அவனையும் மீறி கோபம் அதிகமாகிவிடும். அப்போதெல்லாம் விசிறிக் காம்போ, கரண்டிக்காம்போ உடைந்துவிடும். எவ்வளவு அடித்துத்தான் என்ன? சின்னக் குழந்தையைப்போன்று அப்போது கேவிக்கேவி அழுவாள். அழுகை நின்றதும் பழையபடி அவள் சுபாவத்துக்குத் திரும்பி விடுவாள்.

அன்றைக்கும் அப்படித்தான் நிகழ்ந்தது. வெய்யில் அதிகமாக இருப்பதால், இரவு, வாசல் வராந்தாவில் படுத்துக் கொள்ளலாம் என்று, தண்ணீர் தெளித்து அலம்பச் சொன்னுன்.

அந்த வீட்டில் ஐந்து குடித்தனங்கள். ரயில் வண்டி போல நீளமாக ஒன்றையடுத்து மற்ருென்ருக இருந்தது. எல்லா வீட்டுக்கும் சேர்த்து வாயில் புறத்தில் நீண்ட வராந்தா சிமெண்டினுல் பத்தடி அகலத்துக்குப் போடப்பட்டிருந்தது. மேலே மூட்டம் கிடையாது. வெய்யிலின் சூடு இருக்கும் என்று தண்ணீர் தெளித்துப் பெருக்கச் சொன்னுன் ராகவன்.

சந்திராவோ இல்லாத வேலையை எல்லாம் இழுத்துப் போட்டுக் கொண்டாள். அந்த வராந்தா முழுவதிலும் தண்ணீர் கொட்டி அலம்பிக் கொண்டிருந்தாள்.

ஏற்கனவே அவளைப்பற்றி அசடு என்றும், பைத்தியம் என்றும் அண்டை அயல் குடித்தனக்காரர் பலவாருகப் பேசிக்கொள்வது அவனுக்கு எட்டி வந்தன. அதற்கேற்ப இன்றைக்கு அவள் தன் வீட்டுப் பகுதியை மட்டும் அலம்பி விடுவதற்குப் பதிலாக மற்றவர்களுக்கும் சேர்த்து அலம்பிவிட்டது அவனுல் பொறுக்க முடியவில்லை. அந்தக் கோபத்தில் அவளை நையப் புடைத்துவிட்டான்.

★

ராகவன் வீடு திரும்பியபோது மணி ஒன்பதரை ஆகிவிட்டது. வீட்டிலே எல்லோரும் படுத்துத் தூங்கிவிட்டனர். அவன் தாயார் ஒரு ஓரமாய் படுத்துக் குறட்டை விட்டுக் கொண்டிருந்தாள். குழந்தை தொட்டிலில் தூங்கிக் கொண்டிருந்தது. சந்திரா தனியாக இன்னொரு பக்கத்தில் கிடந்தாள். அவள்மேல் துணி சற்று விலகியிருந்தது. குனிந்து அதை எடுத்து மூடிவிட்டான். அப்போது அவன் கைவிரல் அவள் உடலிலே பட்டது. 'சுரீ'ரென்று ஷாக் அடிக்கப்பட்டது போல கையை உதறினுன்.

சந்திராவின் உடல் காய்ச்சலால் தகித்தது. இலேசாக முனகும் சப்தம் கேட்டது. குனிந்து பார்த்தான் ராகவன். அவள் முகமெல்லாம் வீங்கியிருந்தது. ஜுர வேகம் தாங்காது அவள் முனகிக் கொண்டிருந்தாள்.

ராகவனுக்கு என்னவோ போலிருந்தது. சந்திரா அந்த வீட்டுக்கு வந்து ஒரு வருஷம் ஆகிறது. இந்தக் காலத்தில் ஒருநாள்கூட அவள் உடல்நிலை சுகமில்லையென்று படுத்தது கிடையாது. தலையை வலித்தது, காலை வலித்தது என்று சொன்னது கிடையாது.

ஜுரத்தின்வேகம் நூறு டிகிரிக்கு மேல் இருக்குமென்பதை உடம்பு சூடு காட்டியது.

ராகவனுக்குச் சொல்ல முடியாத ஒரு வேதனை ஏற்பட்டது பாவம்! அவனிடம் பட்ட அடிகளால் அவளுக்கு ஜுரம் வந்துவிட்டது. அவன் உள்ளம் நெகிழ்ந்துவிட்டது. அவளை மிருகத் தனமாக அவன் எப்படி அடித்திருக்கிருன்.

சுவாமிபடத்தின் அருகில் இருந்த விளக்கைத் தூண்டி விட்டுவிட்டு அவள் அருகில் வந்து உட்கார்ந்தான். சின்னக் குழந்தையைப் போன்று அவள் தன் நினைவின்றி கிடந்தாள்.

ராகவன் சுவாமிப் படத்தைத் திரும்பிப் பார்த்தான். "பகவானே! எனக்குக் கோபத்தையும் படைச்சு, இவளுக்கு இப்படி அசட்டுத் தனத்தையும் ஏன் கொடுத்தாய்?" உள்ளூற விம்மினுன் அவன்.

தூக்கத்திலே புரண்டாள் சந்திரா அவள் நெற்றியிலே வந்து கவிழ்ந்திருந்த மயிர்ச் சுருளை ஒதுக்கிவிட்டான். முத்து முத்தாக நெற்றியிலே துளிர்த்த வியர்வைத் துளிகளைத் தன் மேல் துண்டினல் துடைத்து விட்டான்.

கண்ணைத் திறந்து பார்த்தாள் சந்திரா. அவனைக் கண்டதும் பயத்தோடு வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்திருக்க முயன்ருள்.

'வேண்டாம், சந்திரா, அப்படியே படுத்துக்கோ, உனக்கு உடம்பு சரியாயில்லே!' என்று அன்புததும்ப சொல்லிய ராகவன் அவள் தலையைத் தூக்கித் தன் மடிமீது வைத்துக் கொண்டான்.

''உடம்பு என்னமா தகிக்கிறது? இப்படி உடம்போடு வெறும் தரையில் படுத்தால் உடம்புக்கு ஆகுமா?' என்று சின்னக் குழந்தையைக் கேட்பது போல் கேட்டான்.

சந்திராவின் கன்னங்களில் நீர் வழிந்தோடியது. துண்டிஞல் துடைத்துவிட்ட ராகவன், 'சந்திரா, ஏன் அழறே? பச்சைக் குழந்தையா நீ?'' என்ருன்.

'நான் ஒன்று கேட்கட்டுமா?...' என்று தட்டுத் தடுமாறி கேட்டாள் சந்திரா.

'கேள், சந்திரா, என் கிட்டே உனக்கு என்ன பயம்?' என்ருன் ஆதுரத்துடன்.

'நீங்க என்னை அடியுங்க, நன்ருவையுங்க. நான் உங்க உடமை ஆஞ, நாலுபேர் எதிரிலே மட்டும் இனிமே என்னை வையவோ, அடிக்கவோ வேண்டாம்னு கேட்டுக்கறேன்...'

'சந்திரா!...' என்ருன் ராகவன்.

'நான் அசடுதான். நான் பிறந்தபோதே என் அம்மாவை உருட்டிட்டேன். அதுலே அசட்டுத்தனம் தானே. என்னைக் கவனிக்கறவா யாரும் கிடையாது. இஷ்டத்துக்கு என்னை விட்டுட்டா. நல்லது பொல்லாதது, செய்யக்கூடியது, செய்யக் கூடாதது எனக்குத் தெரியாது. தப்பு செஞ்சாலும் அதைத் திருத்தறவா கிடையாது. மிஞ்சிப்போஞ, என்னை 'அசடு, பைத்தியம்' என்று ஏசுவதோடு சரி. நான் அந்தமாதிரி வளர்ந்துட்டேன். இப்பத்தான் நீங்கள் என்னை என் சுபாவத்திலிருந்து மாற்றி வருகிறீர்கள்.

'சந்திரா!.........' என்று அவள் வாயைப் பொத்திஞன் ராகவன்.

'நான் உன்னை இப்போதான் புரிஞ்சுண்டேன், சந்திரா. இனிமே உன்னை நான் அடிக்கமாட்டேன்; திட்டமாட்டேன். நீ அசடு இல்லே, சந்திரா உன்னை 'அசடு' என்று சொல்பவர்கள் தான் அசடு!.........'

ராகவனின் கண்களிலிருந்து 'பொல பொல'வென்று நீர் கொட்டியது. அவள் முகத்தைத் தன் மார்பிலே சேர்த்து அணைத்துக் கொண்டான் ✱



விழுப்புரம் ஜங்ஷனில் திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ் வந்து நின்றது. பிளாட்பாரத்தில் மூட்டை முடிச்சுக்களுடன் காத்துக் கொண்டிருந்த பிரயாணிகள் கூட்டம் மாபெரும் அலைபோல் எழுந்து, வண்டியின் பெட்டிகளைத் தாக்கியது. 'இறங்கும் பிரயாணிகளுக்கு முதலில் வழி விடவும்' என்ற அறிவிப்பு, பெட்டியின் உட்புறத்தில் அல்லவா பொறிக்கப் பட்டிருக்கிறது? வெளிப்புறத்தில் எழுதியிருந்தால் மட்டும் யாரேனும் அதன்படி நடந்துகொள்ளப் போகிறார்களா, என்ன? பெட்டியின் நுழையுமிடத்தில் பிரயாணிகள் இறங்கவும் முடியாமல், ஏறவும் முடியாமல் நசுங்கிக் கொண்டிருந்தார்கள்.

படியில் இரண்டு அங்குல இடம் பிடித்து விட்டது. அவன் திறமைக்கோர் சான்று!

''யாரு, ஐயா, அசு—மாடு மாதிரி வந்து மேலே விழுகிறது?'

'இந்தாங்க, கொஞ்சம் வழி விடுங்க. பெண்பிள்ளைங்க முதல்லே இறங்கட்டும்...'

இம்மாதிரிப் பேச்சுக்களுக்கெல்லாம் மசிகிறவனா, சந்தானம்? கருமமே கண்ணாக, கண்ணிரண்டும் உள்ளே மேல் தட்டில் பதிந்திருக்க, திமிறிக்கொண்டு உள்ளே புகுந்தான்!

'சபாஷ், சந்தானம்!' என்று பாராட்டுரை வழங்கிக்கொண்டு, அவசரம் அவசரமாகப் பையிலிருந்து ஒரு மேல் துண்டை

# மர்மம் விளங்கியது




டி.எஸ்.கே

கையில் ஒற்றைப் பையுடன் ஒவ்வொரு பெட்டியாக அலசிக் கொண்டு வந்த சந்தானம், திடீரென்று ஓரிடத்தில் நின்றான். காரணம், அந்த மூன்றாம் வகுப்புப் பெட்டியில், சாமான்கள் வைப்பதற்கான மேல் தட்டு ஒன்றில் நிறைய இடம் இருப்பது அவன் கண்களில் பட்டுவிட்டது! ஆறரை அடி நீளமுடைய அவன் காலைக் குறுக்கிக் கொண்டால் அந்த இடத்தில் படுத்துக்கொண்டு விடலாமென்று அனுமானித்துக்கொண்டு விட்டான்.

வேறு யாரும் அந்த இடத்தைப் பிடித்துக்கொள்வதற்கு முன், தான் முந்திக்கொண்டுவிட வேண்டும் என்ற எண்ணத்துடன், பெட்டியின் நுழைவாயிலில் வீர தீர பராக்கிரமத்தைக் காட்டிக் கொண்டிருந்த கோஷ்டியில் போய்ச் சேர்ந்தான். அடுத்த விநாடியே, கால் வைக்கும் எடுத்து, சாமான்கள் வைக்கும் இடத்தில் காலியான பாகத்தில் விரித்தான். ஒரு பெரும் பிரதேசத்தையே ஆக்கிரமித்துக்கொண்டு விட்டவனைப்போல, கம்பீரமாகப் பார்த்தான். பெஞ்சுகளில் உட்கார்ந்திருந்த பிரயாணிகளை.

மேல் தட்டில் ஒரு பெட்டி, இரண்டு பைகள், ஒரு கூடை எல்லாம் இருந்தன. உட்கார்ந்திருந்தவர்களை ஒரு நோட்டம் பார்த்துவிட்டு அவைகளை ஒரு புறமாக மெல்ல நகர்த்தினான். மிகுந்துள்ள இடம் படுத்துக்கொள்வதற்குப் போதும் என்ற திருப்தி உண்டாயிற்று. ஜன்னலண்டை வந்து, ஒற்றைக் காலை ஊன்றிக்கொண்டு எம்பி மேலே ஏற முயன்றான். என்ன துரதிருஷ்டம்! மின் விளக்குக்குப் பாதுகாப்பாக இருந்த 'டோம்' மீது அவன் தலை மோதிற்று.

டோம் தூள் தூளாகப் போன துடன் அவன் தலையில் ஏற்பட்ட காயங்களிலிருந்தும் ரத்தம் சொட்ட ஆரம்பித்தது. 'அம்மா' என்று தலையைப் பிடித்துக்கொண்டு கீழே இறங்கினன். 'த்ஸொ, த்ஸொ' என்று மற்றப் பிரயாணிகள் அனுதாபம் தெரிவித்தார்கள். கண்ணுடிச் சில் ஒன்று, ஒரு பிரயாணியின் கையைப் பதம் பார்க்கவே சீறிக் கொண்டு எழுந்தார், அவர். ஆனல், சந்தானம் அவ்ருக்குப்பதில் சொல்லக்கூடிய நிலையிலா, இருந்தான்? நடுத் தலையில் வைத்திருந்த உள்ளங்கைவழியே ரத்தம்பெருகிக் கைகளில் வழிந்துகொண்டிருந்தது.

'ஸார் மெல்ல இறங்கி ஸ்டேஷன் மாஸ்டரிடம் போங்கள். முதல் உதவி செய்வார்.' என்ருர் ஒரு பிரயாணி.

வழியும் ரத்தத்தைக் கண்டதும் சந்தானத்தின் உடலில் லேசான நடுக்கம் உண்டாயிற்று. கீழே இறங்கி, ஸ்டேஷன் மாஸ்டரிடம் விபரம் சொல்வதற்கே தெம்பு இல்லாததுபோல் தோன்றியது.

'என்ன ஸார், அங்கே?' பெட்டியின் வெளியேயிருந்து யாரோ ஒருவர் கேட்டார்.

'டோம் உடைந்து தலையைப் பொத்துவிட்டது...'

'எப்படி உடைந்தது. டோம்?'

'இவர் மேலே ஏறிப் படுக்கப் போனர்...'

'அடாடா... ரத்தம் ஒரேடியாகக் கொட்டுகிறதே?...... வாருங்கள் ஸார், ஸ்டேஷன் மாஸ்டரிடம் அழைத்துப் போகிறேன். அவர் மருந்து போடுவார்...'

சந்தானத்தின் மனம் நன்றியால் நெகிழ்ந்தது. இம்மாதிரி முன்பின் தெரியாதவர்களுக்குத் தானுக வலிய வந்து உதவி புரியும் மனிதர்கள் இன்னும் இருக்கிருர்களா என்று ஆச்சரியப்பட்டான்!

கையில் பையுடன் தட்டுத் தடுமாறி இறங்கினன் சந்தானம். கீழே நின்றிருந்த காக்கி சட்டைக்காரர் அவனிடமிருந்து பையை வாங்கிக்கொண்டார். பின் அவனையும் தாங்கிக்கொண்டுஸ்டேஷன் மாஸ்டர் அறையை நோக்கி நடந்தார். 'இவ்வளவு தூரம் அக்கறையும் அன்பும் காட்டும் இவருக்கு நாம் என்ன கைம்மாறு செய்யப் போகிருேம்?' என்று வியந்த சந்தானம். தான் கீழே விழாமலிருப்பதற்காக அவர் தோளை இறுகப் பற்றிக்கொண்டான்.

ஸ்டேஷன் மாஸ்டரிடம் விஷயத்தைச் சொல்லி முதல் உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டார் காக்கிச் சட்டைக்காரர்.

'பாவம். எந்த ஊருக்குப் போகிறவரோ? நடுவில் இப்படி ஆகிவிட்டதே!' என்று அங்கலாய்த்தார் அவர்

'மதுரைக்குப் போகவேண்டும்' என்று தீனக்குரலில் கூறினன் சந்தானம்.

மதுரைக்கா?... அடுத்தபடியாக தூத்துக்குடி எக்ஸ்பிரஸ் வரும். அதில் ஏறி போய்க்கொள்ளலாம்.

ஸ்டேஷன் மாஸ்டர் டிஞ்ச்சரைத் தடவியபோது சுரீர் என்றது சந்தானத்துக்கு 'அப்பா' என்று அலறித் துடித்தான்.

அடடே பொறுத்துக்குங்க சார். முதல்லே அப்படித்தான் எரியும். அப்புறம் குளுகுளுன்னு இருக்கும்! என்னமோ தலைக்கு வந்தது தலைப் பாகையோட போச்சுன்னு வச்சுக் குங்க. எவ்வளவு பெரிய ஆபத்து வர இருந்ததோ இந்தமட்டும் காயத்தோடு போச்சு!...' — 'காக்கி' அவனுக்குத் தைரியம் கொடுத்துக் கொண்டிருந்தார்.

பத்து நிமிஷத்திற்குப் பின் தலையில் ஒரு பெரிய கட்டுடன் ஸ்டேஷன் மாஸ்டர் அறையிலிருந்து வெளியே வந்தான் சந்தானம். 'ஸார் இப்படியே பெஞ்சியில் பத்து நிமிஷம் உட்கார்ந்துக்குங்க' என்று உபசாரம் செய்தார் காக்கிச் சட்டைக்காரர்.

சந்தானம், அவர் காட்டிய பரிவில் பாகாய் உருகிவிட்டான். யாரையுமே தெரியாத ஒரு ஊரில்

அவன்மேல் இவ்வளவு அன்பைப் பொழிந்த ஒரு அதிசய மனிதருக்குக் கேவலம் வாயளவில் நன்றியாவது தெரிவிக்கவேண்டும் என்ற ஆசை உண்டாயிற்று அவனுக்கு.

'ரொம்ப நன்றி ஸார்: நீங்க செய்த உதவிக்கு என்ன செய்தாலும் தகும். ரத்தத்தைப் பார்த்ததும் எனக்கு மயக்கம் வருகிற மாதிரி ஆகிவிட்டது...'

'பரவாயில்லீங்க!...' என்று சொல்லிவிட்டு ஒரு கணம் நிறுத்திய அவர், அப்போ பணம் தர்றீங்களா? நான் போகணும்' என்றார்.

சந்தானம் திடுக்கிட்டான் 'பணமா?'

'ஆமாம்' இரண்டரை ரூபாய்!'

'எதற்கு?'

'என்ன ஸார்! இப்படிக் கேட்கிறீங்க? நீங்கதானே அந்த 'டோமை' உடைச்சது?'

'ஆமா'

'அதற்கான தொகை இரண்டரை ரூபாய் ஸார். இந்தப் பணத்தை உங்களிடம் வசூலிக்காமல் விட்டால், 'டியூடியிலிருந்த எலக்டிரிக் பிட்டர் யார்?' என்று கேள்விகேட்டு என் சம்பளத்தில் பிடித்து விடுவார்கள்!... பின்னே எதற்காக உங்களுடன் இத்தனை நேரம் சுற்றிக் கொண்டிருந்தேனும்?

மர்மம் விளங்கிய சந்தானம், காக்கிச் சட்டைக்காரரை மனதிற்குள் சபித்துக்கொண்டே மணி பர்சைத் திறந்தான்.

★

---

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

அழகிய கலர் அச்சு வேலைகளுக்கு

சிறந்த இடம்

# ஸ்ரீ ஸுதர்சன் பிரஸ்

" காங்கிரஸ் பில்டிங்ஸ் "

111, மவுண்ட் ரோட், தேனாம்பேட்டை

சென்னை-6

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

# என் மகள்

கரிய இருள் கருக்கிட்டிருந்தது. இருளின் கருமையை விண்மீன் சிலபொழுது கண் சிமிட்டி தெள்ளத் தெரிய வைத்தது. விண்ணை முட்டும் பனைகளில் ஆந்தை அலறியது. அதற்கு இசைவதுபோன்று கோட்டானும் கூவிக் குரலைக் காட்டியது. அவைகளுக்குக் கட்டியம் கூறுவதுபோன்று ஓநாய்க்கூட்டம் மந்தை மந்தையாக பவ்னி வந்தது. கரியொத்த பலங்கொண்ட வீரர்களின் சதைப் பிண்டங்களைச் சுவைத்து மகிழ்வுற்றன. ஓநாய்க் கூட்டங்களுக்கஞ்சி நரிகள் சிதறியோடின. கரி பரி இவைகளுக்கிடையே வீரர்களின் பிணக்குவியல். அவைகளில் தன் காதலனைத் தேடத் தலைப்பட்டாள், எழிலி. இரத்தச் சேற்றில் நடந்து பிணங்களை இடறி தடுமாறி பிறகு எப்படியோ கண்டெடுத்து தன் குடிலை அடைந்தாள். வளர்ந்த நெடும் உடலை தரையில் கிடத்தினள். அவள் கால்கள் தானகவே மருத்தவர் அந்தி வெள்ளையின் குடிலை நோக்கி ஓடின. நடுநிசியில் அதுவும் போர்க் காலத்தில் வீட்டின் கதவு தட்டப்படவே பதட்டத்தோடு கதவைத்திறந்தார் அந்தி வெள்ளை. கரிய இருளில் ஓர் கன்னி நின்றிருந்தாள். அவள் உடல் நடுங்கிக் கொண்டிருந்தது.

'யாரம்மா நீ, ஏன் வந்தாய்?'

'ஐயா என் பெயர் எழிலி. என் மாமனுக்குப் பலத்த காயங்கள் ஏற்பட்டுள்ளன. வந்து பாருங்கள்'

'இதோ நொடியில் புறப்படுகிறேன், மகளே' என்று கூறியபடியே அந்திவெள்ளை மூவகைப் பெட்டியைத் தூக்கிய வண்ணம் எழிலியின் பின்னே இருளில் நடந்தார்,

அந்திவெள்ளை மருத்துவத்தில் ஈடுபட்டார். எழிலி இதயம் துடிக்க செய்வதறியாது திகைத்து நின்ருள்.

'மகளே நாடி மெதுவாக பேசுகிறது. இவர் உடலில் நஞ்சுகலந்து இருக்கிறது'

'ஐயா எப்படியாவது காப்பாற்றி விடுங்கள். எத்தனைக் கழஞ்சு பொன் வேண்டுமானலும் செலவிடத் சித்தமாயுள்ளேன்.

மகளே என்னல் ஆவது ஒன்றுமில்லை. இவர் உடலில் ஏற்றப்பட்டுள்ள நஞ்சு இறக்கப்பட வேண்டுமானல் புலிக்குன்றிலுள்ள பச்சிலையைக் கொணர வேண்டும். அது வந்தால் வெற்றி கூடும். மகளே!

'புலிக்குன்று, மாமன்னர் தண்டு இறங்கியுள்ள குன்று தானே ஐயா'

'ஆம்மகளே, மன்னர் தங்கியிருந்தால் மட்டும் ஆபத்தில்லை. புலிகளின் உறைவிடம் மகளே! புலிகளின் உறைவிடம்'

புலியின் உறைவிடம். எழிலியின் உதட்டில் அந்த வேதனையிலும் புன்சிரிப்புத் தோன்றி இழைந்தது. 'இதோ கொணர்கிறேன் ஐயா! பொழுது விடியுமுன் கொண்டு வருகிறேன். போதுமா? சற்று என் மாமனின் உடலைக் கவனித்துக் கொள்ளுங்கள். சடுதியில் வந்து விடுகிறேன். நீங்கள் குறிப்பிடும் பச்சிலை எப்படியிருக்கும் கூறுங்கள்'

**பரமன்**

'மகளே மாதிரிக்கு ஓர் இலை என்னிடம் உள்ளது இதை எடுத்துப் போ. மகளே ஆபத்து அதிகம். உதவியாக எரியும் கொள்ளிக்கட்டையைக் கையிலே எடுத்துச்செல்'

'சரி' என்று தலையசைத்த வண்ணம் எழிலி இருளில் மறைந்து போனுள்.

★

நட்ட நடு இரவில் கொள்ளிக் கட்டைக்கு எங்கே போவாள். திகைத்தாள் எழிலி. அப்பொழுது எங்கிருந்தோ உயிர் நீத்தாரின் உறவினர் எழுப்பிய வேதனையொலி அவள் செவியில் மெல்ல வந்து



விழுந்தது. ஆம் அருகில் இங்கே எங்கோதான் சுடுகாடு இருக்கிறது என்று அவள் உள்ளுணர்வு உணர்த்திற்று. உடனே அவளறியாது அவளது கால்கள் சுடுகாட்டை நோக்கி நடந்தன!

இடுகாட்டில் சிதையில் சிரழிந்து கொண்டிருந்தன பிணங்கள், அருகே சென்று எரியும் சிதையில் இருந்து ஓர் கொள்ளிக் கட்டையை எடுத்துக்கொண்டு புறப்பட்டாள். கரிய இருள் கொள்ளிக் கட்டையின் ஒளியை மென்று தின்று கொண்டிருந்தது. மெதுவாக புலிக் குன்றினடிவாரத்தை நெருங்கினாள். சேரமான் படைகள் தண்டு இறங்கியிருந்தனர். அவர்கள் கண்ணில் படாமல் பதுங்கி பதுங்கி மெதுவாக சென்றாள். கரிய இருளில் ஓர் தீபப் பொறி மெதுவாக குன்றின்மேல் ஊர்ந்து கொண்டிருந்தது. இதை எவரும் மதித்திலர், எழிலி வழுக்குப் பாறைகளில் வழுக்கியும், இடறி விழுந்தும் எழுந்தும் சென்றாள். அவளது கால்களில் தட்டுப்பட்டு சிதறியோடிய உயிர் வாழினங்கள் கணக்கிலடங்காது. எதற்கும் எழிலி அஞ்சினாளில்லை. அவள் நெஞ்சிலே அன்புக் காதலன், ஆசை அத்தான் வளவன் உயிர் பெற்றெழ வேண்டும். மீண்டும் மற்றார் முன் போரிடவேண்டும், வெற்றி மாலையாக, தான் பனைமாலை சூட்ட வேண்டும். இதுவே என் தணியாத தாரக மந்திரம் என்று முணுமுணுத்தபடியே வேகமாக முன்னேறினாள். குன்றின் உச்சிக்கு வந்துவிட்டாள். அருகில் தான் தேடும் பச்சிலைக் கிடைக்குமோ என்று தேடினாள்; அவள் எண்ணம் வீணாகவில்லை. பச்சிலைக் கொடிகள் படர்ந்து கிடந்தன. மளமளவென்றுதான் கொணர்ந்த இலையோடு ஒப்பிட்டு சரிபார்த்து கொடியில் உள்ள இலைகளை பறித்து மடியில் கட்டலானாள். அவளறியாது அவளது வலதுகால் ஓர் சிறிய கல்லின் மீது பட்டு இடறியது. வழுக்குப் பாறையானதால் அக்கல் உருண்டு 'சட சட' வென்று ஓடி புதரில் போய் விழுந்தது. அச்சத்தத்தால் புதரில் மரங்களில்

வாழ்ந்து உறங்கும் புள்ளினம் 'பட' 'பட'வென்று சிறகடித்துவட்டமிட்டன. முயலும், முள்ளம்பன்றியும் இடம்விட்டு இடம்மாறி பதுங்கின. கொடிய நஞ்சு படைத்த நாகம் போன்ற பல பாம்புகள் வளைந்து வளைந்து ஓடிப் பதுங்கின. எதற்கும் அவள் அஞ்சினாளில்லை. ஆனால் அவளது எதிரே சில மனித அடிகள் தூரத்தில் இரண்டு நெருப்புத் துண்டங்கள் பளிச்சிட்டு மின்னின. என்னவென்று எழிலி நினைத்தவளாய் கொள்ளிக்கட்டையை வீசி ஆட்டினாள். அந்த மங்கிய ஒளியில் வேங்கையின் வரிவடிவ உடலமைப்பு மின்னியது. ஓர் கணம் நினைத்தாள் 'தன்கொள்ளிக்கட்டையால் அதைத் தாக்கலாம் என்று' அடுத்த சிலநொடியில் அச்செய்கை சிறுமதியின் சிறு செயல் என்று விடுத்தாள். அதனால் மெதுவாக பின் வாங்கினாள். தான் வேங்கையைத் தாக்கினால் வேங்கை தன்னை கொன்று தின்னும் என்பதில் எழிலிக்கு எள்ளளவும் ஐயமில்லை. தான் புலிவாய் பட்டால்இந்த பச்சிலைகளை மருந்துவரிடம் தந்து, தன் மாமனை, ஆசைக்காதலனை எவர் உயிர் மீட்பர்? என்று எண்ணியவளாய் மெல்ல மெல்ல பின் வாங்கினாள். ஏன் பாறையின் முகட்டுக்கே வந்து விட்டாள். அடுத்த அடி எழிலி வைப்பது குன்றின் பள்ளத்தில் தான்! இதை உடல் உள்ளத்திற்கு உணர்த்திற்று. உடனே உடல் வியர்வையின் குளமாய் மாறியது. நெஞ்சு பஞ்சு போல் மென்மையடைந்தது. அவளது நிலை கண்டு வேங்கை பின் வாங்கவில்லை. மெதுவாக அதுவும் வீர நடை போட்டு முன்னேறியது.

இதைக் கண்ட எழிலி உணர்வின் எழுச்சியாய் உடலில் உள்ள உறுதியெல்லாம் ஒன்று திரட்டித்துணிந்து கொள்ளிக்கட்டையை புலியின் மீது வீசினாள். வீசும் வேகத்தில் எழிலியின் கால்கள் இடறின. அடுத்த




கணம் அவள் பாறையின் வழுக்கு முனையிலிருந்து வழுக்கி கீழே சாய்ந்தாள். அவளைப் பின் பற்றி வேங்கையும் கொள்ளிக் கட்டையின் தாக்குதலால் வெகுண்டு அவள் மீது பாய்ந்தது.

அடுத்த சில வினாடிப் பொழுதில் புலியின் மரண உறுமல் புலிக்குன்றில் எங்கும் எதிரொலித்தது.

எழிலி கண்களைத் திறக்க முடியாது திணறினள்: திக்குமுக்காடி கண்களைத் திறந்தாள். அவளால் பேச முடியவில்லை. தான் எங்கேயிருக்கிறோம் என்றுகூட அவளால் எண்ண முடியவில்லை. தான் பாறையிலிருந்து வழுக்கி வேங்கைக்கு அஞ்சி கிழே சாய்ந்தோம் பிறகு... அதற்குமேல் அவளால் ஊகிக்க முடியவில்லை. அதோ ஏதோ சொற்கள் மெல்ல கேட்கின்றனவே! நான் மரத்திலுள்ள கொடிகளில் சிக்கி படுத்திருந்தேனும்; யாரோ சொல்கிருர்களே 'யாரவர்கள்? கண்களைத் திறந்தாள் அவள் சிந்தை தெளிவு பெற்றிருந்தது. காவலர்கள் மன்னனிடம் கூறிக்கொண்டிருந்தனர். 'யார் இந்த மன்னர்? சேரமான் செங்குட்டுவரா?' ஆம் செங்குட்டுவர் தான்! அதோ விற்சின்னம் அணிந்திருக்கிருரே! ஏதோ கேட்கிருரே? என்ன வினவுகிருர்?

'பெண்ணே நீ யார்?'

'நான்...நான்.........'

மன்னன் மருத்துவரை வெறித்து பார்க்கிருன். மருத்துவர் குறிப்பறிந்து ஏதோ வேர் ஒன்றை எழிலியின் மூக்கருகே முகரும்படி பிடிக்கிருர். நல்ல நறுமணம் எழிலியின் மூக்கின் வழியே உள்ளத்தில், உடலில் பரவுகிறதே. மெதுவாக கண்களை உருட்டி உருட்டிப்பார்க்கிருள். மீண்டும் மன்னன் இடிபோன்ற குரலில் 'பெண்ணே நீ யார்?'

நான்........நான் திக்கற்றவள்?

திக்கற்றவள்? திசைகெட்டுத் தான் குன்றின் உச்சிக்குப் போனயோ?

'உயிர் வாழ விரும்பவில்லை அதனுல்......' அதனுல் நஞ்சிறக்கும் பச்சிலையை பறித்து உண்ண சென்றனையோ?'

இந்தச் சொற்கள் எழிலியின் உடலில் தீயை வாரி இறைத்தன. துவண்டவள் துடித்தாள். அமைச்சன் அழும்பில்வேள் மெதுவாக 'மன்னு இவள் பகைவனின் காதல் கிழத்தி' நேற்று போரில் தப்பி மறைந்தானே வளவன் அவன் இவளது பாதுகாப்பில்தான் இரவு தங்கியிருந்தான். அவனது உயிரை மீட்க இவள் புலிக் குன்றின் மீது நஞ்சிறக்கும் பச்சிலையைப் பறித்து வரச் சென்றுள். புலியின் தாக்குதலுக்குப் பயந்து கிழே விழுந்துவிட்டாள். இவள் விழுந்த வேகத்தில் இவள் பிதற்றிய வேதனை தோய்ந்த சொற்களில் இருந்து இவள் காதலனையும் சிறைப்பிடித்து வந்துள்ளோம் மன்னு!'

'ஐயோ' எழிலியின் குரல் துடி துடித்தது.

மன்னன் கொக்கேலிகட்டிச் சிரித்தான். சேரமான் பார்வையில் தப்பி வாழ இயலுமா? புல்லன், பொய்யன். புரட்டன், பூண்டோடு அவன் குலத்தை அழிப்பேன்!

'அரசே' பேசமுடியாது எழிலி திக்கினள் 'பெண்ணே என்னே நெஞ்சுறுதி! என் பகைவன்! அதுவும் போர்க்களத்தில் அப்படிபட்டவனுக்குப் பச்சிலைமருத்துவம் செய்ய, நான் தண்டிறங்கிய குன்றில் நள்ளிரவில் வந்திருக்கிருயே நீ? என்ன ஆணவம் உனக்கு?

'அரசே என்னைக்கொன்று காட்டில் வாழும் விலங்கினங்களுக்கு உணவளியுங்கள். ஆனல் என் நெஞ்சில் வாழும் தெய்வத்திற்கு வாழ்வளியுங்கள்!'

என்ன? கொடிய நாகத்தின் செயலை பொறுத்தருள இயலுமா? சேரன் ஆட்சியில் தீயவர்களை, பகைவர்களை பொறுத்தருள்வது முடியாது! நாளை ஆதவன் அடிவானத்தே தோன்றுமுன் இவர்கள் உடல் வட்டமிடும் கழுகுகளுக்கு விருந்தாகட்டும். பகைவர் பூண்டோடு ஒழிக்கப்பட்டனர் என முரசம் அதிரட்டும்!

'மன்னு'!

யாரது? புலவர் இடைகாடனரா?

ஆம்மன்னு! நும்மால்பேறுபெற்ற புலவன்தான்! நும் செவியை சற்று எனக்குக் கடன் தாருங்கள் தங்கள் முடிவு...'

'பரணி பாட சிறப்புற்றதா?' தரணி மதிக்காதே மன்னு?'

'ஏன்?'

'பெண்களுக்குத் தீமை புரியும் வழக்கம் சேர வம்சத்தில் இல்லை மன்னு? புகார் பொற்கொடி மதுரையில் வஞ்சிக்கப்பட்டாள் என்று துடி துடித்தீரே மன்னு!

'ஆம்'

நும்மை பெற்ற தாயின் வேண்டுகோளுக்கு ஒப்ப கங்கை வரையில் படைதிரட்டி மாதரசி நற்சோணை தேவியாரை புனித கங்கையில் நீராடச் செய்த நீர்......'

'ஆம் என்னைபெற்றவள் என்தெய்வம்' 'அந்த வழிவழிதானே வளவக்குடியினர். இதோ உன் முன்னல் காதலனின் உயிர் பிச்சை வேண்டும் மாதரசியை பொறுத்தருளாத தாங்கள் கண்ணகிதேவிக்கு எவ்வாறு விழா எடுத்தல் சரியாகும்?'

'அவள் குலப்பெண்' தன் கணவன் கள்வனல்லன் எனக் கூறத் தகுதி பெற்று மதுரையை எரித்தவள்'

'இவளும் தன் காதலன் உயிர் பெற மருத்துவம் செய்ய முற்பட்டாள்.'

'இவள் செய்கையும் கண்ணகி பெருமாட்டியின் செயலும் ஒன்ருகுமா?'

ஏன் ஆகக்கூடாது? கணவன் கள்வனல்லன் என அவள் போராடினுள். இவள் தன் காதலன் தோற்ருேடினவன் எனப் பெயர் வாங்கக்கூடாது என்று போராடினுள்.

'புலவரே'

'அரசே என் சொற்கள் உமது சிந்தையில் சினத்தை ஊட்டுவிக்குமானுல்......?'

'பொறுத்தருளுவா?'

'இல்லை என்னை நெருப்பிலிட்டுப் பொசுக்குங்கள்'

'என்ன! கொடுமை! புலவரே என்னை பொறுத்தருளுங்கள். இவள் என் மகள் வளவன் என் தாய்வழி வந்த எனது மருகன் போதுமா?

'பெருமைக்குரியவனே! பெரும் பேறு பெற்ருய்! 'சிறப்புற்றது உனது சிறந்த செயல்'

'அரசே' ஆனந்த களிப்பால் எழிலி இன்பத்தில் திளைத்தாள். மன்னன் செங்குட்டுவன் படைகளை வஞ்சியை நோக்கித் திரும்புமாறு கட்டளையிட்டான். மன்னன் கட்டளையை வள்ளுவன் படைகளுக்கு அறிவிக்க முரசு கொட்டினுன். அந்த வனந்திரமே அமைதி அமைதி என்று போரின் பயங்கரத்தில் தப்பி இன்ப வெள்ளத்தில் மூழ்கி தத்தளித்துக் கொண்டிருந்தது.

★

## வாசகர்களுக்கு விண்ணப்பம்.

ஜோஸ்ய கேள்விகள் நூற்றுக்கணக்கான வாசகர்களிடமிருந்து வருகின்றன. மிக மனவேதனையுடன் எழுதும் சிலருக்கு இதுவரை இலவசமாக நேரிலேயே பதிலளித்தோம். மற்றும் ஓர் சிலருக்கு மாத்திரம் அச்சிட முடிகிறது. இனி பதில் விவரமாக கேள்விகளுக்கு வேண்டுமானுல் 1 ரூ மணியார்டர் 'கணபதி ஜோஸ்யர்'க்கு நேராக அனுப்பவும். கூப்பனை வைத்துக் கேள்வியுமனுப்பவும். சக்தியுள்ளவர்கள் மாலா மூலம் பதிலைப்பெற்று உண்மையைப்பெற வேண்டும் என்பதே எமது நோக்கம்.

**கணபதி ஜோஸ்யர்,**

13, ப்ராமணத் தெரு. சென்னை-15.

# பண்பு தந்த பரிசு

காதப்ரியை

பரந்தாமன் காரியாலயத்தி லிருந்து வீட்டை அடைந்தான். பார்வதி, கதைகளில் குறிப்பிடு வதுபோல் காபியும் கையுமாய் அவனை எதிர்கொள்ளவில்லே. ஏனென்ருல் பரந்தாமன் காபி குடிப்பதில்லே. ஆனல் அவள் மலர்ந்த முகத்துடன் கடிதமும் கையுமாய் அவனை வரவேற் ருள்.

'கடிதம் எங்கிருந்து? உன் பிறந்த வீட்டிலிருந்தோ?' என்று கேட்டுக்கொண்டே சட்டையைக் கழற்றினன் பரந்தாமன்.

'ஏன் அப்படிக் கேட்கிறீர்கள்?'

'நானகக் கேட்கவில்லே. உன் முகத்தில் பளிச்சிடும் மகிழ்ச்சி தான் கேட்கவைத்தது' என்று கண் சிமிட்டினன் அவன்.

'ஓஹோ! பிறந்த வீட்டுக் கடிதம் என்ருல்தான் எனக்கு மகிழ்ச்சிபோல் இருக்கிறது!'

'உனக்கு என்ன? உன் இனத் தவருக்கேதான்!'

'கண்டு பிடித்தீர்களே, இம் மட்டும்; பெரிய உண்மையை! கடிதம் என் பிறந்த வீட்டி லிருந்து அல்ல, இந்தாருங்கள். உங்கள் மாமாதான் எழுதியிருக் கிருர்.'

'மாமா கடிதத்தில் மகிழ்ச்சியா?'— சிரித்தவண்ணம் கேட்டவன் கடிதத்தை வாங்கிக் கொண்டு உட்கார்ந்தான். பார்வதி உட்புறம் போய்விட்டுத் திரும்பி வந்தாள். கணவனின் முகத் தோற்றத்தைக் கண்டு திடுக்கிட்டாள்.

'ஏன் இப்படி அசந்து உட். கார்ந்து விட்டீர்கள்?'

'பின்னே என்ன செய்யச் சொல்கிருய்? எழுந்து கூத் தாடட்டுமா?'

'என்னைப்போல் நீங்களும் சந் தோஷப்படுவீர்கள் என்று நான் எதிர்பார்த்தால்......'

'மாமா பிளான் போட்டு செய் திருக்கிற வேலேகள் சந்தோஷப் படவேண்டியதுதான்!'

'நீங்கள் என்ன சொல்கிறீர் கள்?'

'நீ கடிதத்தைப் படித்தா யல்லவா?'

'ஓ படித்தேனே!...' நிலத்தை விலே பேசிவிட்டேன். நல்லவிலே; உடனே வந்து சாஸனத்தை முடித்துவிட்டுப் போகவும்' என்று எழுதியிருக்கிருர். நல் லதுதானே? நாமும் வருஷக் கணக்காக அதை விற்றுவிட வேண்டும் என்றுதானே சொல் லிக்கொண்டிருந்தோம்?'

'அது சரிதான். ஆனல் இந் தப் பேரம் மாமா மூலம் முடிவ தில் எனக்குக் கொஞ்சங்கூட விருப்பம் இல்லே.'

'ஏன் அப்படி?'

'மூன்ரும் வருஷம் நாம் ஊருக் குப் போயிருந்தபோது மாமா சொன்னதை உன்னிடம் சொன் னேனே, மறந்து விட்டாயா? அவர் பெண் அலமேலுவுக்குக் கல்யாணம் செய்யவேண்டும் என்றும், இரண்டாயிரம் ருபாய் கடனகக் கொடுத்து உதவ வேண்டும் என்றும் என்னைக் கேட்டார் என்றேனே?'

'ஆமாம். இரண்டொரு கடிதங் களில் கூடத்தான் ஜாடையாகக் குறிப்பிட்டிருந்தார். அதற்கும் இதற்கும் என்ன?'

'மண்டு. இது புரியவில்லேயே உனக்கு. என்னிடம் பணம் இல்லேயென்று கைவிரித்து விட் டேன். நிலத்தை விற்கவேண் டும் என்று நான் முயன்று கொண்டிருப்பது அவருக்குத் தெரியும். கன அக்கறையோடு

முனைந்து நின்று முடித்திருக்கிறார்.'

'அப்படியே இருக்கட்டுமே. இதில் தவறு என்ன? கிராமத்தில் யார் யாரோ சாப்பிட்டுவிட்டு நமக்கு நாமம் போடுகிறார்கள். ஆகவே நிலத்தை விற்பது அவசியம். நல்ல விலை என்பதிலும் சந்தோஷம். நம் கை ஓட்டை. பணம் வந்தால் தங்காது—'

'ஆகவே அதை மாமாவின் காலடியிலே வைத்துக் கும்பிடலாம் என்கிறாயாக்கும்!'

'படபடக்காதீர்கள். மாமா மிகவும் நல்லவர்'—

'ஆமாம். நீ மிகவும் கண்டாய்!'

பார்வதி சிரித்தாள். 'உங்கள் மாமாவைப்பற்றி உங்களைவிட எனக்கு என்ன தெரியும்? முன்பெல்லாம் நீங்கள்தான் அடிக்கடி சொல்வீர்கள். 'மாமா மிகவும் நல்லவர். என் அப்பாவும் அம்மாவும் என்னைச் சின்னப் பிராயத்திலே கண் கலங்கவிட்டுப் போனதற்கு அவர்தான் ஈடு கொடுத்தார். அவர் மார்மேலும் தோள்மேலும் நான் வளர்ந்தேன். என்னை ஆளாக்கி இந்த நிலைக்குக் கொண்டு வந்தவர் அவர்தான்' என்பீர்கள். ஆனால் ...அதெல்லாம் அப்போது. இப்போது......பணம் அல்லவா பேசுகிறது!'

'போக்கிரி! மூடு வாயை!' என்று அதட்டினான் பரந்தாமன். தொடர்ந்து, 'அதெல்லாம் சரிதான். ஆனால் நாணய விஷயத்தில் அவர் எப்படி என்பது எனக்கே இன்னும் தெரியாதே' என்றான்.

'எல்லாம் அந்த விஷயத்திலும் நல்லவராகத்தான் இருப்பார். ஊரார் சாப்பிடுவதைவிட மாமாவுக்கு உதவுவது ஒன்றும் குறைந்துவிடாது.'

'சரி சரி. நீ போய் உன் வேலையைக் கவனி!'

அதற்குமேல் அவனோடு பேசினால் விபரீதம் விளையும் என்று பார்வதிக்குத் தெரியும். ஆகவே அவள் மௌனமாக அப்பால் போய்விட்டாள். பரந்தாமன் துண்டை உதறித் தோளில் போட்டுக்கொண்டு மொட்டை மாடிக்குச் சென்று உலவத் தொடங்கினான்.

அவன் மனம் பல பல எண்ணமிட்டது. பார்வதியின் வாதத்திலே உண்மை இருப்பது மெல்ல மெல்ல அவனுக்குப்புலனாயிற்று அவ்வாறு நடந்துகொள்வது தான் நியாயம் என்றும் தோன்றிற்று: தனக்காக மாமா பட்ட பாட்டுக்குக் கடனாகப் பணம் கொடுத்து உதவுவது ஒரு பிரமாதம் அன்று என்றும், தோன்றிற்று. ஆயினும் இடை இடையே அந்த நினைப்பில் சலனம் ஏற்படவும் செய்தது. 'முடிந்தவரையில் பிடித்துப் பார்ப்பது. கடைசிப் பக்ஷமாக, திரும்பக் கிடைத்தாலும், கிடைக்காவிட்டாலும் போகட்டும் என்று ஆயிரம் ரூபாய் அளிப்பது, என்று முடிவு கொண்டான். சிறிது நேரத்திற்குப்பின் கீழே வந்து பார்வதியோடு சுமுகமாகப் பேசினான். மறுபடியும் அவள் அவனுக்கு இங்கிதமாக எடுத்துரைத்தாள். அவளுடைய நல்ல மனசை எண்ணி அவன் அகமகிழ்ந்துகொண்டான்.

மறுநாள் ஆபீசுக்கு லீவு போட்டுவிட்டு அவன் கிராமத்தை நோக்கிப் பயணப்பட்டான். 'மாமா மனசு புண்படும்படி நடந்துகொண்டுவிடாதீர்கள்' என்று படித்துப்படித்து எடுத்துக்கூறி அவனை வழியனுப்பினாள் பார்வதி.

★

பரந்தாமனின் ஊகம்பொய்க்கவில்லை. அவன் வரவை ஆவலோடு எதிர்பார்த்திருந்த அவன் மாமா அவனிடம் அன்பொழுகப் பேசினார். ஆகவேண்டிய அலு

வல்களை யெல்லாம் செய்தார். ஸாசனம் நல்லபடியாக நிறைவேறிற்று. இரண்டாயிரத்து முந்நூறு ரூபாய் பரந்தாமனின் கைககு வந்தது.

மாமா பணத்தைப்பற்றி அவனிடம் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. அது அவனுக்கே வியப்பாக இருந்தது. மாமாவின் மனைவி பரிந்து பரிந்து உபசரித்ததையும், மாமா குழந்தைகள் தன்னைச் சுற்றிச் சுற்றி வந்ததையும், மாமாவின் பெருந்தன்மையான போக்கையும் பார்த்தபோது அவனுக்குத் தன்மீதே ஆயாசம் ஏற்பட்டது.

சீ சீ! இத்தகைய அன்புமனிதர்கள் கோடி கோடியாய்க் கொட்டிக் கொடுத்தாலும் கிடைப்பார்களா? கேவலம் இரண்டாயிரம் ரூபாய்க் காசுக்காகக் குணக்குன்றுகிய மாமாவைப்பற்றி எவ்வளவு மட்டமாக எடைபோட்டுவிட்டோம்! 'நமக்குப் பார்வதி எவ்வளவோ மேல்' என்று பல பல எண்ணித் தன்னைத்தானே நொந்துகொண்டான். 'ஏன்? நாமாகவே மாமாவிடம் இந்த ரூபாயைக் கொடுத்துவிட்டால் என்ன?' என்றுகூட எண்ணிவிட்டான். தளதளவென்று வளர்ந்து நிற்கும் அலமேலுவைப் பார்த்தபோது அவனுடைய நல்ல எண்ணம் மேலும் வலுப்பெற்றது.

இரவு சாப்பாட்டுக்குப் பின் பேசிக்கொண்டிருந்தபோது மாமா சொன்னார். 'இந்த வருஷம் எப்படியும் அலமேலுவுக்குக் கல்யாணத்தை நடத்திவிட வேண்டும் என்று இருக்கிறனடா பரந்தாமா. 'நல்ல வரன்கூடத் திகைந்துவிட்டது' என்று அவர் கூறிக்கொண்டிருந்தபோது அவனுக்கு நெஞ்சு வரையில் வார்த்தை வந்துவிட்டது, 'அதற்கு என்ன மாமா? நீங்கள் முன்பு கேட்டபடி என்னிடம் உள்ள இரண்டாயிரத்தையும் எடுத்துக் கொள்ளுங்கள்' என்று சொல்ல நினைத்தான். அதற்குள் மாமாவின் கடைக்குட்டிப் பையன் கால் இடறி முற்றத்திலே விழுந்துவிட்டான். நல்ல வேளையாகக் காயம் அதிகம்படவில்லை. ஆயினும் சூழ்நிலையிலே ரகளையும் ஒரு மாற்றம் ஏற்படத்தான் செய்தது. அந்த அமளி அடங்கியபின் பேச்சுப் பல வழிகளில் பற்றிப் படர்ந்தது.

பரந்தாமன் ஊருக்குக் கிளம்பினுன். அப்போது மாமா அவனிடம் ஒரு நீண்ட காகிதத்தை நீட்டினுர். வாங்கிப் பிரித்துப் பார்த்தான். ஸ்டாம்பு ஒட்டிக் கையெழுத்திடப்பெற்ற பிராமிசரி நோட்டு. மாமா அவன் பேருக்கு எழுதியிருந்தார். ஒரு நிமிஷம் அவன் தடுமாறினுன், மறு நிமிஷத்தில் சமாளித்துக்கொண்டு தன்னிடம் இருந்த இரண்டாயிரம் ரூபாயையும் அந்தப் புரோநோட்டையும் அவரிடம் கொடுத்தான்.

'நோட்டு எதற்கு மாமா? அதுவும் நீங்கள் எனக்கு எழுதித் தருவதா? பார்க்கப் போனுல் இந்த ரூபாயைத் திருப்பிப் பெருத முறையிலேயே கொடுத்து அலமேலுவின் கல்யாணத்தைச் சிறப்பாக நடத்தி வைக்கவேண்டிய கடமை உள்ளவன் நான்'— என்ருன்.

அவன் பேச்சை முடிக்குமுன், 'சேசே அவரவர்களுக்கும் பெண்டாட்டி பிள்ளைகுட்டி என்று இருக்கிறபோது அப்படியெல்லாம் முடியுமா? கடனுகக் கொடுப்பதே பெரிய உதவிதான் ஆயிற்று. இன்னும் நாலைந்து வருஷம் போனுல் உன் பெண் பிரேமாவுக்குநீயும் கல்யாணஏற்பாட்டில் முனைய வேண்டியவன் தானே? அதற்குள் இதை நான் திருப்பிக் கொடுத்துவிடுவேன் என்று நினைக்கிறேன்' என்ருர் மாமா.

'சரி, நான் வருகிறேன்' என்று கிளம்பினுன்பரந்தாமன். 'இதை எடுத்துக்கொண்டு போ' என்று அந்தப் புரோநோட்டை அவனிடம் நீட்டினுர் மாமா.

'நான் மாட்டேன்; எனக்கு அது வேண்டாம்' என்று குழந்தைபோல் மறுத்தான் பரந்தாமன்.

'நான் சொல்வதைக் கேளப்பா. தாயும் பிள்ளையு மானாலும் வாயும் வயிறும் வேறு என்பார்கள். மனித காயம் அநித்தியம். நெருப்பு என்றதினாலேயே வாய் வெந்துவிடாது. நாளைக்கே எனக்கு ஒன்று நேர்ந்து விடுகிறது என்று வைத்துக்கொள். என்பிள்ளைகள் உன்னிடம் நியாயமாக நடந்துகொள்வார்கள் என்பது என்ன நிச்சயம்? பேசாமல் நான் சொல்வதைக்கேள்' என்று வற்புறுத்தினார் மாமா. ஆனால் பரந்தாமன் அதை மறுத்துவிட்டே கிளம்பி விட்டான்.

'சரி சரி நீ போ. நான் ரிஜிஸ்டர் தபாலில் இதை உனக்கு அனுப்பிவைக்கிறேன்' என்றார் அவர்.

'நான் அதை உங்களுக்கே திருப்பி அனுப்பிவிடுகிறேன்' என்று சிரித்தவண்ணம் சொல்லிக்கொண்டே போனான் அவன்.

★

ரெயிலில் போகும்போது அவன் மனம் எண்ணிற்று; 'மாமாவிடம் இத்தனை அன்போடும் பக்தியோடும் நடந்துகொள்ளும்படி நமக்குத் தோன்றியது எதனால்?' என்று. அடி நாளிலிருந்தே அது தன் இயல்பு தான் என்று சிறிது திருப்தி செய்துகொண்டான். மறு கணத்திலேயே அது அவ்வளவு உண்மை அல்ல என்று அவன் உள் மனம் கூறிற்று. 'ஆம். நல்ல உள்ளம் படைத்த பார்வதியின் பண்பு நிறைந்த உபதேசம்தான் இப்போதைக்கு—இன்றைய நம் மன நிலையின் மாற்றத்திற்கு—காரணம்; என்று தனக்குத் தானே நிறைவு செய்துகொண்டான். அந்த எண்ணத்தை ஒட்டி



அவன் மனம் பார்வதியின் நல்ல இயல்புகளைப்பற்றி எண்ணமிடத் தொடங்கிற்று.

மாயூரம், விழுப்புரம் இரண்டு இடங்களிலும் அவன் இறங்கி ஏறினான். மாயூரத்தில் அவன் தங்கையும், விழுப்புரத்தில் அவன் தமக்கையும் இருந்தார்கள். அவர்களைப் பார்த்துவிட்டு அங்கங்கே ஒவ்வொரு நாள் தங்கிவிட்டுச் சென்னையை அடைந்தான்.

★

பார்வதி அன்னை அன்போடு வரவேற்றாள். ஊர்ப்புறங்களில் உள்ள உறவினர்களின் யோக க்ஷேமம் பற்றிக் கனிகரமாக எல்லாம் விசாரித்தாள். அவனும் அலுப்பைக்கூடப் பாராட்டாமல் அவளுடைய கேள்விகளுக்கெல்லாம் அவள் முகத்தையே பார்த்தபடி பதில் இறுத்தான். அவனுடைய பார்வையிலே புதிய ஒளியும் அதிக அன்பும் பளிச்சிடுவதை அவள் உணர்ந்தாள்; மகிழ்ந்தாள். புத்திசாலியானதால் அதைப்பற்றி அவனிடம் ஒன்றும் கேட்கவில்லை.

ஆனால் அவன் உள்ளம் துடியாய்த் துடித்தது. அவளைப் பாராட்ட வேண்டுமென்று 'நீ எனக்கு மனைவியாக வாய்த்தது நான் செய்த புண்ணியம் என்று சொல்லலாமா?' என எண்ணினான். ஆனால், அது நாடக மேடைச் சம்பாஷணைபோல் இருக்குமோ?' என்று தயங்கினான்.

அதே சமயத்தில் அவள் அந்தக் கேள்வியைக் கேட்டாள். 'எல்லாம் சரி. பணத்தை என்ன செய்தீர்கள்?' மாமாவுக்குக் கொடுத்தீர்களா? என்று.

மனம் என்பது குரங்கு என்று சொல்வார்கள். பரந்தாமனின் மனமும் அப்போது திடீரென்று குரங்கின் நிலையைத்தான் பெற்றது. சற்றுமுன் பார்வதியைப் பாராட்டவேண்டும் என்று நினைத்தவன் இப்போது அவளிடம் சற்று விளையாடவேண்டும் என்று நினைத்தான். சிறிது நேரம் அவளை ஓடவிட்டு வேடிக்கை பார்க்கவேண்டும் என்று ஆசைப் பட்டான்.

'உம்...என்ன பேசாமல் இருக்கிறீர்கள்? நான் கேட்டது காதில் விழவில்லையா?'

'விழுந்தது பார்வதி. மாமாவுக்கு நான் பணம் கொடுக்கவில்லை.'

இதைக் கேட்டதும் அவள் முகம் வாடிவிட்டது. 'ஏன்? அவ்வளவு தூரம் நான் சொன்னேனே?' என்றாள்.

'சொன்னாய், நீ சொன்னால் நான் அதன்படியே நடந்து கொண்டு விடவேண்டுமென்பது என்ன கட்டாயம்?'— பேச்சுக்கு ஏற்ற முறையில் முகத்தையும் சிறிது மாற்றிக்கொண்டான்.

'மாமா கேட்கவில்லையா?'

'கேட்டார், நான் மறுத்துவிட்டேன்.'

பார்வதி சூள் கொட்டினாள். 'உங்கள் இஷ்டம், நான் என்ன சொல்லமுடியும்? நல்ல காரியத்திற்காக அவர் கேட்டார். கொடுக்கவேண்டிய கடமையும் உங்களுக்கு இருக்கிறது. உற்றார் உறவினர் இம்மாதிரி சமயங்களுக்கு இல்லாமல் வேறு எதற்கு?... உங்கள் மறுப்பினால் அந்தக் குழந்தையின் கல்யாணம் தடைப்படுவதோ, அதனால் மாமா மனசு புண்படுவதோ கொஞ்சமும் சரியில்லை. இப்பொழுதும்கூட ஒன்றும் முழுகிவிடவில்லை. 'இன்ஷுர்' செய்து அனுப்பிவிடலாம் என்று சொல்லிக்கொண்டே அவள் எழுந்தாள். அவன் அவள் கரத்தைப் பற்றினான்.

'மாயூரத்தில் பத்மா வீடு வாங்கப் போகிறாளாம். பணம்

சென்னை மற்றும் தென்னகமெங்கும்
வெற்றிகரமாக நடைபெறுகிறது.

★

வைஜயந்திமாலா,

எம். ஜி. ராமச்சந்திரன்

நடிக்கும்.

★

சதர்ன் மூவீஸ்

# பாக்தாத் -
# - திருடன்

★

டைரக்‌ஷன் T. P. சுந்தரம்

ஸ்டூடியோ . கோல்டன்

பூரண உரிமையாளர் :

கோல்டன் பிலிம் (பிரைவேட்) லிமிடெட்.

குறைகிறது என்று கேட்டாள். கொடுத்துவிட்டேன்' என்று சொல்லிக்கொண்டே அவள் முகத்தை ஓரக்கண்ணால் பார்த்தான் அவன்.

அவள் சட்டென்று திரும்பினாள். அவளுடைய முகத்திலே சிறிது மலர்ச்சி தென்பட்டது. 'அப்படியா!... அதுவும் நல்ல காரியந்தான். நம்ம பிரேமா வேறு பத்மா வேறு அல்ல. ஆனாலும் முக்கியத்துவம் அலமேலுவின் கல்யாணத்திற்குத்தான். நடந்தவரையில் சரி... எழுந்து வாருங்கள். வெந்நீர் ஆறிவிடும்' என்றாள்.

பரந்தாமன் மோவாயில் விரல் வைத்து வியப்போடு அவளை நோக்கினான்.

'என்ன பார்க்கிறீர்கள்?'

'நீ மனிதப் பிறவிதானா என்று தான்.'

பார்வதி கலகலவென்று சிரித்தாள். 'ராக்ஷஸி மாதிரி இருக்கிறேனா?'

'இல்லை, தெய்வப்பிறவி!... பார்வதி, உண்மையைச் சொல்லட்டுமா? பணத்தை மாமாவுக்கும் கொடுக்கவில்லை. பத்மாவுக்கும் கொடுக்கவில்லை. கையிலேயே கொண்டுவந்துவிட்டேன் என்றபடி சட்டைப் பையிலிருந்து மேஜைமேல் எடுத்துப் போட்டிருந்த கவர், டைரி முதலியவைகளை எடுத்தான். மடித்தபடி இருக்கிற நூறுரூபாய் நோட்டுக்களை அவளுக்குக் காட்டி மேலும் அவளைச் சோதிக்க எண்ணினான். மாமாவுக்குக் கொடுத்த இரண்டாயிரம் போக மீதி இருந்த நூறு ரூபாய் நோட்டுக்கள் மூன்றையும் கவருக்குள்ளோ டைரிக்குள்ளோ வைத்திருந்தான். மடித்தபடி காண்பித்தால் அவள் ஏமாந்துவிடுவாள் என்பது அவனுக்கு.

'பொய் பித்தலாட்டம் முதலியவை நன்றாகப் படிந்திருக்கின்றனவே!' என்று கன்னத்திலே கை வைத்துக்கொண்டாள் பார்வதி.

பரந்தாமன் அவசர அவசரமாகக் கவருக்குள்ளிருந்த காகிதங்களை வெளியே எடுத்தான். அவன் முகம் கவலையைத் தோற்றுவித்தது. எல்லாக் கடிதங்களையும் பிரித்துப் பிரித்துக் கீழே போட்டுவிட்டு டைரியைத் திறந்தான். அதிலும் ரூபாய் நோட்டுக்கள் காணப்பெறவில்லை. டைரி அட்டையின் மடிப்பு, கள்ள அறை முதலியவற்றைப் பார்த்துவிட்டுப் பாய்ந்து மணிபர்சை எடுத்தான் துருவித் துருவி ஆராய்ந்தான். ஊஹூம்!

'பார்வதி!' என்று அலறினான். அவன் கைகள் நடுங்கின.

'ஏன்? என்ன?'— பார்வதி பதறினாள். 'பணத்தைக் காணவில்லையா? விளையாடுகிறீர்கள் என்றல்லவா நினைத்தேன்?'

'இல்லை பார்வதி. உண்மையாகவே பணத்தை எங்கோ தொலைத்து விட்டேன்: ஆனால்...'

'ஆனால்...?'

'முழுப்பணமும் அல்ல: முந்நூறு ரூபாய் போய்விட்டது! எங்கே தொலைந்தது, எப்படித் தொலைந்தது? என்பது புரியவில்லை.

'முந்நூறு?... பாக்கி இரண்டாயிரம்?'

'மாமாவுக்குக் கொடுத்துவிட்டேன் பார்வதி'

'அப்பாடா—' நீண்ட பெருமூச்சுடன் கடவுளை நினைந்து கரம் குவித்தாள் பார்வதி. அவள் முகத்திலே முழு மலர்ச்சி இருந்தது.

'கிடக்கிறது, தள்ளுங்கள். தலைக்கு வர இருந்தது தலைப்பாவோடு போயிற்று!'

'நல்ல கதை! வெகு சுலபமாகச் சொல்லிவிட்டாயே! ஒரு காசா, இரண்டு காசா?'

'உண்மைதான். ஆனால் நீங்கள் இப்போது இன்னும் ஒன்றை எண்ணிப்பார்க்க வேண்டும். பதருதிர்கள். மாமாவுக்கு உதவாமல் இருந்திருந்தால் முழுவதுமே போயிருக்கும் அல்லவா?'

பரந்தாமன் மௌனமாக நாற்காலியில் சாய்ந்தான். 'உண்மைதான், என்றது அவன் உள்ளம். தொடர்ந்து பார்வதியின் நல்ல மனசைப்பற்றி அவன் மீண்டும் ஒரு முறை எண்ணமிட்டான்.

உள்ளே சென்றிருந்த பார்வதி திரும்பி வந்தாள். 'என்ன இப்படி மலைத்து உட்கார்ந்து விட்டீர்கள்? ஆபீசுக்கு மட்டமா?' என்றாள்.

அவளுடைய கல கலப்பான பேச்சு அவனிடம் சிறிது தெம்பை உண்டு பண்ணிற்று. நிமிர்ந்து உட்கார்ந்தான். இன்றைக்கும் சேர்த்துத்தான் லீவு எடுத்திருக்கிறேன். ஆனால் ஆபீசுக்குப் போய்விடலாமா என்று தோன்றுகிறது.

'ஏன்?'

'அங்கே போனால் சூழ்நிலை மாறும். மனம் வேலையில் ஈடுபடும். இங்கே இருந்தால் பணம் தொலைந்த விஷயமே மனத்தை உறுத்திக்கொண்டிருக்கும்.'

'இதோ பாருங்கள். உள்ளதில் ஒன்றும் குறையாது என்ற வசனம் பொய்யில்லை. மாமாவிடம் கொடுத்திருக்கிற பணம்தான் நம்முடையது கெட்டுப்போனது யாரிடம் அகப்பட்டதோ அவர்களுடையது. அந்த அளவில் மனசை நிம்மதிப்படுத்திக் கொண்டு எழுந்து குளிக்க வாருங்கள். சாப்பிட்டுவிட்டுப் படுத்து ஓய்வு எடுத்துக்கொள்ளுங்கள்.'

'நீ மிகவும் பொல்லாதவள் பார்வதி. நூறு வயசு ஆனவர்கள்—வாழ்க்கையிலே இன்ப துன்பங்களை நிறையப் பட்டுத் தேறியவர்கள்—மனநிலை எப்படியிருக்குமோ அப்படியிருக்கின்றன உன் மனசும் பேச்சும். அக்காவிடமிருந்து பிரேமாவை அழைத்து வந்துவிட வேண்டும். அடுத்த வருஷம் முதல் அவள் இங்கேயே படிக்கட்டும் நம் மோடேயே இருக்கட்டும்.'

பார்வதி சிரித்தாள். 'திடீரென்று பிரேமாவைப் பற்றி என்ன இப்போது?'

'உன் குணங்களெல்லாம் இப்போதே பிடித்து அவளுக்கும் படியவேணடும் என்றுதான்.'

பார்வதி பதில் ஒன்றும் சொல்லவில்லை. உள்ளே போய்விட்டாள். பரந்தாமனும் எழுந்து அவளைத் தொடர்ந்தான்.

சாப்பாடு முடிந்து பரந்தாமன் கை கழுவவும் வாசலில் தபால்காரன் குரல் கொடுக்கவும் சரியாக இருந்தது.

ரிஜிஸ்டர் — மாமாவிடமிருந்துதான். பரந்தாமன் பிரித்துப் பார்த்தான்—'பொல்லாத மனிதர்! சொன்னபடியே புரோநோட்டை ரிஜிஸ்டரில் அனுப்பி விட்டாரே!' என்று சொல்லிக் கொண்டே, ஆனால்......

உறைக்குள் புரோநோட்டு இல்லை. இரண்டாயிரம் ரூபாய்க்கு 'டிராப்டு'ம், கடிதமும் இருந்தன.

'சிரஞ்சீவி பரந்தாமனுக்கு அநேக ஆசீர்வாதம். உபய க்ஷேமம். உன்னுடைய நல்ல மனசையும் கைராசியையும் நான் என்னவென்று புகழ! எப்போதோ அலமேலுவின் பேரில் லாட்டரிச் சீட்டு ஒன்று எடுத்திருந்தேன். அதில் ஐயாயிரம் ரூபாய் கிடைத்திருக்கிறது. அலமேலுவின் கல்யாணத்தை நன்றாகவே நடத்திவிடலாம். உன் தொகையை என் ஆசிகளுடன் அனுப்பியிருக்கிறேன். பெற்றுக் கொள்ளவும்—'

—தம்பதிகள் மகிழ்ச்சியோடு ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். ★

# காதலும் கிளி வேட்டையும்

குபேரன்

அவள் ஓர் அழகி !

எழில் மிகு உருவும், பார்க்க மகிழ்ச்சி தரும் கவர்ச்சி நிறைந்த நோக்கும் உடையவள். பேச்சிலே தேறலின் சுவையும், மென்னகையிலே அலர்ந்த மலரின் புதுமையும் எப்பொழுதும் அமைந்து அருகிருப்பவர்களை அடிமைப்படுத்தி விடும் பான்மையள். பெண்களே அவள் விழியின் வீச்சிலே மயங்கி விடுவார்கள் என்றால் மற்றவரைப் பற்றி கேட்க வேண்டுமா ?

அவள் கண்ணடிப்பட்டு, அவளின் காந்தப்பார்வையிலே கருத்திழந்து, தன்னை மறந்த லயந்தனில் அவளைக் காதலித்தவன் அவள் அண்டை வீட்டு ஆணழகன். ஆனால் திருமணம் நடக்க இருவருக்குமே அதிர்ஷ்டமில்லை. பலவித காரணங்கள் காண்பித்து அவர்களின் பெற்றோர்கள் இத் திருமணத்திற்குத் தடை விதித்தனர். தடை மட்டுமா ? இவள் விரும்பாத ஒருவனைப் பார்த்து அவனுக்கு இவளை மண முடித்து பெற்ற பெண்பால் தங்கள் கடமையைத் தீர்த்துக் கொண்டனர் அவளுடைய பெற்றோர்கள்.

கணவன் நெஞ்சகத்தே புகுமுன், அவன் வீட்டிலே புகுந்த அவள் இதயத்தே அனலெனப் புகுந்தது துயரம். காதலித்தவன் கருத்திலே களிக்க, கைப் பிடித்தவன் அவள் உடலிலே களிக்க முயற்சித்தான். உள்ளம் ஒத்துழைக்காத நிலையிலே உடல் மரக் கட்டையாக, கல்லாக நிலைக்கக் கணவன் சுகமில்லை என்று ஒதுங்கி விட்டான்.

சோலையாகக் கருதிய வாழ்வு பாலையாகி விட, சுகம் துன்பத்தில் முடிய அவள் வாழ்வு செத்து விட்டது. ஆனால் சிறிது காலத்திற்குப் பின் வெளியூர் சென்றிருந்த அவள் காதலன் திரும்பினான். மீண்ட சொர்க்கமாக மாறியது அவள் வாழ்க்கையும். முன்னாள் உறவு இனிய நினைவுகளாகத் துன்புறுத்த, இன்னாள் கசப்பு உறுதி ஊட்ட ஓடியா இன்பம் பெற அவர்கள் அயரா முயற்சி கொண்டனர். கணவனின் பரா முகம் பக்கத் துணை செய்ய மறைவிடங்களிலே உறைந்து திரி சங்கு சொர்க்கம் போன்ற அவர்களாகவே சமைத்துக்கொண்ட இன்ப புரியிலே உல்லாஸ வாழ்க்கை வாழ்ந்தனர். உரியதைவிட உரிமையற்றதை அனுபவிப்பதில் ஆனந்தம் வேறு; தன் திறமையைக் குறித்து கர்வமும் மகிழ்ச்சியும் வேறல்லவா உண்டாகிறது !

ஒரு நாள்—

மலர் கொய்ய மங்கையர் பலருடன் உபவனம் சென்றனர் இவளும் இவள் தோழியும்.

தங்களினும் அழகாக அசைந்தாடும் பெண் கொடிகளைப் பார்த்து வெட்கிய மலர்க்கொடிகள், அவமானம் தாங்காமல் மலரினும் மெல்லிய மங்கையராதலால் தங்கள் மலர் மாரியாலேயே ஊறு விளைவித்து பழி தீர்த்துக் கொள்ளலாம் என்று நினைத்தோ அல்லது அவர்கள் எழிலில் மயங்கி காணிக்கையாகவோ பூக்களைச் சொறிந்தன. வண்ண வண்ணமான மலர்களைப் பறித்து வரிசைப் படுத்தி, தொடுத்து அணியும் ஆசையிலே மயங்கிய அம் மங்கையர் தங்கள் தலைவி என்ன செய்கிறாள் என்று கூட கவனிக்கவில்லை.

இச் சந்தர்ப்பத்தைத் தான் எதிர்நோக்கிக் காத்திருந்த தலைவி மெய்த் தோழியைக் காவல் வைத்து விட்டு கொடி வீட்டை அவளுடைய இன்ப புரியின் இளவரசின் இருப்பிடத்தை அடைந்தாள்.

அங்கே :—

சிந்தூர செப்பிதழிலே பதித்த இன்ப முத்திரை; குலைந்து சரிந்த கூந்தல்; ஆணி முத்து வியர்வையிலே அழிந்த திலகம்; காதலியின் கருத்தறிந்த காதலனின் நகம் நடந்த தவ நவமான குறிகள் அவள் பெற்ற இன்பத்தின் பேருக இலங்கின

நிறையழிந்த பெண்மை, உணர்ச்சியால் உந்தப்பட்டு, அறிவு மயங்கி செய்வதறியாது அணைத்தும் விடுத்தும் விளையாடும்போது கைவளையாடும் ஓசையிலே அவள் ஆசையின் நிறைவு குமிழியிட்டது. வந்த காரியம் மலர் கொய்வது தான் வியாஜமானாலும் அதையும் மறந்து அவனுக்கு இன்ப போதை அளித்துக் கொண்டிருந்தது அந்தப் பெண்மை.

இருவரும் இவ்வுலகிலே இல்லாது ஒருவர்க்கொருவர் அருளும் உலகிலே இருக்கும்போது—

தலைவியின் நாத்தி வந்தாள். உண்ணும் விருந்திலே எண்ணமெல்லாம் ஒன்றிட, அல்லாததை அறவே மறந்த தலைவிக்கு இது தெரியாது. தலைவியின் நல்வாழ்விலே அக்கறை கொண்ட தோழி இதை கவனித்தாள். எந்த நிமிஷமும் நாத்தி மதனியைக் கவனித்து விடுவாள், தலைவியின் வளை ஓசை அவ்வளவு கொடுமையாகக் கேட்கின்றன. காதலின் விளைவான வளை ஒலியும், இன்ப விளையாட்டின் இன் முத்திரைகளும் அவளைக் காட்டிக் கொடுத்து கெடுத்து விடுமே என்று கவலைப்படுகிருள்.

அவள் கற்பனையிலே பூத்தது கிளி வேட்டை — அதுவும் உபவனக் கிளிவேட்டை சொல்லிலே மலர்ந்தது.

அவள் கூறுகிருள் "சிவந்த இதழைக் கொவ்வைக்கனியென ருசித்து விட்டது. பிடிக்க வேண்டும் என்ற ஆசையின் வேகத்திலே அலைந்து குலைந்த கூந்தல். முத்து வியர்வையிலே அழிந்த திலகம், முட்களால் திண்டப்பட்ட உடல், இவ்வளவு கஷ்டப்பட்டும் உனக்குக் கிளி கிடைக்கவில்லை. நீ வந்த காரியத்தையும் — மலர் கொய்வதையும்—உன் நாத்தி செய்து விட்டாள். நீ ஏன் வீணில் அலைகிருய். என்று பொதுவாக நாத்திக்கும் "உன்னுடைய மெய்யோ நீ அனுபவித்த இன்பத்தின் மெய்த்தன்மையை காட்டும் கண்ணுடியாக காட்சி அளிக்கிறது. உன் கைவளைகளின் ஒலியோ, எதிர்பாரா இடத்திலிருந்து பிறப்பதால், ஆச்சரியத்தை விளைவித்து உன் நாத்தியின் ஆவலைத் தூண்டி விடும்போல் இருக்கிறது. சீக்கிரம் உன் காதலனை விட்டு விட்டு கிளி வேட்டையைப் பற்றி கொந்து கொண்டே பிறர் நம்பும் வகையில் வெளியே வா" என்று தலைவிக்கும் உணர்த்துகிருள்.

மேலே குறிப்பிட்ட சித்திரத்தை மஹாகவி காளிதாஸன் சொற்சுவை, பொருட் சுவை செறிந்த ஒரு கவிதையாக்கித் தருகிருர். அவருடைய புஷ்பபாண விலாஸமென்னும் சிறு காவியத்தில். சாகுந்தலம் காளிதாஸன் தானு இதனுடைய ஆசிரியரும் என்பதில் கருத்து வேற்றுமை இருந்தாலும், சம்போக சின்னங்களை வேட்டையின் விளைவான குறிகளுடன் உவமித்து கூறும் கவித்தன்மை உணர்ந்து அனுபவித்து ஆனந்தப்பட வேண்டிய ஒன்ருகும். இம்மாதிரியான பல பல உணர்ச்சிகளை வெளியிடும் ஒரு கதம்பமாக, நறுமணம் வீசும் கதம்பமாக அளித்திருக்கிருர்.

★




வாசகர்களே !

உங்கள் வாழ்க்கையின் சமீப எதிர்காலத்தைப் பற்றி இரண்டு கேள்விகளுக்கு நமது "கணபதி" ஜோஸ்யர் இனமாகப் பதில் தருகிறார்.

இதோ, மேலிருக்கும் "ஸ்ரீ மகா கணபதி" மிகவும் சக்தி வாய்ந்த மூர்த்தி. உச்சிஷ்ட மகா கணபதியாகும். இவரை ஆராதித்து உபாஸனை செய்துவரும் நமது "கணபதி ஜோஸ்ய"ரின் வாக்கு மிகவும் பலிதமாகவே இருக்கிறதென்று அனைவரும் அனுபவத்தில்கூறுகிறார்கள். ஜோதிடத்தில் நம்பிக்கையுள்ள வாசகர்கள் மட்டும் கீழேயுள்ள கூப்பனைப் பூர்த்தி செய்து தனித்தாளில் கேள்விகளையும் எழுதி அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம். ஜாதகம் இருந்தால் அவசியம் அனுப்பி வைக்கவும். கூப்பன் இல்லாது வரும் கேள்விகள் கவனிக்கப்படமாட்டா. அந்தந்த மாதக் கூப்பனை பூர்த்தி செய்து பிரதி மாதம் 30-ம் தேதிக்குள் அனுப்பிவிடவேண்டும். பின்னர்வரும் கூப்பன் கவனிக்கப்படமாட்டாது.

—ஆசிரியர்.

இங்கே கூப்பனைக் கத்தரிக்கவும்.

## 1960 ஜூலை மாதக் கூப்பன்

என் சமீப, எதிர் காலத்திய 2 கேள்விகளைத் தனித்தாளில் எழுதி இத்துடன் வைத்துள்ளேன்.

என் பெயர்....................................................................

தற்போதைய விலாசம்....................................................

உத்தியோகம் ...............................................................

கேள்விகள் எழுதின தேதி...............................................

,, ,, நேரம்.....................................................................

நான் விரும்பும் புஷ்பம்...................................................

108-க்குள் நான் கூறும் எண்...........................................

(நக்ஷத்திரம் தெரிந்தால்)..................................................

என் பிறந்த நக்ஷத்திரம்...................................................

என் தற்போதைய வயது....................................................

கூப்பன் அனுப்ப வேண்டிய விலாசம்:

**கணபதி ஜோயர், c/o "மாலா"**

சதர்ன் அவின்யு, ஆழ்வார்பேட்டை, மதராஸ்-18.

சார்வரி
ஆடி

# ஆடி மாத ராசி பலன்

(கணபதி ஜோஸ்யர்: 18, ப்ராம்மணத் தெரு, சைதாப்பேட்டை, சென்னை-15)

**மேஷ ராசி:** அசுவதி, பரணி, கார்த்திகை 1ம் பாதம் தேக சுகம் திருப்திகரமாக யிருக்கும். இம்மாத முற்பகுதியில் யத்தனங்கள் பலிக்க தாமதம். ஆகவே சற்று மன சஞ்சலம். பிற்பகுதியில் வெற்றி. தன வசதி ஏற்பட, எதிர்ப்பின்றி கார்யாநுகூலம். உத்தியோகத்தில் கிடைத்துள்ள மேற்பதவியில் உழைப்பும் பொறுப்பும் அதிகம். வ்யாயாரத்தில் க்ரெடிட்டில் அதிகம் நடைபெற, கடனில்லா வ்யாபாரம் குறைவு, பண்டங்கள் இல்லாக்குறைவாலும் வரவேண்டிய லாபம் ஓரளவு குறையும். தொழிலில் சேவகர்கள் அடிக்கடி ரஜாவில் போவதால், கார்யங்கள் பூர்த்தியாக தாமதம். ஸ்பெகுலேஷன் பந்தயம் மூலம் திடீரென நஷ்டம் இருக்கும். போட்டியில்லாமலிருப்பது நன்று. காண்ட்ராக்ட் ஏஜென்ஸி கிடைப்பதுபோல் தோன்றி, ஏமாற்றம் மாத முற்பகுதியில் இருக்கும். விவாகம் நடைபெருமலிருந்த சிலருக்கு, இப்பொழுது தீர்மானிக்கப்பட்டு ஸெப்டம்பரில் நடைபெறலாம். விவகாரம் எதிரிக்கே சாதகமாகும். முருகனை வணங்கின் நன்று. இல்லையேல், ஆஞ்சனேயரை வணங்கவும்.

**ரிஷப ராசி:** கார்த்திகை 2, 3, 4 பாதங்கள், ரோஹிணி மிருக சீரிஷம் 1, 2, பாதங்கள். தேகசுகம் மிக திருப்திகரமாக யிருக்கும். நீண்ட நோயால் வாடுபவரும், இம்மாதம் ஸ்ரமபடார். ஆனல் அடிக்கடி கோபமும், குடும்பத்தில் மனஸ்தாபமும், வெறுப்பும்ஏற்படும். மனைவி வெளியூர் செல்வதால், தற்காலீகமாக பிரிவு ஏற்படலாம். யோஜனையின்றி திடீரென செய்யும் காரியங்களால் உதாரச் சிலவுகளதிகம். உத்யோகம் ஏற்படவோ, உயரவோ நன்று. வரும்படியதிகமாகும். வியாபாரம் வலுவடையும், தொழில் முன்னேறவும் அரசாங்க மூலம் நற்செய்தி பெறவும், சிறு பிரயாணங்கள் செய்யவும் நேரலாம். ஸ்பெகுலேஷன், லாட்டரி மூலம் லாபமேற்படலாம். விவாஹ விஷயமாக செய்யும் முயற்சிகள் கைகூடி வரலாம். விவகாரம் ஜயமானலும், எதிரி அப்பீல் எடுக்கவும், மேலும் தொடரவும் நேரும். தை மாதத்தின் பின்பே நன்று. படிப்பில் தேர்ச்சியடையாதவர்கள் ஸெப்டம்பரில் செல்லலாம். தெய்வாநுகூலம் இருக்கக்கூடும். வீடு விற்கவோ, மாறவோ நேரலாம். தம்பிக்கு தேகசுகக் குறைவு, மாதா சிறு ப்ரயாணம், புத்ரர்களுக்கு எதிர்ப்பின்றி இனி ஜயம். மஹாலக்ஷ்மி ஸ்தோத்ரம் படிக்கவும்

**மிதுன ராசி:** மிருக சீரிஷ 3, 4 பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 பாதங்கள் தேகசுகம் மேலும் பாதிக்கப்படவும் கண் வலி பல் வலி யிருக்கவும் நேரும். கட்டுக்கடங்காத சிலவால், கடனேறலாம் சில மாதங்களில் அஷ்டமச்சனியும், அஷ்டம குருவும் வரக்கூடுமாதலால் தற்கால நற்பலனை பயன்படுத்தி, படாடோபச் சிலவுகளை குறைத்து, தனத்தை மீற்றுவது நன்று. உத்யோகத்தில் மறைமுக எதிரி மூலம் நஷ்டமேற்படலாம், வ்யாபாரத்தில் எதிர்பாராத சிறு வ்ரயங்களிருக்கக் கூடும். வரி மூலம் கஷ்டமோ, சேவகர் மூலம் வெறுப்போ ஏற்படும்படி தொழில் நடைபெறும். ஸ்பெகுலேஷன் பந்தயம் லாட்டரி மூலம் லாபமிருக்க நியாயமில்லை விவாஹம் தீர்மானிக்கப்பட்டு ஆவணியில் நடைபெறலாம். சிலருக்கு விவகாரம் மூலம் சிலவுகள் செய்ய நேரும். தம்பி

கள் பிரியவும், மாதா நூதன ஆபரணம் பெறவும், புத்ரர்கள் நோயால் ஸ்ரமப்படவும், மனைவி சிறு ரணங்களை சிகிச்சை செய்து கொள்ளவும் நேரும். பிதாவிற்கு காரியசித்தி, சுந்தர காண்டம் படித்துவரின் நன்று.

கடக ராசி: புனர்பூசம் 4ம் பாதம் பூசம் ஆயில்யம். அதிக அலைச்சலும், ஓயாத உழைப்பாலும் தேக சுகம் சற்று பாதிக்கப்படலாம். சிலர் மாத முடிவில் வைத்யசாலையில் சேர்ந்து வைத்யம் செய்து கொள்ளவும் நேரலாம். கேது தசை நடப்பவர்களுக்கு வாகனம் மூலம் சிறு ரணங்கள் ஏற்படவும் நியாயமுண்டு. உத்யோகத்தில் ரஜாவில் செல்லவும் மேலதிகாரியுடன் விரோதித்துக் கொள்ளவும் நேரலாம். வ்யாபாரத்தில் முடங்கிய தனம் பெற வக்கீல் நோட்டீஸ் கொடுக்கவும், அனுவசிய சிலவுகள் சில செய்யவும் நேரும். ஓரளவு முடங்கிய தனம் பெறலாம். தொழிலில் கூட்டாளி மூலம் நற்பலனில்லையென்றாலும், சிலவு கடுமை. புத்ரர் மூலமும் தமயன் நண்பர் மூலமும் உதவி பெறலாம். ஸ்பெகுலேஷன் பந்தயம் லாட்டரி மூலம் நன்று. சுயார்ஜிதம் திருப்திகரமாகயிருக்கும். ஏஜென்ஸி காண்ட்ராக்ட்எடுக்கலாம். விவாஹம் தாமதிக்கும். விவகாரம் நீடிக்கும் ராஜியாவதற்கு முயற்சிப்பது நன்று. மாடு வாகனம் வாங்க நேரலாம். லலிதா ஸஹஸ்ரநாமம் பாராயணம் செய்யவோ, முருகனை வணங்குவதோ உத்தமம்.

சிம்ம ராசி: மகம் பூரம் உத்ரம் 1ம் பாதம் தேக சுகம் ஓரளவு திருப்திகரமாக யிராது. ஜல தோஷம், இருமல், ஜ்வரம் போன்ற சிறு நோய் தொடர்ந்து வேதனையளிக்கும். தன் செய்கையாலேயே யிருக்கும் தனத்தை முடக்கவோ, அல்லது கடனுக கொடுக்கவோ நேரும். இம் மாதம் சிலவும் கடுமை. ப்ரயாணமும் செய்யலாம். உத்யோகத்தில் மாறுதல் ஏற்படவும், வீடு மாறவும் இருக்கக்கூடும். மாதா மூலம் தன வரவும், உற்சாகமுமிருக்க, வ்யாபாரம் வலுவடையவும் மேலும் சரக்குகளை அதிகமாக வாங்கி சேர்க்கவும் நேரும். தொழிலில் சேவகர்களுக்கு மேலும் அதிகமாக போனஸ் கொடுப்பதால் சிலவென்றாலும், திருப்தியாக அவர்கள் பணியாற்றி முன்னேற்றத்திற்குப் பாடுபடுவார். ஸ்பெகுலேஷன் பந்தயம் முதலியன மூலம் நஷ்டமிராது. காண்ட்ராக்ட் ஏஜென்ஸி எடுக்க முயற்சிக்கலாம். எடுத்த காண்ட்ராக்ட்டில் தடையும் கஷ்டமும் வரவும், சில வாரங்களில் நிவர்த்தியாகவும் நேரும். விவாஹ விஷயமும் விவகாரமும் நிம்மதியளிக்காது. வ்ரயமும் வேதனையுமிருக்கும். தனது கார்யத்தை கவனிக்க விடாமல் நண்பர்களுக்கு உதவி புரிவதிலேயே காலம் கடந்துவிடும். ஆதித்ய ஹ்ருதயம் பாராயணம் நன்று.

கன்னி ராசி: உத்ரம் 2, 3, 4 பாதங்கள் ஹஸ்தம் சித்திரை 1, 2 பாதங்கள் இடையூறுகள் பல இருந்தபோதிலும், கார்யங்கள் கைகூடி வரக்கூடுமோ, இல்லாவிடில் பலனளிக்காமலிருந்து விடுமோ என சந்தேகங்கொண்டவர்களுக்கு திகில் ஒழிந்து, விரோதம் மறைந்து, கஷ்டம் குறைந்து, சுபபலனதிகமாகவும், தேக சுகமேற்படவும், நண்பரின் உதவி பெறவும், உத்யோகத்தில் மேன்மையடையவும், அரசாங்கம், அதிகாரி மூலம் சுபச்செய்தியும் ஆதரவும் பெற நல்ல காலம். வீட்டு கஷ்டமும், இதரர்கள் மூலம் இருந்த வேதனையும் ஒழியும். வ்யாபாரத்தில் எதிர் பாராத லாபமும் கூட்டாளி உதவியும் உண்டு தொழிலில் யத்தன பலிதமும், காரிய சித்தியும், உற்சாகமும் இருக்கும் மதிப்பு ஓங்கும். ஸ்பெகுலேஷன் லாட்டரி மூலம் நற்பலனடையலாம். ஏஜென்ஸி கிடைக்க, காண்ட்ராக்ட் மூலம் லாபமும், முடங்கியதனம் பெறவும் எதிர்பார்க்கலாம். மாதாவிற்கே கஷ்டம் இதர உறவினர்களுக்கு ஓரளவு சுப பல

னும், திருப்தியுமிருக்கும். வீடு கட்ட ஏற்பாடு செய்யவும். விஷ்ணு சகஸ்ரநாமம் பாராயணம் உத்தமம்.

**துலா ராசி:** சித்திரை 3, 4 பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 பாதங்கள். எக்கார்யத்திலும் பொறுமையாகவும், நிதானமாகவும் இருந்துகொண்டு, கோபம், ரோசம் முதலியன இல்லாமல் நயத்துடன் இருப்பது நன்று கஷ்டநஷ்டங்கள் வராமல் முயற்சி செய்யவும். நண்பர்கள்கூட விரோதமாகி, உதவி செய்யாமலிருப்பது தவிர, பாதகமாக நடக்கவும் நேரும். விவகாரத்தில் நமது சாக்ஷிகாரனே நமக்கு விரோதமாய் நடப்பான் காதலில் ஈடுபட்டவர் தற்காலிகமாக பிரியவும் நேரும். உத்யோகத்தில் மேலதிகாரி ஆதரவு அளிப்பது ஸ்ரமம். வேலையும் மிகக்கடுமை. வரி மூலம் கஷ்டமேற்பட, வ்யாபாரமும் மந்தமாக நடைபெறும். தொழிலில் முன்னேற்றமிராமல், இறக்குமதி குறைவால், வேலை குறைய, காண்ட்ராக்ட் வரினும், அதை எடுத்து லாபம்பெற முடியாது. மேகம் கூடுமே யல்லாமல், மழை பொழியாது. இதற்காக ஏங்காமல், துடர்ந்து யத்தனம் செய்துவரின் ஸெப்டம்பர் மாதம் இருள் ஒழிந்து, வெளிச்சம் உண்டாகும். யாவும் அப்பொழுதே கைகூடிவரும் லக்ஷ்மீ நரசிம்ம ஸ்தோத்ரம் படித்துவரின் இஷ்ட சித்தியுண்டாகும்.

**விருச்சிக ராசி:** விசாகம் 4ம் பாதம். அனுஷம் கேட்டை கஷ்டங்கள் குறைய ஆரம்பம். நஷ்டமும் குறையும். யத்தன பலிதம் சிறிது சிறிதாக பலிக்க ஆரம்பிக்கும். தேகசுகமும் மெதுவாக ஏற்பட்டுக் கொண்டே வரும். புயலில் அகப்பட்ட ஓடம், புயல் நின்று; கரையை நெருங்குகிறது. ஊக்கத்துடனும், தைர்யத்துடனும் இனி பணி புரியவும். எல்லையில் வாதி தொல்லை கொடுத்த மேலதிகாரி மாற நிம்மதியுண்டா

---


நமது கணபதி ஜோஸியர் வெளியிட்டுள்ள புத்தகங்கள்
சில காபிகளே கைவசமுள்ளன.

தேவையானவர்கள் :—

"பாலா"

13, ப்ருமணத் தெரு. : : சைதாப்பேட்டை

சென்னை 15லிருந்தும், ஹிகின் பாதம், சுதேசமித்திரன் புக்ஸ்டாலிலிருந்தும் பெறலாம் :

ஜோதிடம் விஞ்ஞானமே முதல் பாகம் Rs. 2/-00

மணமும் மணவாழ்க்கையும் (விவாஹ பொருத்தம் பார்க்க) Rs. 2/-50

தபால் சார்ஜ் ப்ரத்யேகம்

மாலா கூபன் வைத்தனுப்பினால் தபால் சார்ஜ் இனாம்.

**மாடர்ன் அட்ரலாஜிகல் ரிஸர்ச் இன்ஸ்டிடியூட்**

(மைலாப்பூர் பிராஞ்சில்)

நூதன மாணவர்களுக்கு ப்ரத்யேகமாக போதிக்க ஏற்பாடாயிருக்கிறது. நூதனமாக சேரலாம்.

பிரதி ஞாயிறு மாலை 3மணி முதல் 5மணி

P. S. High Schoolல் நடைபெறும்

சேர விரும்புவர் அங்கேயே வரலாம்

கும். ஓரளவு தனவசதி ஏற்பட ஆரம்பம். முடங்கிய தனம் பெறலாம். கடன் கேட்டாலும், இலகுவாகக் கிடைக்கும். வ்யாபாரம் இனிமேல் வலுவடைய ஆரம்பம். அரசாங்கம் மூலம் நற்செய்தி, லைசென்ஸ் பெற ஆரம்பம் பிரக்ஞையற்று யிருந்தவருக்கு, ஸ்வயம்பாபகம் வர ஆரம்பிப்பது போல் எதிலும் காணலாம். விவாஹத்திற்கு ஏற்பாடு செய்யலாம். ஏஜென்ஸி எடுக்கலாம். லாட்டரி பந்தயம் இனி பலனை யளிக்கும். உற்றார் உறவினர் கூடவும், கஷ்டத்தை மறக்கவும், சுபபலன் பெறவும், எதிர்பார்க்கலாம் திருப்புகழ் பாராயணம் உத்தமம்.

**தனுர் ராசி:** மூலம், பூராடம், உத்ராடம் 1ம் பாதம் தேக சுகம் பாதிக்கப்படலாம். ஆரோக்யக் குறைவும் பலஹீனமும் கோபத்தையும் அனாவசிய சச்சரவையும் அதிகப்படுத்தும். வீண் வம்பை விலைக்கு வாங்க நேரும். உத்யோகத்தில் மேலதிகாரி சிடு சிடு என்றிருக்க, உழைப்பும், அதிகமாக, வரும்படியில் மாறுதலின்றி யிருப்பதால், வெறுப்பு தட்டும். ஆனால் இதுவே கடைசி கஷ்டமென்றும், அடுத்த மாதம் முதல் மிகச் சுபபலனே யென்றும் அறிந்து, இம்மாதத்தை பொறுமையுடன் கடந்து விடுவது நன்று. வ்யாபாரத்தில் ஸ்ரமமுண்டு. நஷ்டமிருக்கலாம். வரி மூலமும் கஷ்டம் தொழிலில் சிறு இடையூறு களும், விபத்துக்களுமிருக்கும். எச்சரிக்கையுடன் வாகனம் ஓட்டுவது அவசியம் தூரதேச ப்ரயாணம் செய்வதை இரண்டு மாதங்கள் கழித்து வைத்துக்கொள்ளலாம். பரீக்ஷை தேருமல் கஷ்டமும், ஸெலக்ஷனு காத வேதனையுமிருந்தாலும் அடுத்த ஆண்டில் ஆண்டவன் அருளுண்டு என அமைதியாயிருக்கவும். லாட்டரி, பந்தயம் மூலம் கையிலுள்ள பணம் போய்விடும். லாபமேதும் இராது. ஏஜென்ஸியில் ஏமாற்றம். காண்ட்ராக்ட்டில் கஷ்டம் நவக்ரஹ ஆராதனை செய்து வரவும். உற்றார் உறவினர்களுக்கு ஓரளவு நற்பலனுண்டு. நண்பர் உதவியால் சற்று சமாளிக்க முடியும்.

**மகர ராசி;** உத்ராடம் 2, 3, 4 பாதங்கள். திருவோணம் அவிட்டம் 1, 2 பாதங்கள். தேகசுகம் ஓரளவு பாதிக்கப்படலாம். சுகா தாரத்தை கவனித்து வரவும். வரும்படியும் அதிகமாக, உதாரச்செலவு மதிகமாகும். கடனைத் தீர்க்கும் காலம். உத்யோகத்தில் உயர்வு ஏற்படவோ, மாறுதலுக்கோ ஏற்பாடு நடைபெறும். வ்யாபாரம் வலுவடைய கூட்டாளி சேர, தனவசதியுமுண்டாக. உற்சாகமும் ஏற்பட ஆரம்பம். செலவு அதிகமானலும் குதூகலமாகயிருப்பார். தொழிலில் இருந்த மந்தமொழிந்து. அரசாங்கமூலம் உதவியும் பெற்று மேன்மையடையும் காலம் ஆரம்பம். தசாபுக்தி கெடுதலால் சென்ற மாதம் ஏமாற்றமடைந்தவர்கள் இனி முயற்சி செய்யின் வெற்றியடைவார். ஸ்பெகுலேஷன் லாட்டரி பந்தயம் போன்ற இனங்களில் ஓரளவு சுபபலனே. ஏஜென்ஸி காண்ட்ராக்ட் எடுக்கலாம். தைர்யமாக எத்தொழிலிலும் இறங்கலாம். வீடு மனை ஆடுமாடு போன்ற இனங்களை விலைக்கு வாங்க நேரும். விவாஹ விஷயம் நிச்சயமாகும் விவகாரம் வெற்றியடையும். ஆனால் அப்பீலும் எடுப்பார்கள், துடரும். கவலை வேண்டாம். தம்பிக்கு ஸ்ரமமும், தாய்க்கு மேன்மையும், புத்ரர்களுக்கு கஷ்டக்குறைவும், மனைவிக்கு இடப்பெயர்ச்சியுமிருக்கும் ஐயப்பன், வெங்கடாசலபதியை வணங்கவும்.

**கும்ப ராசி:** அவிட்டம் 3, 4 பாதங்கள் சதயம், பூரட்டாதி உரியடி போல், கைக்குக்கிட்டும் போல் தோன்றி, பலனையளிக்காமல் நழுவிச் சென்று மனவேதனையளிக்க. பணமுடை ஏற்பட, வெறுப்புண்டானவர்கள், இம்மாதம் எதிர்பாராத வெற்றி, கார்யானுகூலம், லாபம் பெற்று,

நிம்மதி பெறவும், தைர்யமுண்டாகவும் ஏற்படும். உத்யோகத்தில் உயர்வும், மேன்மையும் நன்மையும் உண்டு. மேலதிகாரி நட்பு அதிகமாகும். வ்யாபாரத்தில் மிக வலுவு உண்டாகும்படி பலர் உதவி உண்டாக, ஆதரவும் கிடைக்கும். தொழில் முன்னேறும்படி, உண்மையான உழைப்பாளியும், பாடுபடும் புத்திசாலியான பணியாளரும் சேருவார். ஸ்பெகுலேஷன் பந்தயம் லாட்டரி மூலம் லாபம். ஏஜென்ஸி காண்ட்ராக்ட் எடுக்கலாம். முடங்கிய தனம பெறலாம். விவாஹ விஷயமாக தீவிர முயற்சி செய்யவும் நிச்சயமாகிவிடும். விவகாரம் நீடிக்காது. ஸௌகர்யமாகவே முடியும். மனை வீடு கட்டிக்கொண்டிருக்க வசதி ஏற்படும். பலகாலமாய் புத்திரரின்றி யிருப்பவருக்கு இம்மாதம் முதல் கணக்கிட்டுவரின் அடுத்த ஆண்டு ஆண்டவன் அருளால் அழகான குழந்தை ஜனிக்கலாம். கோபால கிருஷ்ணன் ஸ்தோத்ரம் படித்துவரின், இழந்ததைப் பெறலாம். அசாதரணமான காரியத்தையும் சாதிக்கலாம்.

**மீன ராசி:** பூரட்டாதி 4ம் பாதம் உத்ரட்டாதி ரேவதி. தேகசுகம் ஓரளவு பாதிக்கப்படும் சுகாதாரத்தை கவனிக்கவும். சிறு பிரயாணங்களும், அதிக அலைச்சலும், சேவகர்களுடன் விரோத பாவமும் இருக்கும். அடிக்கடி சேவகர்கள் ரஜாவில் போகவே, தனக்கு வேலை கடுமை. உத்யோகத்தில் மாறுதல் இருக்கும். குடி வீடு மாறலாம். உயர்வு உண்டாக தாமதம். வ்யாபாரம் திருப்திகரமாக யிராது. ஓரளவு மந்தமே. தொழிலில் சிறு இடையூறுகளிருக்க வரி மூலம் ஸ்ரமமிருக்கக்கூடும் ஸ்பெகுலேஷன் லாட்டரி பந்தயம் மூலம் வ்ரயம் வரும்படி குறைவு, விவகாரம் துடங்கும் துடரும் விவாஹம் நிச்சயமாகத் தாமதம். ஜாதகங்கள் சேர்ந்து பெரிய file ஆகிவிடும். தீர்மானிப்பது ஸ்ரமம் பலருக்கு அடுத்த ஆண்டே விவாஹம் நடைபெறும், தம்பி தாய் இருவர் கஷ்டமும் கூட சேர்ந்து வேதனையை அதிகப்படுத்தும் புத்ரர்களுக்கு தேகசுகம் பாதிக்கப்படும். மனைவிக்கு நூதன ஆபரணமோ, ஸ்திரந்தர சொத்தோ சேரலாம் பிதாவின் கஷ்டம் முடிந்து இனி இஷ்ட சித்தியுண்டாகும் தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்ரம் படித்துவரின் உண்மையாகவே சீக்ரம் நன்மையும் மேன்மையும் உண்டு

## வாசகர்களுக்கு விண்ணப்பம்.

ஜோஸ்ய கேள்விகள் நூற்றுக்கணக்கான வாசகர்களிடமிருந்து வருகின்றன. மிக மனவேதனையுடன் எழுதும் சிலருக்கு இதுவரை இலவசமாக நேரிலேயே பதிலளித்தோம். மற்றும் ஓர் சிலருக்கு மாத்திரம் அச்சிட முடிகிறது. இனி பதில் விவரமாக கேள்விகளுக்கு வேண்டுமானால் 1 ரூ மணியார்டர் 'கணபதி ஜோஸ்யர்'க்கு நேராக அனுப்பவும். கூப்பனை வைத்துக் கேள்வியுமனுப்பவும். சக்தியற்றவர்கள் மாலா மூலம் பதிலைப்பெற்று உண்மையைப்பெற வேண்டும் என்பதே எமது நோக்கம்.

**கணபதி ஜோஸ்யர்,**

*13, ப்ராமணத் தெரு, சென்னை-15.*

# கேள்விகளுக்குப் பதில்

**கணபதி ஜோஸ்யர்**

*[ரு 1/- அனுப்பி பதில் கோருபவர்கள் கேள்விகளையும் ரூபாயையும் கூபனையும் சேர்த்து, ஜோஸ்யருக்கு நேராக அனுப்பவும்]*

மாரிமுத்து கடலூர்

கடனை அடைக்க, வீட்டை அடமானம் வைப்பது நன்று. 1960 ஸெப்டம்பர் முதல் நிம்மதியுண்டாகும் 4. 6க்குடையவர் சேர்வதாலும் 6ல் ராகு இருப்பதாலும், ராகுதசை நடப்பதாலும் மேற்கூறியபடி ஸௌகர்யமடையலாம்.

வைத்தியநாதன் குடிவாடா,

7 மாதங்களில் மாறுதல் உண்டு. மேன்மையுடன் இடப்பெயர்ச்சியிருக்கும்: உமது குடும்பம் பெரியதே.

பத்மாபாய் சைதாப்பேட்டை

நேரிலேயே கேட்டுக் கொள்ளலாமே வெளியூரில் இருந்து கொண்டு கட்டணம் 1 ரூ கட்ட சக்தியற்றவர்களுக்கு மாத்ரம் மாலாவில் அச்சிட வசதிகொடுக்கலாமே: பணமும் அனுப்பாமல் நேரிலும் பதில் வேண்டுமென்பது நியாயமில்லை.

ஜெயலக்ஷ்மி ஆதம்பாக்கம்

கஷ்டம் தீர மேலும் இரண்டு வருடங்களாகும். லக்ஷ்மி அஷ்டோத்தரம் படித்து வாரும். பொறுமையுடனிருப்பின் பெருமையுண்டு.

சாவித்திரி சென்னை 21

1961 ஏப்ரலில்நடைமெறும். உமது தொண்டையில் உள்ள கோளாறுகளை கிரகங்கள் குறிக்குமானாலும், அதைப் போக்க வைத்ய நிபுண பெண்மணியிடம் சென்று காட்டவும். மாசி மாதம் மறைந்துவிடும். நிரந்தரமாக குணம் ஏற்படும்.

இஷ்டம்மாள், அயினாவரம்.

மூத்த மகனுக்கு முப்பது மாதம் பொறுத்தே கஷ்டநிவர்த்தி இளைய மகன் மனமும் அப்பொழுதே திருந்தும்.

ருக்மணி செம்பூர், பம்பாய்

மணம் புரியும் வரை இதே உத்தியோகம்தான். 1961 ஜூனில் மணம் புரிவீர். உறவல்ல; இன்ஸூரன்ஸில் வேலையாயிருப்பார்.

கணேசன் வில்லிவாக்கம்

மனைவி ஒன்றே துணைவி என வேறு கிடைக்காது. நன்முறையில் ஸன்மார்க்கத்தில் 1962 முதல் சுபீட்சத்துடன் இருப்பீர்.

சந்திரன் சிந்தாதிரிப்பேட்டை

சுவாதி ஸெப்டம்பரில் வேலை கிடைக்கும். 1964ம் ஆண்டு சித்திரை மாதம் விவாஹம் நடைபெறும்.

மோஹனரங்கம்

கந்தஷஷ்டி என நக்ஷத்ரம் எழுதியுள்ளீர். வயது 18. நான் மிக பச்சாதாபப்படுகிறேன். காதல் வேண்டாம். கண்யமாக பெற்றோர் பார்க்கும் பெண்ணை மணக்கலாம். உமது மனைவி பெயர் பார்வதி போன்ற நாமமாகும்.

சுப்பிரமண்யம் பட்டுக்கோட்டை.

இந்த வயதில் ஜோதிடம் பார்க்காதே. கவனமாக படித்துவா. படிப்பு வரும்

மாரியப்பன் நுங்கம்பாக்கம்.

யாவருமே மஹாகவி காளிதாஸ் ஆக முடியாது. உமக்கு ஆசையிருப்பது சகஜமானாலும், பூர்த்தி செய்ய தெய்வானுகூலம் இல்லை. ஓரளவே மேன்மையுண்டு.

நாகராஜன் திண்டுக்கல்


அஷ்டமச்சனி ஒழியும். அடுத்த சீசனும் வரும். சித்திரையில் விவாஹம் நடைபெற்றுவிடும்.

ஜவஹர் நெல்லிகுப்பம்.

தங்கைக்கு 1961 ஜூனில் விவாஹம். மாப்பிள்ளை படித்தவரே. தொழில் படிப்பு. தொழிலில் இருப்பார்.

சுப்ரமண்யம் எண்ணூர்


உலகில் யார்தான் நிம்மதியுடன் இருக்கிறார். பூமியே நிலையாக நிற்கிறதா? இல்லையே! சதா, தன்னைத் தானே சுற்றிக்கொண்டு மண்டலத்திலுள்ள மற்ற கோட்களையும் சுற்றுகிறது அல்லவா! நிம்மதியுடன் நிலையாயிருக்கக் கூடாதோ நிலையாயிராதிருப்பதே இயற்கை. அதே போல், பூமியில் உள்ளோர் சகலரும் நிம்மதியின்றியிருப்பார் அதைப் பெறவே ஆயுள் முடியும் வரை பாடு படுவார். ஒரே வழி என்ன வென்றால், யாவும் நமது கையிலில்லை என்றும் ஆண்டவன் அருளேயென்றும் தீர்மானமாய்க் கருத ஆண்டவனை வணங்கி வருவதே யாகும். சுக துக்கங்களை பாராட்டாமல், இன்ப துன்பங்களை சமமாகக் கருதி வர யத்தனிக்க வேண்டும்.



வடக்கே உத்திர பிரதேசத்தில் காாவால் ஜில்லாவில் ஹிமாலயப் பர்வதத்தின் அடிவாரத்தில் அமைந்துள்ள 'கார் பெட் தேசிய பூங்காவில் உள்ள வனவிலங்கு சாலையின் படம். இங்கு சகலவித மிருகங்களும் உள்ளன. எட்டு காவல் கோபுரங்கள் உள்ளன. சுற்றி அழைத்துச் செல்ல இரண்டு பழக்கப்பட்ட யானைகளும் இருக்கின்றன.



சமீப காலத்திலிருந்து இந்தியாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையே பிரயாணம் செய்ய 'ஏர் இந்தியா இண்டர் நேஷனலி'ன் முதல் 'போயிங் 707' விமானம் பம்பாய் வந்திறங்கியபோது எடுத்த படம்: இது போன்ற 'ஜெட்' விமானங்கள் 18 கோடி ரூபாய் விலையாகிறதாம்.




◁ விக்கிரமன் ▷

## முன் கதைச் சுருக்கம்.

[பூம் பொழில் பங்களா நறுமணம் வீசும் மலர் வனமாக திகழ்ந்து வந்தது. ஒரு காலத்தில் அந்த வீட்டின் மகாலட்சுமியாக விளங்கியவள் கோதை. அவள் மறைவிற்குப் பின்பு வனப்பு இழக்க வாரம்பித்தது பூம் பொழில். பங்களா பாழடைந்து வரத்தொடங்கியது. பங்களாவின் எஜமானர் கண்ணபிரான் ஊதாரித்தனத்தில் இறங்கினார். தமையன் கந்தவேலனும், மகள் மான்விழியும் அவல நிலையில் உழல வாரம்பித்தனர். அவரது தந்தை கம்பெனி ஒன்றின் துபாஷாக விளங்கி ஏராளமான சொத்து சேர்த்து, கண்ணபிரானுக்கு கோதையை மணம் புரிவித்தார். தந்தை கண் மூடிய பின் கண்ணபிரான் கண்டிராக்ட் தொழிலில் முனைந்தார். விதி சதி செய்தது. அவர் தன்னுடன் ஒன்றாகப் படித்தவளும் இளம் வயதிலே, கைம்பெண்ணானவளுமான மரகதத்தை சந்திக்க நேர்ந்தது. அவரது போக்கு மாறியது கோதை அவருடன் வாதாடினாள். ஆனால் அவளும் இறக்கவே அவரைத் தடுக்க யாருமில்லை. ஆகவே அவர் கண் மூடித்தனமாய் காரியங்களை நடத்த ஏகப்பட்ட நஷ்டம் ஏற்பட்டது. ஆயினும் அவர் திருந்தவில்லை. வீட்டிலே அவர் தங்குவது மாதத்திலே நாலைந்து நாட்கள் தான்.

கதைத் தொடக்கத்திலே பூம்பொழிலுக்கு வந்த கண்ணபிரான் கனவில் மனைவி கோதை தோன்றி அவரை திருந்த வேண்டுகிறாள். அவர் உடலெல்லாம் வேர்த்துவிட உறங்க முயலுகிறார். உறக்கத்தினின்றும் எழுந்த அவரிடம் எலக்டிரிக் கம்பெனிக்காரர்கள் வந்து பாக்கிக்காக கேட்க அவர் கடிந்து பேச அவர்கள் டிஸ்கனெக்ஷன் செய்து போகிறார்கள். அவர்களிடம் அப்படிப் பேசியது தவறு என்று கூறிய கந்தவேலனை அறைந்து விட்டு வீட்டை விட்டு வெளியேற்றுகிறார். அந்த சமயம் பார்த்து கந்தவேலன் நண்பர்கள் அவனை ஏதோ பொதுக்கூட்டத்திற்கு அழைத்துச் செல்ல வருகிறார்கள். அவன் தாயின் படத்தின் முன் விழுந்து கதறுகிறான். அந்த சமயம் அட்வகேட் பரமசிவமும் அவர் மனைவியும் அங்கு வருகின்றனர்,

அட்வகேட் பரமசிவம் கண்ணபிரானின் குடும்ப வக்கீலாக மட்டுமல்லாது குடும்ப நண்பராய் இருந்து யோசனைகள் கூறி வந்தார். ஆனால் கண்ணபிரான் அவைகளை ஏற்காமல் அசட்டை செய்ய ஆரம்பித்தவுடன்

யோசனைகள் கூறுவதை நிறுத்திக்கொண்டார். கண்ணபிரான் பூம்பொழில் பங்களாவை அடமானம் வைப்பதற்கு முயல்கிறார் என்ற செய்தி கேட்டவுடன் கண்ணபிரானிடம் நேரிடைப் பேசவே அவர் பூம்பொழிலுக்குக் கிளம்பினார். அவர் மனைவி தங்கம் அப் பங்களாவைப் பார்த்து அது போன்று தாம் கட்ட விழைந்ததால் அவளும் கூட வந்தாள் பரமசிவத்திற்குத் தன் மகள் புஷ்பாவை கந்தவேலனுக்கு மணம் முடிக்கும் யோசனையும் இருந்தது. அவர்கள் இருவரும் பூம்பொழிலுக்கு வந்த போது முன்பு செழித்து எழிலுடன் விளங்கிய இடங்கள் சில பாழடைந்திருப்பதைக் கண்டு வருந்தினர்.

தாயின் படத்திடம் அழுது முறையிட்டுக் கொண்டிருந்த கந்தவேலன் அவர்கள் உள்ளே வந்ததையறிந்து கண்களைத் துடைத்துக்கொண்டு வரவேற்றான். கந்தவேலனும் பரமசிவமும் அளவளாவினர். கந்தவேலனை தன் வீட்டிற்கு வரும்படி அழைத்தார் பரமசிவம். தங்கம் மான்விழியை வரச்சொன்னாள். அவர்கள் விடை பெற்றுச் சென்றனர்.

கந்தவேலனின் நண்பர்கள் அவனை வெளியே அழைத்துச்செல்லக் காத்திருந்தனர். பெருமாள் என்ற நண்பன் அவனை உற்சாகப் படுத்திக்கொண்டிருந்தான். பெருமாள் சற்று வெளியே சென்ற போது பெருமாளின் குணம் பற்றிக் கூறி அவனிடம் எச்சரிக்கையாயிருக்கும்படி கூறினாள் மான்விழி, அண்ணனிடம். அவன் மிகவும் உதவி வருவதாக கந்தவேலன் கூறினான். எதற்கும் ஜாக்கிரதையாக இருக்கும்படி சொன்னாள் மான்விழி.

அவன் கிளம்பிச் சென்றவுடன் தான் பெருமாளிடம் அதிகத் தொடர்பு வேண்டாம் என்று சொன்னதால் பண உதவி வராது நின்று விடுமோ என எண்ணினாள் மான்விழி. அவள் மனம் வேதனையால்வாட கண்ணீர் உகுத்து நின்ற போது அவளது ஹிந்தி பாடபோதகி சௌந்திரவல்லி வந்து சேர்ந்தாள். அவள் நயமாகப்பேசி மான்விழி மனதில் உள்ளவைகளை வெளியிடச் செய்தாள். தனக்கு ஒரு வேலை தேடித் தரும்படி சௌந்திரவல்லியிடம் வேண்டிக் கொண்டாள் மான்விழி. அவள் விம்மினாள். இவ்விம்மல் ஒலி கேட்ட கந்தவேலன் காரில் கிளம்பியவன், அதிலிருந்து இறங்கி மான்விழி என்று அழைத்த வண்ணம் வீட்டினுள் வந்தான்.

## அத்தியாயம் 3

கண்ணபிரான் மிகவும் அமைதியை நாடினார். வேலையினின்று ஓய்வு பெற்றோர் நடத்தும் சிறப்பான வாழ்க்கையை நடத்த விரும்பினார். கூப்பிட்ட குரலுக்கு வேலைக்காரர்கள், சதா கலகலப்பான பேச்சு; குளிர்ந்த முகங்கொண்டவர்கள் எதிரே வந்து செல்வது. வேளைக்கு அறுசுவை உண்டி. எல்லாவற்றிற்கும் மேலாகக் கடன் என்று எவரும் அவரை அணுகக்கூடாது.

அதுதானே இயலவில்லை. எப்படிப்பார்த்தாலும் அவர் கடன் தொல்லையினின்று மீளமுடியவில்லையே. நூற்றுக்கு முப்பத்திரண்டு ரூபாய் வட்டி விகிதம் வரை அவர் கடன் வாங்கிவிட்டார். வட்டிக்கு வட்டி வேறு சேர்ந்து வந்தது: அந்த வட்டித்தொகைக்கும் புரோநோட்டு எழுதிக் கொடுத்து 'அசலை' வளர்த்தார்! அழ. பழ. சிதம்பர செட்டியார் கண்ணபிரானிடம் மிக நெருங்கிப் பழகினார். அவர் கேட்கும்போதெல்லாம் கடன் கொடுத்து வந்தார். அவருடைய குறிக்கோள் பரோபகாரமன்று. எப்படியாவது 'பூம்பொழிலை' அடைவதே!

'பூம்பொழில்' பங்களாவில் உள்ள சட்டச்சிக்கல் செட்டியார் அவர்களுக்குத் தெரியாதோ என்னவோ! இருந்தாலும் அந்த வீட்டில் வந்து எப்படியாவது குடியேறி விடுவது என்று கனவு கண்டார் அவர். கண்ணபிரானுக்கும் இரண்டு வீடுகளைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு ஏற்பட்டது. தன் சொந்த வீட்டைவிட மரகதத்தினிடத்தே தான் அவர் அதிகப் பரிவு காட்டினார். மரகதம் அவருடைய இளம் வயதுத் தோழி. அவளைத்தான் மணம் புரிய வேண்டும் என்று அவர் இளமைக் கனவுகள் கண்டதுண்டு. மரகதம் ஏழை வீட்டுப் பெண். அவள் படித்து எங்காவது உபாத்தியாயனியாகவோ, நர்ஸாகவோ பணியாற்றித்தான் அவர்கள் குடும்பம் பிழைக்க வேண்டிய நிலை இருந்தது. அதனால் அவளால் காலேஜ் படிப்பை நெருங்க முடியவில்லை. கண்ணபிரான் காலேஜில் சேர்ந்து படிக்கலானார். மரகதம் வாத்தியாரம்மாத் தொழிலுக்குப் படிக்கலானாள். இருவருடைய கல்லூரிகளும் நேர் எதிர் எதிர் கோடியில் இருந்தது. அதேபோல்தான் அவர்களுடைய வாழ்க்கைப் பாதையும், கண்ணபிரானுக்கு விவாகம் நிச்சயிக்க அருடைய தந்தை முனைந்தார். அதே போன்று மரகதத்திற்கும் திடீரென விவாகம் நிச்சயமானது. நல்ல சம்பளம் சம்பாதித்துக்கொண்டு வட இந்திய நகரமொன்றில் வேலை பார்த்து வந்தவனொருவன் மரகதத்தை மணக்க முன் வந்தான் மரகதம் என்ன செய்வாள். தன் மனத்திலிருப்பதை வெளிக்குத் தெரிவித்து கல்யாணத்தை அவள் நிறுத்திவிட விரும்பவில்லை. காதலைப் புனிதப் பொருளாகவும் அதற்காக எல்லாவிதத் தியாகமும் செய்யலாம் என்பதை அவள் தெரிந்து வைத்திருக்கவில்லை. அதைப்பற்றிய நிலைமை முழுதும் உணரும் பக்குவமுமில்லை அவளுக்கு. மௌனமும், கண்ணீரும் அவள் இதயக் குமறலுக்குத் துணை நின்றன. ஆனால் வெற்றியைக் கொண்டு தரவில்லை.

208035

கண்ணபிரான் ஆண் மகன்; செல்லப்பிள்ளை. தந்தையுடன் ஏதேதோ வாதாடிப் பார்த்தார். தந்தை செல்லம் கொடுப்பவராக இருந்த போதிலும் கண்டிப்பு மிக்கவர் என்பதைக் கண்ணபிரான் அறிவார். அதனால் அவர் தந்தையின் இஷ்டத்திற்குச் சம்மதிக்க வேண்டி நேர்ந்தது. முழுமனது இல்லாத் திருமணமாகவே அவர் கருதினார். கோதை— அவர் கைபிடித்தவள் கணவன் இதயம் அறிந்தவள். கணவர் கோபக்காரர் என்பதறிந்தவள். அவருக்கு ஏதும் குறை ஏற்படா வண்ணம் நடக்கவே விரும்பினாள். இன்னும் சற்றுக் கலகலப்பாக இருந்திருந்தால் கண்ணபிரானை முழுமையும் கவர்ந்திருக்க முடியுமோ என்னவோ? இன்னும் குழைந்து குழைந்தும் பேசியிருந்தால் கண்ணபிரான் மனம் மரகதம் பக்கம் சென்றிருதோ என்னவோ? அதை யாரால் யூகிக்க இயலும். கண்ணபிரான் மரகதத்தைக் கண்டார். அதே பழைய குறும்புத்தனம் மிகுந்த பார்வை. அதே இளமைத்தோற்றம். பதினைந்து வருடகால வெள்ளம் அவளிடத்தில் வயதுக்குத் தக்க வளர்ச்சியையும், மாறுதலையும்தான் அளித்திருந்ததே யொழிய, பொலிவிலே துளியும் மாறுதலில்லை. அந்தச் சிரிப்பில் மாறுதலில்லை. வாழ்வில் ஒரே கணத்தில், ஒரே மின்வெட்டில் இன்பத்தின் எல்லையையும், துன்பத்தின் வரம்பையும் கண்டவள். அவளை மணந்த மணவாளன் கலியாணமான மறுநாள் நண்பனுடன் மோட்டார் சைகிளில் அமர்ந்து செல்லும்போது லாரி மீது மோதி விபத்துக்குள்ளாகி மாண்டான். மரகதத்தின் இதயம் கல்லா? கண்ணீர் கூடவா அவளது இதயக் குளத்தில் வற்றிவிட்டது? வழக்கம்போல் பள்ளிக்கூடம் சென்றாள். படித்தாள் சங்கீதத்தில் டிப்ளமா பெற்றாள். இசை அவளுக்கு உறுதுணையாயிற்று. ராகமும் தாளமும் அவள் இதயத்தில் இன்ப நாதத்தை உண்டாக்கின. தனக்குத் தானே அவள் பாடியவாறு வாழ்க்கைப் பாதையின் மைல் கற்களைக்

கடந்துவிடலாம் எனும் திட முடிவுக்கு வந்தாள். அவளது உறுதியால் அவ்விதமே செய்தாள். ஏன் அப்படி? என்று அவளைத் கேட்க யாரும் இல்லை. அவளுடைய ஒரு ஆதரவான தாயும் இறந்தாள். தங்கை ஒருத்தி. அவளுக்கு வாய்த்த அதிர்ஷ்டம் சிறுவயதிலேயே அவளுடைய அத்தை மிகவும் விரும்பி அவளை அழைத்துச் சென்றுவிட்டாள். பள்ளிக்கூடம் ஒன்றில் சங்கீதம் கற்பிக்கும் டீச்சராகவும் பணியாற்றினாள். வீட்டிலேயும் வந்து கற்றுக் கொள்பவர்களுக்கு உதவினாள்; காலையிலும் மாலையிலும் வீடு கலகலப்பாக இருக்கும். அதற்குத் தக்கபடி முழு வீடு சுற்றுப்புறத்தைப் பற்றி அவள் கவலைப்படவில்லை. வம்பும், தும்பும் காற்றில் மிதந்து வரும்போது கலியாண ராக ஆலாபனை அதை மாற்றிவிடும்.

அவர் தொண்டாற்றி வந்த பள்ளியின் ஒரு பகுதியை விரிவு படுத்தும் கட்டடக் காண்டிராக்டு எடுக்க வந்தபோதுதான் கண்ணபிரான் மரகதத்தைச் சந்தித்தார். இருவரும் ஒரு கணம் பார்க்காதது போல் ஒருநாள் போய்விட்டனர். ஒருநாள் இருமுறையோ. மும்முறையோ திரும்பிப் பார்த்தும் பாராதது போன்ற பாவனையில் சென்றனர் ஆனல் உள்ளக் கடிகாரத்தின் முட்கள் சுற்றிச் சுற்றிவந்தன. இதயமணி காலங் காட்டி ஓசை எழுப்பியது.

அப்போது ஏற்பட்ட புனர் அறிமுகம் அவர்களிடையே நிரந்தரப் பிணைப்பை ஏற்படுத்தியது. மரகதத்தின் பேச்சு. அதே இன்பச் சொற்கள் பல ஆண்டுகளுக்கு முன் பிருந்ததுபோல், மரகதத்தின் சிரிப்பு அதே பொலிவுடன் விளங்கியது. அவள் நெஞ்சுருகப் பாடும் பாடல் சாய்வுமான நாற்காலியில் சாய்ந்து கொண்டு அவள் பாடுவதைக் கண்ணை மூடியவாறு கேட்டு ஆனந்திப்பார். அவர் ஆங்கில இலக்கியம் படித்தவர். தாகூரிலே திளைத்தவர். பாரதியில் மூழ்கியவர். பாட்டுத்திறத்தாலே இவ்வையகத்தைப் பாவித்திட வேண்டும் என்று பாடினனே அந்த மகா கவி எனக்காகத்தான் பாடி வைத்தானே? அவள் பாடும் போது நான் துக்கம் மறக்கிறேனே. 'கன்றின் குரலைக் கேட்டுக் கதறியழும் பசுபோல்' அன்று அவள் பாடும்போது எனக்கு ஏன் கண்ணீர் வருகிறது. 'புண்ணியம் போல் பாபம்' என்று அவள் பாடும் போதுஎன் மெய் சிலிர்க்கிறது...



இப்படியே அவர் இசைக்கு அடிமையாகி, மரகதத்தின் இன்சொல்லுக்கு அடிமையாகி அவள் இதயத்திற்கு அடிமையானர். அவள் வாழும் சூழ் நிலை

அவருக்குப் பிடித்தது. அதனால் பூம்பொழிலில் அதிக நேரம் தங்குவதில்லை. கோதை இருந்த போதாவது அவரை ஏனென்று கேட்க ஒருத்தி இருந்தாள். கோதையின் வாழ்வு முடிந்தவுடன் அவர் விடுதலையடைந்து விட்டார். ஆனால் அவர் எண்ணியபடி மன நிம்மதி கிடைக்கவில்லை. அவருடைய தொழில் மோசமடைந்தது. நஷ்டத்திற்குமேல் நஷ்டமேற்பட்டது. செங்கற் சூளை வியாபாரத்தில் படு நஷ்டம். இவர் கட்டிய கட்டடத்தில் விரிசல் ஏற்பட்டதால் பில் தொகையை நிறுத்தி வைத்திருந்தார்கள். வருமானமில்லாமல், வட்டியும் விஷம்போல் ஏறி வரவே புதுக் கடன் சுமை ஏற்பட்டது. பூம்பொழில் பங்களா வேலைக்காரர்களுக்குச் சம்பளம் தர முடியாததால் ஒவ்வொருவராக நின்றனர். கவனிப்பாரின்று வீடு வாடியது. வீட்டிலுள்ள கந்தவேலனும், மான் விழியும் வேதனையுற்றனர். அவர்களுடைய பள்ளிக்கூட சம்பளங்



கட்டக்கூட கண்ணபிரானுல் முடியவில்லை. முடியவில்லையா? மனமில்லையா?

★

அன்று வீட்டிலே அமைதி காணுது சட்டென்று வெளியேறியவர் நேரே மரகதத்தின் வீட்டிற்குச் சென்ருர். ஒரு வாரமாக அவர் அங்குப் போகவில்லை. கண்ணபிரானைக் காணுமல் மரகதத்திற்கு என்னவோ போலிருந்தது. 'பூம்பொழி'லுக்கு யாரையாவது அனுப்பலாமா என்று கூட எண்ணினுள். வாசலில் அந்தப் பழைய கார் உறுமலுடன் வந்து நிற்கும் ஓசை கேட்டவுடன் அவளுக்கு அப்பாடா என்ருகியது. அதென்ன— அவரை ஒரு நாளாவது காணுவிடில் அத்தனைக் கலக்கம். முன் பிறவியில் நெருங்கியத் தொடர்பிருந்திருக்குமோ— விட்ட குறையோ தொட்ட குறையோ?

"உங்களுக்கு ஆள் அனுப்ப எண்ணினேன். ஆயுள் நூறு வந்து விட்டீர்கள்'' என்று கூறி வரவேற்ருள் மரகதம். சிவப்பு நிற நைலானும் நீல நிற சோளியும் அணிந்திருந்தாள். நீலத்திற்கும், சிவப்புக்கும் இடைபட்ட பிரதேசம் தந்தம் போல் மின்னியது. தலையில் சூடியிருந்த கதம்ப மணம் இலேசாகப் பரவினுலும் நுகர்ந்தோரை மயங்க அடிக்கும் சக்தி கொண்டிருந்தது.

''ஆயுசு நூரு? இருந்தது போதாதா?''

"ஏன் நீங்கள் ஆழ்வாராகிவிட்டீரா? இப்பிறவி வேண்டேன் எனப் பாடுங்களேன்''— என்று மரகதம் கூறியபோது கண்ணபிரானும் நகைத்தார். மரகதமும் உடன் நகைத்தது அதற்குச் சுருதி கூட்டியது போலிருந்தது.

"நீங்கள் அதிசயிக்கப் போகும் ஒரு விருந்தாளி நம் வீட்டிற்கு வந்திருக்கிருர்கள் யார் தெரியுமா?'' என்று கேட்டுக்கொண்டே அவரை உள்ளே அழைத்துச் சென்ருள்.

விருந்தாளியா? கண்ணபிரான் ஏதும் யூகிக்க இயலாமலே சென்ருர்.

அங்கே கூடத்தில் பதினெட்டே வயது நிரம்பாத அழகு மங்கை அமர்ந்திருந்தாள்.

''இவளை யாரென்று உங்களுக்குத் தெரிகிறதா?'' என்று மரகதம் கேட்டாள். மரகதத்திடம் பாட்டு கற்றுக்கொள்ள சிறிய பெண்முதல், பருவத்தின் தலை வாசலில் நிற்கும் மங்கைவரைப் பலர் வருகிருர்கள். அவர்களை ஏறெடுத்து அவர் பார்ப்பதோ, அவர்களைப் பற்றி விசாரிப்பதோ கிடையாது. அது போன்று இந்தப் பெண்ணும் ஒருத்தியாக இருக்கலாம்.

தன்னுல் புரிந்துகொள்ள முடியவில்லை. என்பதற்கு அடையாளமாக அசட்டுச் சிரிப்பொன்று உகுத்தார். ஆனுல் அவர் உள் மனம் அந்தப் பெண்ணைப் பற்றிக் கூறியது அவரது கல்லூரி நாட்களை நினைவூட்டியது. மரகதம் அந்த வயதில் இப்படித்தானிருப்பாள். அந்த நினைவை ஊட்ட வந்த இந்தப் பெண் யார்?

"என்ன உங்களுக்குத் தெரியவில்லையா? கல்யாணியைத் தெரியவில்லையா? என் தங்கை கல்யாணி. இவ்வளவு நாள் அத்தை வீட்டில் நாட்டியங் கற்றுக் கொண்டிருக்கிருள். குமாரி கல்யாணி என்று இப்

போதெல்லாம் கேள்விப்படுகிறீர்களே சாக்ஷாத் அவளேதான்'' என்றாள்.

கல்யாணி வெட்கத்தால் முகம் சிவக்க சோபாவின் பிடியைப் பிடித்துக் கொண்டு நின்றாள். கண்ணபிரான் அவளைப் பார்த்துப் பாராததுபோல், ''மரகதம், உனக்கு ஒரு தங்கை இருக்கிறாள் என்ற நினைவே இல்லையே'' என்று கூறி அமர்ந்த கண்ணபிரான் சற்று முன்பு பூம்பொழிலில் நடந்த தொல்லையை நொடியில் மறந்தார்.

★

**மா**ன்விழி சௌந்தரவல்லியிடம் பேசியதைக் கேட்டவாறு உள்ளே நுழைந்த கந்தவேலனுக்கு வருத்தம் தாங்கவில்லை. வேலைக்குச் சென்று பொருளீட்டிக் குடும்ப கஷ்டத்தை நீக்குமளவிற்குத் தன் தங்கை மன வேதனையடைந்திருக்கிறாள் என்பதை அறிந்தபோது கந்தவேலன் கண்கள் கலங்கின.

''மான்விழி'' என்று கூப்பிட்டவாறு அவள் எதிரே போய் நின்றாள். சௌந்தரவல்லி அப்போதுதான் கந்தவேலனை முதன் முறையாகக் காண்கிறாள். கண்டவுடனேயே ஒருவரை எடை போடவல்ல அவள் எளிதில் கந்தவேலனை எடை போட்டுவிட்டாள்.

தன் அண்ணன் திடீரென வருவான் என மான்விழி எதிர்பார்க்கவில்லை. தான் பேசியதைக் கேட்டு இப்படி வேதனைப்படுவான் என்றும் அவள் எதிர்பார்க்கவில்லை.

''என்ன அண்ணா இது. கூட்டத்திற்குப் போவதாகச் சொன்னாய் உடனே வந்து விட்டாயே.''

''வராமலிருந்தால் உன் வேதனையை நான் புரிந்துகொண்டிருக்க இயலுமா?''

''எனக்கென்ன வேதனை? நீ படும்துயரில் நூற்றில் ஒருபொட்டுகூட நான் படுவதில்லையே!

''நான் துயர்பட வாழ்கிறேன்''

''அப்படி எங்கும் விதித்திருக்கவில்லை''

''ஏன் நம் அம்மா துயர்பட வாழவில்லையா?''

கந்தவேலன் தாயாரைச் சுட்டிக் காட்டியவுடன் மான்விழியின் கண்களிலும் நீர் தேங்கியது. எனினும் அதை வெளிக்குக் காட்டாமல்,'' அம்மா துயரப்படவே பிறந்தார்கள். நாம் அப்படி அல்லவே. கவலையின்றி வாழவே நான் வழி தேடுகிறேன்.'' என்றாள்.

''நீ வேலை செய்யச் செல்வதால் எப்படிக் கவலையினின்று தப்ப முடியும்?''

மான்விழி அதற்குமேல் பேச்சை வளர்த்த விரும்பவில்லை. தன் அண்ணன் எங்கோ பொதுக் கூட்டத்திற்குச் செல்லக் கிளம்பியவனை இப்படித் தாமதப்படுத்தவும் அவள் விரும்பவில்லை. வெளியே நின்றிருக்கும் காரிலிருந்து ஸெபாஸ்தியனும், பெருமாளும் கூச்சல் போட்டனர். மீண்டும் பெருமாள் உள்ளே வந்து விடுவானோ என்ற பயத்தில், ''அண்ணா, இப்படி நீ சிறு விஷயத்திற்கெல்லாம் வேதனைப்படுவது எனக்குப் பிடிக்கவில்லை. நான் இந்தி வாத்தியாரிடம் அப்படி என்ன கேட்டு

விட்டேன். பரீட்சை பாஸ் செய்தவுடன் ஒரு வேலை தேடித்தருமாறு கேட்டேன்... அதில் என்ன தவறு? அம்மா என்னிடம் என்ன கூறியிருக்கிருள் தெரியுமா?...'' என்று முடிப்பதற்குள் வெளியேயிருந்து நண்பர்கள் குரல் அதிகமாகியது.

கந்தவேலன் ஏதும் பதில் பேசாமல் அவர்களுடன் வெளியேறினன் கார் உர் எனச் சப்தமிட்டுக் கிளம்பியபோது கந்தவேலன் இதயமும் வேதனையால் உருமியது. அவன் மனம் சஞ்சலத்தால் காற்ருடிபோல் அலேந்தது. நண்பர்கள் கேலியாகப் பேசி வருவதுகூட அவன் காதுகளில் விழவில்லை.

''உன் அண்ணு பயந்த சுபாவம் போலிருக்கிறது'' என்று சௌந்தரவல்லி அம்மையார் கேட்டாள். அவள் மனத்தில் கந்தவேலனுடைய தோற்றமே வட்டமிட்டுக் கொண்டிருந்தது.

''இல்லை டீச்சர்; என் அண்ணுவைப் பயந்த சுபாவமுடையவன் என்று கூறிவிட முடியாது. பிறர் வேதனைபட்டால் அவன் சகிக்கமாட்டான். என் மீது அவனுக்கு உயிர்'' என்ருள் மான்விழி. பிறகு தொடர்ந்து, ''எனக்கு நிச்சயமாக வேலையொன்று வாங்கித் தர முயல்வீர்களா?'' என்ருள். சௌந்தரவல்லி ஏதேதோ திட்டமிட்ட வண்ணம் யோசனையிலிருந்தவள் ''சரி! அப்படியே செய்கிறேன்'' என்ருள்.

''என் வீட்டிற்குத்தான் ஒருநாள் வாயேன். ஒருநாள் என்ன இன்றுதான் வாயேன்'' என்று அழைத்தாள் சௌந்தரவல்லி.

''எனக்குப் பரீட்சைக்குப் படிக்கவேண்டுமே''

''பரீட்சை என்ருல் நாள் முழுவதும் படிக்க வேண்டுமா? மாலையில் காற்ருடப் போய் வரலாமே. நான் திலகர் பூங்கா அருகே வந்திருக்கிறேன் நீ அங்கு வந்துவிடு. பிறகு நான் உன்னை வீட்டிற்கு அழைத்துச் செல்கிறேன்'' என்ருள். மான்விழியும் தலையசைத்தாள்.

★

கந்தவேலன் கூட்டம் முடிந்த பிறகு நண்பர்களுடனே பொழுதைப் போக்கினன். பிறகு மாலை ஐந்து மணிக்கு அவர்களிடமிருந்து விடைபெற்றுக்கொண்டு வீட்டிற்கு நடந்து சென்று கொண்டிருந்தான். அப்போது லாண்டிரி கடை வைத்திருக்கும் தம்புசாமி எதிரே வந்தான்.

''என்ன தம்பி அப்புறம் வரவே இல்லையே'' என்று கேட்டான். பாக்கிப் பணம் கொடுக்கத்தானே கேட்கிருன் அவன் என்று எண்ணிய கந்தவேலன்'', இன்னும் பணம் வரவில்லை, வந்தவுடன் கொடுக்கிறேன்'' என்ருன். தம்புசாமி சிரித்தவாறு, ''அதற்கில்லை தம்பி, உங்களிடம் ஒரு விஷயம் பேச வேண்டும். அதற்காகத்தான் கூப்பிட்டேன்'' என்ருன். தம்புசாமிக்கு என்னிடம் என்ன விஷயம், அவனேடு அதிகப் பழக்கமும் கிடையாது. லாண்டிரித் துணி இதுவரை வேலைக்காரனே வாங்கி வந்து கொண்டிருந்தான். இப்போது சிறிது காலமாகவே அவன் போட வாங்கப் போகிருன் அதற்குள் என்ன பழக்கம்?

''தம்பி புதுசு வாங்கிப் போட்டுண்டு போராப்பலே இருக்கு. தப்பா நெனைச்சுக்காதே. உங்கள் குடும்பத்தை எனக்கு இருபது

வருஷமா தெரியும். உங்கள் கடைகள் கடைத்தெருவிலே நல்ல ஷகர்லே இருக்கு. அதற்கு நியாயமா ஒவ்வொன்றிற்கும் நூறு ரூபா வாடகை வர வேண்டும். இங்கு இருப்பவர்கள் முப்பதுதான் தருகிறார்கள்.''

''என்ன முப்பதா?''

''ஆமாம்; அதுவும் உங்க அப்பா நாலு மாசம் அஞ்சு மாசம்னு முன் பணமே வாங்கிடறார். அதனாலே அவுங்கக் கூடுதலா என்லிக்கும் தர யோசனை செய்யுறதில்லே.''

''ஓகோ!''

''அதான்; உங்க காதிலே போட்டு வச்சேன். அதோபாரு உங்க அப்பாரு அந்தப் பொம்புளையோட போறாரு'' என்று தம்புசாமி சுட்டிக் காட்டினான். அவன் காட்டிய திசையில் கண்ணபிரான் ஓட்டிச்செல்லும் கார் திரும்பிக்கொண்டிருந்தது. கந்தவேலன் துணிந்து அந்தக் காரில் போகிறவர்களைப்பற்றிக் கேட்க விரும்பினான்.

''அது யாரு கார்லே?'' என்று வார்த்தை வந்தும் வராமலும் கேட்டான்.

அது யாரோ தம்பி; எனக்கேன் வம்பு. 'அது யாரோ பாட்டுச் சொல்லித்தர பொம்புளையாம். திலகர் பூங்கா அருகே வீடு' என்றான்.

கந்தவேலன் அந்தப் பாட்டுக்காரி வீட்டைப் போய்ப்பார்த்துவிட வேண்டும் என்று முடிவு செய்தான். வேகமாக நடந்தான்.

மாலை மணி ஐந்து. மான்விழி காலையில் குறிப்பிட்டபடி சௌந்தர வல்லி வீடு நோக்கிக் கிளம்பினாள். குறிப்பிட்ட நேரத்தில் சௌந்தர வல்லி பூங்காவின் வாயிற் கதவருகே காத்திருந்தாள். இருவரும் மெல்ல பேசியபடி நடந்து சென்றனர்.

சௌந்தரவல்லி வசிக்கும் தெருவில் திரும்பியபோது கந்தவேலன் ஒவ்வொரு வீடாக அண்ணாந்து பார்த்தவண்ணம் பாட்டுக்காரி வீடு எது என்று கண்டு பிடிப்பதற்காக மெல்ல நடந்தான். சௌந்தரவல்லியின் கண்ணில் கந்தவேலன் செல்வது தெரிந்துவிட்டது. காலையில் சிறிது நேரமே பார்த்திருந்தபோதிலும் அவன் உருவத்தை அவள் மறக்கவில்லை. மான்விழியும் தன் அண்ணன் செல்வதைக் கண்டுவிட்டாள். 'கந்த வேலா' என்று கூப்பிட வாயெடுத்தவளைச் சௌந்தரவல்லி தடுத்து ''இப்போது கூப்பிடாதே உன் அண்ணன் என்ன அவசர விஷயமாகப் போகிறானோ'' என்றாள்.


கந்தவேலன் ஒரு வீட்டின் எதிரே நின்றான். அந்த வீடுதான் மரகதத்தின் வீடு.

''டீச்சர் என் அண்ணன் அங்கு நிற்கிறானே! அதோ உள்ளேபோகிறானே யார்வீடு டீச்சர்? உங்கள் வீடு எங்கே?'' என்றாள் மான்விழி.

''என் வீடு இந்தத் தெருக்கோடி. அவன் நுழையும் வீடு பாட்டு வாத்தியார் மரகதம் வீடு அவள்......'' என்று கூற வாயெடுத்த சௌந்தர வல்லி மான்விழியின் நிலைகண்டு திடுக்கிட்டாள்.

''யார் வீடு மரகதம் வீடா? என் அண்ணன் அங்கு ஏன் செல்கிறான்?'' என்று கேட்டவளுக்கு ஏதோ தலை சுற்றுவது போலிருந்தது. சௌந்தரவல்லியின் தோள்மீது சாய்ந்து விட்டாள்.

(தொடரும்)



# முதல் தெய்வம்

முன் ஒரு காலத்தில் சிற்றரசன் ஒருவன் அரசாண்டு வந்தான். அவனுக்கு வயதாகிவிட்டபடியால் தள்ளாமையினாலும், கண் பார்வை குறைவாலும் துன்பப்பட்டுக்கொண்டு இருந்தார். அவருக்கு மூன்று குமாரர்கள் இருந்தார்கள்.

ஒரு சமயம் அரச குமாரர்கள் மூவருக்குள் ஒரு சிறு சச்சரவு ஏற்பட்டது. அது முதலில் சிறிய விஷயத்தில் தொடங்கி பிறகு கடைசியில் விபரீதமான நிலைமைக்கு வந்தது. அதாவது கடவுளைக் காணும் வழி என்ன? யார் முதலில் கடவுளைக் காண்கிறார்கள்? என்பதுதான் அந்த விஷயம். மூவரும் ஒன்று கூடி நன்கு ஆலோசனை செய்த பிறகு, காட்டிற்கு சென்று கடும்தவம் புரிந்து கடவுளைக் காணவேண்டும் என்ற முடிவுக்கு வந்தார்கள்.

அதன்படியே தள்ளாத வயதை அடைந்துள்ள, தன் பெற்றோர்களை விட்டுவிட்டு மூவரும் காட்டை நோக்கி கடும்தவம் செய்து கடவுளைக் காண வேண்டும் என்ற நோக்கத்துடன் சென்றார்கள்.

காட்டை அடைந்ததும் அங்கு ஒரு முனிவர் அமர்ந்திருப்பதைக் கண்டார்கள். அவரைக் கண்டதும் அரச குமாரர்கள் அவருடைய யோசனையை கேட்போம் என்று எண்ணி அம்முனிவரை அணுகி, முனிவரே நாங்கள் அரச குமாரர்கள். எங்களுக்குள் ஒரு சிறு சச்சரவு ஏற்பட்டுள்ளது. அதாவது யார் முதலில் கடவுளைக் காண்கிறார்கள்? என்பது. "கடவுளைக் காணவேண்டிய மார்க்கத்தை எங்களுக்குக் கூற வேண்டும்'' என்று வேண்டிக் கொண்டார்கள்.

இதைக்கேட்ட முனிவர், ''அரச குமாரர்களே, கடவுளைக் காண இங்கு ஏன் வந்தீர்கள்? கடவுளுக்கும் மேலான முதற்கடவுள் உங்கள் நாட்டிலேயே இருக்கிறார். அவரைக் காணுங்கள் அவருடைய அன்பையும், ஆசியையும் பெறுங்கள்'' என்றார்.

"அப்படியானால் தவத்தின்மூலம் கடவுளைக் காண முடியாதா? அன்பின் மூலம்தான் கடவுளைக் காண முடியுமா?" என்றான் ஒரு அரசகுமாரன்.

"ஆம், ஒருவனுடைய மனப்பூர்வமான அன்பைப்பெற வேண்டும். அதுதான் கடவுளைக் காட்டும் வழி அன்பே கடவுள். நான் வருகிற மாதம் உங்கள் தேசத்தில் சஞ்சாரம் செய்வேன். அப்பொழுது அங்கு நீங்கள் பெற்றிருக்கும் அன்பு எப்படி இருக்கிறது? என்பதைக் காண்கிறேன். பிறகு மாதக்கடைசி நாளன்று சபைக்கு வந்து தீர்ப்பு கூறுகிறேன், சென்று வாருங்கள்" என்று கூறினார்.

அரச குமாரர்கள் மூவரும் மறுபடியும் தம் தேசத்திற்குத் திரும்பினார்கள். அங்கு அரசனும் அரசியும் வயோதிகத் தன்மையினால் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார்கள். இதைக்கண்ட முதல் இரண்டு குமாரர்கள், அவர்களைப் பொருட்படுத்தாது தங்களுக்கு வேண்டிய பொன், மணி முதலியவைகளை சேகரிப்பதில் கண்ணும் கருத்துமாக இருந்தார்கள். வேண்டிய பொருள்களை எடுத்துக்கொண்டு இருவரும் ஆளுக்கொரு குதிரையில் ஏறி வெவ்வேறு திசையை நோக்கி விரைந்து சென்றார்கள்.

ஆனால் மூன்றாவது குமாரன் தன்னுடைய பெற்றோர்கள் படும் துயரத்தைக்கண்டு வருத்தமடைந்தான். இப்படித்துயர்படும் தன் பெற்றோர்களின் துயரத்தை துடைப்பதைக் காட்டிலும் கடவுளைக் காண்பது பெரிய காரியமாக அவன் கருதவில்லை. ஆகையால் கடவுளைக்காண வேண்டும் என்ற எண்ணத்தைக் கைவிட்டான். துன்பப்படும் தன் பெற்றோர்களுக்கு அன்று முதல் பணிவிடை செய்ய முற்பட்டான். அவர்களுக்கு வேண்டுவதை செய்வதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்து வந்தான். இதைக்கண்ட பெற்றோர்கள் அவனிடத்தில் அளவு கடந்த அன்பை செலுத்தினார்கள். அவனை மனமார வாழ்த்தினார்கள்.

பொன்னும், மணியும், பொருளும் எடுத்துச் சென்ற முதல் இரண்டு அரசகுமாரர்களும் எண்ணற்ற சத்திரங்களையும், சாவடிகளையும் கட்டினார்கள். கோவில்களை புதுப்பித்தார்கள் மற்றும் மக்களுக்கு வேண்டிய எல்லாவிதமான நன்மைகளையும் செய்தார்கள். இவ்வளவு நன்மைகளை செய்த போதிலும் சிலர்தான் மனமார வாழ்த்தினார்கள். பலர் "பொருள் இருப்பதால் அல்லவா இவ்வாறான காரியங்கள் செய்கிறார்கள். பொருள் இருந்தால் யாரால் தான் இந்த நன்மைகளைச் செய்ய முடியாது" என்று கூறினார்கள். இவ்வாறு பலர் பலவிதமாக கூறலானார்கள்.

முனிவர் முதல் இரண்டு அரசகுமாரர்கள் சென்ற வீட்டிற்கு எல்லாம் சென்று மக்களின் மனப்பான்மையை அறிந்துக்கொண்டு குறிப்பிட்ட நாளில் அரச சபைக்கு வந்தார்.

அங்கு அரசன் கொலு வீற்றிருந்தான். அவன் அருகில் மூன்று குமாரர்களும் நின்று கொண்டிருந்தார்கள். முனிவரைக் கண்டதும் அவருக்கு வணக்கம் தெரிவித்து வரவேற்று ஆசனத்தில் அமரும்படி செய்தார்கள்.

முதல் அரசகுமாரன் தான் செய்த தருமங்களையும், மற்றும் மக்களுக்கு செய்த நன்மைகளையும் கூறி தன் மீது மக்கள் அளவு கடந்த அன்பை வைத்திருக்கிறார் என்று கூறினான். அதே

போன்று இரண்டாவது அரசகுமாரனும் தான் செய்த தருமங்கள் மற்றும் பல நற்காரியங்களைப்பற்றி கூறிவிட்டு தன் மீதுதான் மக்கள் மனப்பூர்வமான அன்பை செலுத்தி இருக்கிறார்கள் என்று கூறினான். ஆகையால் அன்பைப்பெற்ற எங்களுக்குக் கடவுளைக் காணும் வழியைக் கூறவேண்டும் என்று வேண்டிகொண்டார்கள்.

இதையெல்லாம் கேட்டபிறகு முனிவர் மூன்றாவது அரசகுமாரனை நோக்கி. "ஏனப்பா, உனக்கு கடவுளைக் காணவேண்டும் என்ற ஆசையில்லையா? நீ மட்டும் ஏன் வெளியே சென்று தானதருமங்களை செய்து மக்களின் அன்பைப் பெறக்கூடாது?" என்றார்.

"முனிவரே, எனக்கு என் வயதான பெற்றோர்களுக்கு பணிவிடை செய்யவே நேரம் போதவில்லையே. அப்படி இருக்கையில் வெளியே சென்று மக்களின் அன்பை எப்படி பெறமுடியும். என் பெற்றோர்களிடம் பெறும் அன்பே எனக்குப் போதும். கடவுளைக் காண்பதைக் காட்டிலும் பெற்றோர்களின் துயரத்தைத் துடைத்து அவர்களின் மனமார்ந்த ஆசியையும் அன்பையும் பெறுவதையே பெரிதாகக் கருதுகிறேன்" என்று பணிவுடன் விடையளித்தான்.

இதைக் கேட்ட முனிவர், முதல் இரண்டு அரசகுமாரர்களை நோக்கி, "பார்த்திர்களா! பெற்றோர்கள் அன்பைபெற முடியாத நீங்கள் மற்றவருடைய அன்பை பெறுவதில் யாதொரு பயனுமில்லை. உங்களுடைய பெற்றோர்கள்தான் முதல்தெய்வம். அத்தெய்வத்தை தொழுது அதன் ஆசியையும அன்பையையும் பெறவேண்டும். அத்தெய்வத்தின் அன்பைப்பெற முடியாத நீங்கள் எக்கடவுளையும் காண முடியாது. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் அல்லவா. அவர்களுடைய மனம் கோணாது அவர்களுக்கு வேண்டிய பணிவிடைகளை செய்து அவர்களுடைய அன்பை பெற வேண்டும். அப்படிப் பெற்றவன்தான் கடவுளைக் காண முடியும்" என்றார்.

இதைக்கேட்ட முதல் இரண்டு அரசகுமாரர்களும் வெட்கத்தால் தலை குனிந்துக்கொண்டார்கள்.

**"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்"**

புத்தக விமர்சனம்

# அரிய நூல்

பேராசிரியர் சாம்பமூர்த்தி அவர்களை சங்கீத உலகில் அறியாதார் எவரும் இருக்க இயலாது. கர்நாடக சங்கீதத்திற்கு அவர் செய்து வரும் சேவை மகத்தானது. அவர் சிறந்த ஆராய்ச்சியாளர். சென்னை சர்வகலாசாலை சங்கீதப் பிரிவு தலைவராக அங்கம் வகிப்பவர். வெளிநாட்டினர் நமது சங்கீதத்தின் சிறப்புகளைப்பற்றி அறியச் செய்த பெருமை இவரைச் சாரும். இவர் இயற்றியுள்ள சங்கீத நூல்கள் ஒவ்வொன்றும் அற்புதமானவை. ஆராய்ச்சி பூர்வமானவை. அவைகளைச் சேர்ந்ததாக இவரது தென்னிந்திய சங்கீதம், சங்கீத வித்வான்கள் அகராதியாகும். இந்நூலை பல பாகங்களாகப் பிரித்து வெளியிட்டு வருகிறார். சமீபத்தில் G யிலிருந்து K வரை உள்ள வார்த்தைகள். அதாவது பெயர்கள் பற்றிய, இரண்டாம் பாகம் வெளி வந்துள்ளது. இசைபற்றிய குறிப்புகள், இசைவல்லுநர் பற்றிய வரலாறுகள், வாத்தியங்கள் பற்றிய தகவல்கள், சங்கீதம் பற்றிய தகவல்கள், சங்கீதம் பற்றிய சிற்பக் குறிப்புகள் உதாரணமாக காலக்ஷேபம் என்ற தலைப்பால் ஹரிகதையின் விளக்கம் பிறந்தவரலாறு அதைச் செய்யும் முறை. அதில் பாண்டித்யம் நிறைந்து விளங்கியவர்கள் இவ்விதம்தகவல்கள். கச்சேரி என்றால் கச்சேரிகள் என்ன என்ன, கச்சேரிகளின் அங்கங்கள் யாவை, வாய்ப்பாட்டாக இருந்தால் ராக ஆலாபனை கிருதி பாடல், பல்லவி, இத்யாதி எப்படிப் பாடப்படவேண்டும் பக்கவாத்தியக்காரர்கள் அனுசரிக்க வேண்டியமுறைகள் யாவை, சபையின் லக்ஷணம் இத்யாதி விவரங்கள் உள்ளன. ஜலதரங்கம் என்றால் அவ்வாத்யம் பற்றிய தகவல்கள் கும்மி என்றால் கும்மி பற்றிய பலவகை தகவல்கள் இவ்விதம். ஒன்றும் விடாமல் பூரா தகவல்களோடு அளிக்கப் பட்டுள்ளன. இதைப் படிக்கையிலே ஒரு மனிதர் இவ்வரிய சாதனையை எப்படிச் செய்து முடிக்க முடியும் என்று பிரமிப்பு உண்டாகிறது. சங்கீத கல்லூரிகள், வித்தியார்த்திகள், பொது ரஸிக மக்கள் யாவருக்கும் ஒரு அரிய பொக்கிஷமாகும், இந்நூல். அங்கங்கே ஆர்ட் காகிதத்தில் படங்கள் உள்ளன. தலை சிறந்த வித்வான்கள் வாத்தியங்கள் சிற்பங்கள் முதலிய படங்களைத் தேடித் தந்திருக்கிறார். விலை ரூ. 1. தாராளமாகக் கொடுக்கலாம். புத்தகத்தின் பொது அமைப்பு, அச்சு அமைப்பு பிரமாதம். இந்தியன் மியூஸிக்பப்ளிஷிங் ஹவுஸ் மதராஸ்-1ன் வெளியீடு இந் நூல்.

★

"மாலா"

கலை இலக்கிய மாத இதழ்.

தனிப்பிரதி அணா 0—4—0

வருட சந்தா ரூ 3—0—0

மானேஜர் 'மாலா'

சென்னை-18.

# துதி பாடல்

## மைசூர் ஸ்ரீ வாஸுதேவாச்சார் கீர்த்தனை

——★★——

ராகம்—நாயகி　　　　　　　　　　　　　　　　தாளம்—சதுஸ்ர திரிபுடை;

ஆ. ஸரிமபதநீ த பஸ்
அ. ஸ் நீத பமரி காரிஸ　　　　(22-வது மேளஜன்யம்)

பல்லவி :— நீ பாதமுலனு நம்மிதி நய்யா
3
ஸ்ரீ பார்த்தஸாரதே நீவே கதியனி　　　　(நீ பாத)
2

அனுபல்லவி :— நா பா ஜால மெல்ல தீர்ச்சி
3
கா பா டு கெவருன்னு ரய் யா　　　　(நீ பாத!
3

சரணம் :— வாஸுதேவ வனஜாயத லோசன
3
வாஸுகி சயன வர க க வாஹன
2 3
நீ ஸாடி தைவ மெவரனி கான
3
ஓ ஸாது ஜன ஜீவன நிஜமுகா　　　　(நீபாத)
3 3 3 3

## வாஸுதேவாச்சார், திருவல்லிக்கேணியில் எழுந்தருளியிருக்கும்

## அர்த்தம் பார்த்தசாரதியின் மேல் புனைந்த கீர்த்தனை

---

பல்லவி :— உன் பாதங்களையே நம்பினேன் ஐயா! ஓ பார்த்தசாரதி
நீயே கதி என்று (உன் பாதங்களை)

அனுபல்லவி :— என்னுடைய பாப ஸமூகத்தை யெல்லாம் தீர்த்து, காக்க
யார் இருக்கிறார்கள் ஐயா பார்த்தசாரதியே.

சரணம் :— வாஸுதேவனே, தாமரைப் புஷ்பத்தின் இதழ் போன்ற நீண்ட
கண்கள் உள்ளவனே, ச்ரேஷ்டமான கருடனை வாஹனமாகக்
கொண்டவனே, உனக்குச் சமமான தெய்வம் யாரையும்
காணேன். ஸாது ஜனங்களுக்கு உயிராய் விளங்குபவனே,
உண்மையாக உன் பாதங்களை நம்பினேன்.

ராகம் : நாயகி. தாளம்: சதுஸ்ர திரிபுடை.

| | | | |
|---|---|---|---|
| | i | 0 | 0 |
| பல்லவி :— | ... ... நிதபா ......... மபா தபா | 1 மரிரிக ரீஸா | 1 ...நிஸரி ஸரீ |
| | ... ... நீ பா ......... தமு லனு | 1 நம்... மிதி. | 1 ...நய் ... யா |
| | ... ... ரிஸ ரிமபத நிநிதா பதாப | 1 த ரிஸ் நிஸ்ா பத | 1 தநீ தபா ரிம |
| | ... ... ஸ்ரீ பா ... ர்த்த ஸா ... | 1 ர.. தே ... நீ | 1 வே. கதி. ய.. |
| அனுபல்லவி :— | ... ... தப ஸ்ா நிரீஸ்ா நிஸ் ரிஸ | 1 ரிப் ம்ரரிரி ரிம | 1 ஸ்ரீஸ், ஸா |
| | ... ... நாபா...ப ஜா ... | 1 ல மெ. ல்ல | 1 தி... ர்ச்சி |
| | ரீஸ்ா ,, நி ஸ்ா ப பா தா | 1 பதப தநீ தப | 1 மரிக கரிஸரிம |
| | கா பா ... ... டு ட | 1 கெ... வ. ரு | 1 ன்று ர |
| | ப த(நீ பாத முலனு நம்மிதி நய்ய) ய்ய | | |
| சரணம் :— | ...ககரிஸ ரிம பம பா தபமப | 1 தா நீ தாபா | 1 மரிககரீ ஸா |
| | ...வா. ஸு தே......வ வ. ன | 1 ஜா... ய. த. | 1 லோ...சன |
| | ...ரிபா மமரி மரிககரீ ஸா | 1 ரிமா ப தா | 1 நீ ,. தா பா |
| | ...வா ஸுகி ச...ய ன | 1 ... வர . கக | 1 வா...ஹ ன |
| | ...தபஸ்ா, நிரீஸ் நிஸ் ரிஸ | 1 ரீ ரீ ப்ராம் ரீ | 1 மரி ரிம ரீஸ்ா |
| | ...நீ ஸா......டி தை... | 1 வ மெவ ரனி | 1 கா.........ன, |
| | ...ரீ ஸ்ா நிஸ்ா பபா தப | 1 தா நீ, தபமரி | 1 கக ரிஸ ரிமாப |
| | ...ஆஸா......து ஜ | 1 ன ஜீ......வ, | 1 ண......நிஜமு |
| | தா (நீ பாதமுலு நம்மதி நய்ய) கா | | |

சென்னை வெலிங்டன், பிரபாத்

மற்றும் தென்னுடெங்கும் வெற்றிகரமாக

ஓடிக்கொண்டிருக்கிறது.



ஜுபிலி பிலிம்ஸ்

கல்கியின்

# பார்த்திபன் கனவு

டைரக்ஷன் : யோகானந்த்




## மதுரை மணி அய்யர் கச்சேரி

சமீபத்தில் சென்னை ரேடியோ நிலையத்திலிருந்து சங்கித கலாநிதி மதுரை மணியவர்கள் பாடினார்கள். அவருக்கு பக்க சகாயமாக திருவாலங்காடு சுந்தரேசய்யரும் ராமநாதபுரம் முருக பூபதியும் அமைந்தனர். அன்று கச்சேரி ஏ 1. அன்று தேர்ந்தெடுத்த உருப்படிகளைப் பாடினார். அன்று ரீதிகௌளையில் உள்ள 'தத்வமறிய தரமா' என்ற பாபநாசம் சிவன் கிருதியுடன் கச்சேரி தொடங்கியது. அன்று அவரது 'யோசனா கமலா லோசனா' வைக் குறிப்பிட வேண்டும். அவரது பியாகடைராக ஆலாபனைகள் நேர்த்தியாயிருந்தது. அதில் தீக்ஷிதரது, 'தியாகராஜாய நமஸ்தே' வைவழங்கினார் அதில்கண்ட ஸ்வர பிரஸ்தாரமும் நேர்த்தி. தோடி ஆலபனையும் 'கொலுவமரகத'வுமா மிக சுகமாயமைந்தது.

## திருவெண்காடு சுப்ரமணியம்

சமீபத்தில் திருவெண்காடு சுப்ரமண்யம் அவர்களது நாயனக் கச்சேரி சென்னை நிலையத்திலிருந்து ஒலி பரப்பப்பட்டது. அவருக்கு தவுலில் நாச்சியார் கோயில் ராகவப் பிள்ளை அமர்ந்தார். சுப்ரமண்யம் 'அவர்களது 'ரகுவர நன்னு வைக்' குறிப்பிட வேண்டும். சங்கராபரண ராக ஆலாபனை பிரமாதமாயமைந்தது. மந்திர ஸ்தாயி சஞ்சாரங்கள் ரம்மியமாயமைந்தன. அதில் அமைந்த பல்லவியும் ராகமாலிகையில் வந்த ஆனந்த பைரவி, வஸந்த, கானடா முதலியவைகளும் கச்சிதம் திருப்புகழும் நேர்த்தி.

## டி. கே. ரங்காச்சாரியாரின் அமோக கானம்

ஸ்ரீகிருஷ்ணகான சபையின் ஆதரவில் ஸ்ரீ டி. கே. ரங்காச்சாரியார் ஸ்ரீ சேது ராமய்யா வயலினுடனும் வேலூர் ராமபத்ரன் மிருதங்கத்துடனும் செய்த கச்சேரி மிக அமோகமாய் அமைந்தது. ஸ்ரீ டி. கே. ரங்காச்சாரியார் முதல் வரிசை வித்வான் தான். கடந்த 20 வருடங்களாகவே பிரமாதமாய்ப்பாடி வருகிறார். தென் ஜில்லாக்களில் அவருக்கு உள்ள செல்வாக்கு அதிகம். காலஞ் சென்ற பொன்னையாப் பிள்ளை, டைகர் வரதாச்சாரியார் முதலியவர்களுடன் தொடர்பு கொண்டவர்தான். சென்னையில் இவரது கச்சேரிகளை அடிக்கடி கேட்க இயலாமல் இருப்பது ஆச்சர்யம்தான். தகுந்த நபருக்கு சந்தர்ப்பம் அளித்த ஸ்ரீ கிருஷ்ணகான சபையினரை எவ்வளவு வேண்டுமானாலும் பாராட்டலாம். இது போல் அவர்கள் சாத்தூர், மதுரை சோமசுந்தரம் போன்றவர்களுக்கு அவ்வப்போது சந்தர்ப்பம் அளித்து

வருகிறுர்கள். அவர்கள் நன்றி பாராட்டத்தக்கவர்கள்.

அன்று பாடகர் காம்போதி, வர்ணத்துடன் கச்சேரியைத் துவக்கினுர். அப்போதிலிருந்தே கச்சேரி களை கட்டியது 'எந்த ராமஹானு பாஷ'வை வழங்கினுர். பிறகு வந்த பந்துவராளி உருப்படி 'ஸாரசாக்ஷ' கச்சிதமாயமைந்தது. பிலஹரி ராக ஆலாபனை பிரமாதம். ராக பூரிதமான பிடிகள் எழிலுடன் அமைந்தன. அதில் 'இந்தகன்னுனந்த'வை வழங்கினுர். அன்று அவர் பாடிய ஸ்ரீரஞ்சனி ரஸிகர்கள் காதில் ஒலித்துக் கொண்டேயிருக்கும். பர்வதராஜகுமாரி என்ற கிருதியும், பல்லவிக்கு ஸ்வரபிரஸ்தாரமும் பிரமாதம். அவரது தோடி விவகார பூர்வமாய் ராக பாவம் சொட்டும்படி அமைந்தது. அதில் கந்தநுவாரிகியை வழங்கினுர். தத்வமெருகதரமா உருப்படியும் ஜோர். ஷண்முகப்ரியா ராக ஆலாபனை பல்லவியும் பாராட்டும் வகையிலமைந்தது. ராக ஆலாபனையிலே ரஸிகர்களை மெய்மறக்கச் செய்தார் ஜாவளி தில்லானு காரம் உண்டு. சேதுராமய்ய அசல் பக்க சகாயமாக வாசித்தார். வேலூர் ராமபத்ரனின் அனுசரிப்பு கனகச்சிதம். மொத்தத்தில் ஒரு சிறந்த கச்சேரியைக் கேட்ட திருப்தியுடன் வீடு திரும்பினர் ரஸிகர்கள்.

## ஷஷ்டியப்த பூர்த்தி

பிரபல பிடில் வித்வான் லால்குடி ஸ்ரீஜெயராமனின் தகப்பனுரது சஷ்டியப்த பூர்த்தி சமீபத்தில் கொண்டாடப்பட்டது. வெகு விமரிசையாக நடந்தது வைபவம். முசிரி, ஜி. என். பி போன்ற வித்வான்கள் வந்திருந்தனர். எல்லார் வி. த. ரா. ரா போன்ற எழுத்தாளர்கள், ஆசிரியர்கள், நண்பர்களும் விஜயம் செய்தனர் மேற்படி வைபவத்திற்கு. அவர்கள் பல்லாண்டுகள் வாழ்ந்து தன் தமையனது மேலும் மேலும் வளரும் புகழ் கண்டு களிக்க வேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கிறேம். —த. ரா. ரா

---

### அட்டைப் படம்

ஆடி மாதத்தில் காவேரிப் பெருக்கெடுத்து ஓடுவது கண் கொள்ளாக் காட்சியாகும். மாந்தருக்குப் பலவித நலங்கள் பயக்கும் காவேரி அன்னையை இம்மாதத்தில் மக்கள் வழிபடுவது வழக்கம். ஆடி பதினெட்டாம் நாள் மங்கையரிருவர் காவேரிக் கரையில் குதூகலத்துடன் 'சித்திரா அன்னம்' உண்டு களிப்பதை சித்தரித்துள்ளார் நமது சைத்ரீகர்.

# வேடிக்கைக் கணக்குகள்

45—ல் 45ஐக் கழித்தால் 45 மீதி வரும். எப்படி?

ஒரு குளம். அதில் சில தாமரை இலைகள் இருக்கின்றன. சில கிளிகள் பறந்து வந்து ஒரு இலையில் ஒரு ஜோடியாக உட்கார்ந்தன. அப்பொழுது ஒரு இலை மீதிப்பட்டது. அதே கிளிகள் ஒரு இலைக்கு ஒவ்வொன்றாக உட்கார்ந்தது. ஒரு கிளி மீதிப்பட்டது. பறந்து வந்த கிளிகள் எத்தனை? குளத்தில் உள்ள இலைகள் எத்தனை?

20 தோசைகளை 20 பேருக்கு பங்கிட்டுக் கொடுக்கவேண்டும். ஒரு ஆணுக்கு 3 தோசைகள், ஒரு பெண்ணுக்கு 2 தோசைகள், ஒரு குழந்தைக்குப் பாதித்தோசை. எத்தனை ஆண்கள்? எத்தனை பெண்கள்? எத்தனை குழந்தைகள் சாப்பிடலாம்?

ஒரு ஔவையார்க் கிழவி நூற்று மூன்று பருத்திக்கண்டுகள் வைத்தாள். அதை அண்ணன், தம்பி 2 பேருக்குச் சமமாகப் பிரித்துக்கொடு

லலிதா, பத்மினி, ராகினி 3 பேர்கள் தனி இடத்தில் நாட்டியம் ஆடுகிறார்கள். நாட்டியம் பார்க்க நம் கையில் உள்ள பணத்தில் பாதி கொடுக்க வேண்டும். அவர்கள் ஒரு ரூபாய் திருப்பிக் கொடுக்கிறார்கள். நாட்டியம் பார்த்த பின் 2 ரூ. மீதி இருக்கிறது. கொண்டுபோனது எத்தனை ரூபாய்?

1000 ரூபாயை 10 பைகளில் போட்டு கட்டிவிடு. ரூபாய் எத்தனை கேட்டாலும் பையை உடைக்காமல் கொடுக்க வேண்டும் ஒவ்வொரு பையிலும் எத்தனை ரூபாய்கள்?

Mg. Editor & Publisher: M. D. Raman, Southern Avenue, Alwarpet Madras-18
Edited and Printed by S. S. Sarma at Sri Sudarsan Press,
111/33, (Congress Bldgs) Teynampet, Mount Road, Madras-6.
Associate Editor: T. R. Rajagopalan (Tha. Ra. Ra.)

Nutrine மிட்டாய்கள்




**சுவை மிகு நியூட்ரைன் டாபிகள்**

நீங்கள் ஆசையுடன் வைத்துக்கொள்ள விரும்பும்
அழகான டின்களில் கிடைக்கின்றன.

நியூட்ரைன் டின்களில் நிறைய **டாபிகள்** கிடைக்கின்றன.
காரணம், டின் முழுவதும் டாபிகளால் நிரப்பப் படுகின்றன.
அரைகுறையாக நிரப்பப்படுவதில்லை.

---

**நியூட்ரைன் கன்பெக்ஷனரி கம்பெனி (பி) லிட்.,**
**சித்தூர், ஆந்திர பிரதேசம்**

WE CLAIM

There has never been and there will never be a second

**VYJAYANTHIMALA**

so dynamically dramatic and so excitingly beautiful as she is in



RAWAL FILM'S

# College Girl

with College Boy **SHAMMI KAPOOR**

... A Film EVERY GIRL will be proud of

... A show EVERY BOY will run after

*Music* . **Shanker-Jaikishen.**

*Direction* : **T. Prakash Rao**

*Screenplay, Dia'ogues & Lyr* **Rajinder Krishna**

SRI SUDARSAN PRESS. MADRAS-6.